திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

CONNEMARA PUBLIC LIBRARY
7 - FEB 1965
MADRAS

ஸ்ரீ இராமாநுஜர், ஸ்ரீபெரும்பூதூர்

மாலை 8] விசுவாவசு தை—பிப்ரவரி 1966 [மணி 5

சென்னை அரசாங்க அறநிலையப்
பாதுகாப்புத் துறை வெளியீடு



திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள், திருவிடைமருதூர் ஸ்ரீமகாலிங்க சுவாமி தேவஸ்தான நிதியில் இருந்து, திருக்குற்றாலம் ஸ்ரீ பராசக்தி பெண்கள் கல்லூரிக்கு நமது **அறநிலைய ஆணையர்** அவர்களிடம், ரூபா ஒரு லட்சத்து மூவாயிரத்து நூறு மதிப்புள்ள (103100) அரசினர் கடன் பத்திரங்களை, நன்கொடையாக வழங்கியருளுதல் (10-1-66)

பொருள் அடக்கம்

1. உமாபதி சிவம்
2. விடை தெரியுமா ?
3. விடை விளக்கம்
4. எங்கு எழில் என் ஞாயிறு ?
5. சிவஞான சித்தியார்
6. சிவஞான போதம்.
7. வைஷ்ணவ குருபரம்பரை
8. அழகிய சிற்றம்பலம்
9. உள்ளுறை பொருளாராய்ச்சி.
10. ஒன்றெழி பொதுச்சொல்
11 மதிப்புரை

ஆண்டுச் சந்தா ரூ. 10/- **தனி இதழ் விலை ரூ. ஒன்று**

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் **"திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34"** என்னும் முகவரிக்கு ரூபா **பத்து** அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார **அறநிலைய உதவி ஆணையாளர்களின்** அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

ஓர் ஆண்டின் நடுவில் எந்தமாதத்திற் சேர்ந்தாலும், அடுத்த ஆண்டில் அந்த மாதம் வரையில், 12 இதழ்கள் அனுப்பப்பெறும்.

ஓர் ஆண்டிற்குக் குறைந்த சந்தாத் தொகை ஏற்கப் பெறுவதில்லை.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறாமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது. —ஆசிரியர்.

திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 8] விசுவாவசு தை-பிப்ரவரி [மணி 5

CONNEMARA PUBLIC LIBRARY FEB 1965

உமாபதி சிவம்

முன்னுரை :

சைவ சித்தாந்த சந்தான ஆசிரியர்களில் நான்காமவராகத் திகழ்பவர் உமாபதி சிவம். ஏனையோர் மெய்கண்ட சிவம், அருள் நந்தி சிவம், மறைஞான சம்பந்தர் என்பவர்கள் ஆவர். உமாபதி சிவம் தில்லைவாழ் அந்தணர்களின் திருமரபைச் சேர்ந்தவர். தில்லைத் திருச்சிற்றம்பலப் பெருமானின் திருமேனியினைத் தீண்டிப் பூசிக்கும் பெருமையும் உரிமையும் பெற்றுப் பிறங்கியவர். தில்லையின்கீழ்த் திசையில், இப்போது அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அமைந்துள்ள அண்ணாமலை நகரின் ஒரு பகுதியில் பண்டு **'கொற்றவன் குடி'** எனப் பெயர் பெற்று விளங்கிய இடத்தில், இவர் வாழ்ந்து வந்தார். அங்கேயே இவர் தம் சமாதிக் கோயிலும், விருத்தாசலம் **குமாரதேவர்** திருமடத்தின் அருளாட்சியின் மேற்பார்வையில், அமைந்துள்ளது. ஆதலின் கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியர் எனவும் இவர் வழங்கப்படுவது உண்டு.

சிற்றம் பலம்மன்னும்
சின்மயராம் தில்லை நகர்க்

கொற்றங் குடிமுதலைக்
கூறும் நாள் எந்நாளோ ?

குறைவில் அருள் ஞான முதல்
கொற்றங் குடி அடிகள்

நறைமலர்த்தாட்கு அன்பு பெற்று
நாம் இருப்பது எந்நாளோ ?

—தாயுமானவர்

இன்று தமிழ் நாட்டிற் **பாரதியார் கம்பர் திருவள்ளுவர்** முதலிய ஒரு சில சான்றோர்களை மட்டுமே பரவலாகப் பொது மக்கள் ஓரளவேனும் அறிந்துள்ளனர். ஆனால் உமாபதிசிவம் போன்ற சான்றோர்களைப் பற்றிப் பொதுமக்கள் பெரிதும் அறிந்திருக்க வாய்ப்பு இல்லை. அறிந்தவர்களுள்ளும் பெரும்பாலோர் அவரைத் தெய்விகநிலை எய்திச் சிறந்திருந்த ஒரு பெரியார் என்று மட்டுமே கொண்டு, அவ்வளவில் அமைந்து விடுவர்.

இவர் 'வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவர்' எனினும், வையத்து வாழ்வாங்கு வாழ்ந்தவர். உயர்ந்த பல குறிக்கோள்களைக் கடைப்பிடித்து ஒழுகியவர்; சிறந்த பல உண்மைகளை விளக்கியவர்; அரிய பல நூல்களை ஆக்கி அளித்திருப்பவர்; நமக்குப் பல நலங்களை விளைத்திருப்பவர்; நாம் பெரிதும் வியந்து நன்றியுடன்

போற்றிப் பாராட்டத்தக்கவர். இங்ஙன மெல்லாம் நெஞ்சிற்கு அணியராகவும் இனியராகவும், மனித நிலையில் இவரை நாம் அறிந்துணர்ந்து பாராட்டுவதில்லை (1).

உமாபதிசிவம் தமிழகத்தில் தோன்றி யருளிய தலைசிறந்த தத்துவ வித்தகர் களுள் ஒருவர். சங்கரர் (கி.பி. 780-820) இராமாநுஜர் (கி.பி, 1017-1137) மத்வர் (கி.பி, 1199-1278) போன்ற தத்துவ உலகச் சான்றோர்களின் வரிசையில் வைத்து எண்ணத்தக்கவர். சங்கரரும் இராமாநுஜரும் மத்வரும் பிறரும் வட மொழியிற் பேருரைகள் வகுத்துப் புகழ் மிக்குத் திகழ்பவர்கள். அக்காலத்தில் தத்துவக் கருத்துக்களை வட மொழியில் எழுதுவதுதான் பெரிதும் வழக்கமாகவும் நல்ல நாகரிகப் பங்காகவும் இருந்து வந்தது. உமாபதிசிவம் வடமொழியிற் பெரும்புலமை கைவந்தவர். 'பௌஷ்கரம் என்னும் ஆகமத்திற்கு விருத்தியுரை ஒன்றை உமாபதிசிவம் இயற்றியுள்ளனர் எனவும் தெரிகின்றது. இதனால், உமாபதி சிவம் 'வடநூற்கடலை நிலைகண்டுஉணர்ந்த வர்' 'தென் சொற் கடல் கடந்து வட சொற்கு எல்லை தேர்ந்தவர்' என்பது தெளிவாம்.

ஆயினும், உமாபதிசிவாசாரியர் ஏனை யோர் பலரும் செய்தது போலப் பிரமசூத் திரம் போன்ற பெருநூல்களுக்கு வட மொழியிற் பாஷ்யங்கள் எழுதத் தலைப் பட்டிலர். சமய தத்துவக் கருத்துக்களைத் தாய்மொழியின் வாயிலாகவே பொது மக்களுக்குப் பரப்ப வேண்டிய இன்றி யமையாமைகளை நன்கினிது உணர்ந்தார். சமய உலகின் மாபெருந் தலைவர்கள் எல்லாம் தத்தம் தாய்மொழிகளிலேயே தாம் கண்டுணர்ந்த சமய நுண்பொருள் களை விளக்கியருளியிருக்கக்காண்கின் ரோம். புத்தர்பிரான், தமது உபதேசங் களைப் பாலிமொழியிலேயே செய்தருளி னார். மகாவீர வர்த்தமானர் தமது கருத் துக்களை அர்த்தமாகதி மொழியின் வாயி லாகவே பரப்பினார். இயேசுநாதர்அரமைக் என்னும் மொழியில் தமது அருளுரைகளை வழங்கினார். நபிகள் நாயகம் அரபி மொழியிலேயே தமது உயரிய கொள்கை களை வெளியிட்டார். இங்ஙனமே மற்று முள்ள சமயத்தலைவர்கள், ஆசாரியர்கள் அனைவருமே செய்துள்ளனர். நாயன்மார் களும் ஆழ்வார்களும் ''ஞானத் தமிழ்'' மொழியின் வாயிலாகவே தங்கள் அருளனுபவ நலங்களை யெல்லாம் அழகுற விளக்கியிருக்கின்றனர். ஆதலின் உமா பதி சிவமும் தம் தாய் மொழியாகிய தமிழ் மொழியின் மூலமாகவே தம் கருத்துக் களைத் தெளிய வடித்தெடுத்துச் சிறப்புற நல்கியுள்ளார்.

மக்களிற் பெரும்பாலானோர் 'நீர் வழிப் படு உம் புணை' போலக் கால வெள்ளத் தின் சுழலிற்பட்டு, அதன் போக்கிலேயே தாமும் சென்றொழிவர். ஆனால் மிகச் சிறந்த சான்றாண்மைப் பெருந்தலைவர் களோ, கால வெள்ளத்தின் வயப்படா மல் எதிர் நீச்சல் இட்டு, அதன் வழியில் தாம் ஓடாமல், அது தம் வழியில் தம்மைப் பின் தொடர்ந்து ஓடிவருமாறு செய்து விடுவர். காந்தியடிகள் போன்ற சான் றோர்கள் இதற்குத் தக்க எடுத்துக்காட்டு ஆவர். இவ்வுண்மைக்கு ஏற்ப, தத்துவ ஞான வெள்ளத்தினைத் தமிழ் நாட்டில் தமிழ் மொழியின் மூலம் பெருக்கெடுத் தோடிப் பாயுமாறு செய்தருளிய பெருந் தகையார்களுள், உமாபதிசிவம் ஒருவர் என்பது நாம் உணர்ந்து போற்றுதற்கு உரியது.

---

(1) "It has always seemed to me a much more magnificent and impressive thing that a human being should rise to great heights, mentally and spiritually, and should then seek to raise others up, rather than he should be the mouthpiece of a divine or superior power.

Some of the founders of religion were astonishing individuals, but all their glory vanishes in my eyes when I cease to think of them as human beings. What impresses me and gives me hope is the growth of the mind and spirit of man, and not his being used as an agent to convey a message."

—**Shri Jawaharlal Nehru,**
The Discovery of India, P. 66.

தமிழிற் பலதுறைக் கலைகளும் வளர வேண்டும் என நாம் பெரிதும் விரும்புகின்றோம். தமிழ்ச் சான்றோர்கள் ஒவ்வொருவரும் தத்தமக்கு ஏற்ற இனிய ஒவ்வொரு துறையிற் பணிபுரிந்துள்ளனர். நமது உமாபதி சிவம் தமிழில் தத்துவத் துறையில் மிகச் சிறந்த பெரும் பணி ஆற்றியுள்ளார். ஆதலின் சைவரும் சைவ சித்தாந்தக் கொள்கையினரும் மட்டுமேயன்றி, தமிழ் நலம் போற்றும் அனைவருமே உமாபதி சிவத்தினைத் தக்காங்கு இனிது போற்றப் பெரிதும் கடப்பாடுடையர் ஆவர்.

சிவப்பிரகாசம்
திருவருட்பயன்
வினாவெண்பா
போற்றிப்பஃறொடை
கொடிக்கவி
நெஞ்சுவிடு தூது
உண்மை நெறி விளக்கம்
சங்கற்ப நிராகரணம்

என்னும் தத்துவ விளக்க நூல்கள் எட்டினை உமாபதிசிவம் இயற்றியருளியிருக்கின்றார். இவ்வெட்டு நூல்களையும் "சித்தாந்த அஷ்டகம்" என அறிஞர்கள் பெரிதும் போற்றிக் குறிப்பிடுவர். இவைகளைப் பற்றிய சில சிறு குறிப்புக்களை மட்டுமேனும், ஈண்டுக் காண்டல் இயைபும் பொருத்தமும் உடையதாகும்.

(1) **சிவப்பிரகாசம்** என்னும் செந்தமிழ்ச் சிவநெறி நூல், சிவஞான போதம் ஆகிய முதல் நூலுக்கும், சிவஞான சித்தியார் ஆகிய வழி நூலுக்கும் சார்புநூல் ஆக அமைந்தது. சிவஞான போதம் போல மிகச் சுருக்கமாக அமைந்துவிடாமலும், சிவஞான சித்தியார் போல மிக விரிவாக இல்லாமலும், மிக்க சுருக்கமோ மிக்க விரிவோ இல்லாத இடை நிலையில் நூறு விருத்தச் செய்யுட்களால் இயன்றுள்ளது. மெய்கண்டார் நமக்குச் சிவஞானத்தைப் போதித்த நூல் சிவஞானபோதம்; அருள் நந்தி சிவம் நம்மனோர்க்குச் சிவஞானம் சித்திக்குமாறு செய்தருளிய நூல் சிவஞான சித்தியார்; உமாபதி சிவம் நம்மிடையே சிவம் பிரகாசிக்குமாறு செய்துதவிய நூல் சிவப்பிரகாசம் எனலாம்.

(2) **திருவருட்பயன்:** ஆசிரியர் திருவள்ளுவர் அருளிய திருக்குறளைப் பின்பற்றி, அதன் சொற் பொருள் யாப்பு முறை அமைதிகளைத் தழுவி, பதிமுதுநிலை உயிரவைநிலை பாசநிலை அருளதுநிலை அருளுருநிலை அறியும்நெறி உயிர் விளக்கம் இன்புறுநிலை ஐந்தெழுத்தருள்நிலை அணைந்தோர் தன்மை என்னும் பத்துத் தலைப்புகளில், ஒவ்வொன்றற்கும் பப்பத்தாக, நூறு குறள் வெண்பாக்களால் எளிமையும் இனிமையும் தெளிவும் சுருக்கமும் தோன்ற விளக்குவது.

(3) **வினா வெண்பா:** உமாபதி சிவம் தமது ஆசிரியர் ஆகிய மறைஞான சம்பந்தர்பால், தாம் தம் அறிவாராய்ச்சி ஐயப்பாடுகளை விண்ணப்பித்துக்கொள்ளும் முறையில் அமைத்துச், சிக்கலான தத்துவக் கருத்துக்களை நாம் சிந்திக்குமாறு தூண்டி, அவற்றின் சிக்கறுத்து அழகாகவும் தெளிவாகவும் பதின்மூன்று வெண்பாக்களால் விளக்குவது. வினா நிகழ்த்தும் முறையில், வெண்பாக்களால் அமைந்தமையின், வினா வெண்பா எனப் பெயர் பெற்றது.

(4) **போற்றிப் பஃறொடை:** இறைவன் உயிர்களின்மீது கொண்ட பெருங் கருணையினால், அவைகள் பாசத்திற் கட்டுண்டு கிடக்கும் கேவலம் சகலம் சுத்தம் என்னும் பல நிலைகளினும் பாச வலியைக் கெடுத்து ஆண்டு கொண்டருளும் முறையினைப் பல வகையானும் தொடுத்துக் கூறிப் போற்றும் நூல். போற்றுதல் — பாதுகாத்தல். இறைவன் உயிர்களைத் தன் அருளாற் போற்றிப் பாதுகாத்தலைப் பல வகைகளில் தொடுத்துக் கூறுதலால், இது போற்றிப் பஃறொடை என்று வழங்கப்பெறும்.

(5) **கொடிக்கவி:** ஒரு சமயம் தில்லையில் திருவிழா நிகழ்ச்சியின்போது வழக்கமாக ஏற்றப்படும் கொடியானது, இறைவனின் திருவருட் குறிப்பால் ஏறப்

பெறுமல் தடைப்பட்டபொழுது, அக் கொடி ஏறுமாறு இறையருளை முன்னிட்டு உமாபதி சிவம் பாடியருளிய நூல். கொடியேறுதல் குறித்துப் பாடப்பெற்ற கவியாதலின் கொடிக்கவி என்னும் பெயர்த்தாயிற்று. "அருளாளா! நீ புரவா வையமெலாம் நீ அறியக் கட்டினேன் கோபுரவாசற் கொடி" என்று வருதல் காணலாம். இதன்கண்,

அஞ்செழுத்து — சிவாய நம
எட்டெழுத்து — ஓம் ஆம் ஔம் சிவாய நம
ஆறெழுத்து — ஓம் நமசிவாய
நாலெழுத்து — ஓம் சிவாய
பிஞ்செழுத்து — வகாரம் ஆகிய பராசத்தி
பெருவெழுத்து — சிகாரம் ஆகிய சிவம்

என்னும் மந்திரங்களைப் பற்றிய குறிப்புக்கள் வருதல் அறிந்து பயன்கொளற்பாலது.

(6) **நெஞ்சுவிடுதூது:** தலைவன் தலைவியர்களுள் ஒருவர் மற்றொருவர்பால் தமது பிரிவாற்றுப் பெருங்காதல் நிலையினைப் புலப்படுத்திக் கிளி அன்னம் மயில் குயில் வண்டு தென்றல் முதலிய பொருள்களைத் தூது சென்று வருமாறு விடுக்கும் அகப்பொருள் இலக்கண மரபு நெறி தழுவி, உமாபதி சிவம் தமது ஞானசிரியர் ஆகிய மஹறைஞான சம்பந்தர்பால் தம்முடைய நெஞ்சினைத் தூது சென்று வருமாறு விடுக்கும் நிலையிற பாடியருளியது. ஆதலின் இதற்கு 'நெஞ்சுவிடு தூது' எனப் பெயர் அமைந்தது.

(7) **உண்மை நெறி விளக்கம்;** சத்திநிபாதம் என்னும் திருவருட் பதிவு நிலைகைவரப் பெற்ற உத்தமர்கள் முறை முறையே அருளின்பப் பேறு தலைப்படும் படிநிலைகள், தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்மரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, சிவரூபம் சிவதரிசனம் சிவபோகம் சிவயோகம் எனப் பத்து வகைப்படும். இவற்றைத் 'தச காரியம்' என்பர். 'பத்துக் கோலாம் அடியார் செய்கை தானே' என்று திருநாவுக்கரசர் பெருமான் குறிப்பிடுதலும் காணலாம். வீடுபேறு தலைப்படுதலின் நெறிமுறைப் படிநிலைகளின் உண்மையினை விளக்குதலால், இஃது உண்மை நெறி விளக்கம் எனப் பெயர் பெற்றது. திருவதிகை மனவாசகங் கடந்தார் இயற்றியருளிய "உண்மை விளக்கம்" என்னும் நூலினின்று இதனைப் பிரித்தறிதற்கும் இப்பெயர் துணைபுரிகின்றது.

(8) **சங்கற்ப நிராகரணம்:** உமாபதி சிவம் அருளிய சைவ சித்தாந்த நூல்களில் மிகவும் தலைசிறந்ததொன்று. பலவேறு தத்துவக் கொள்கைகளையும், அவற்றைப் பற்றிய பலவேறு தத்துவ நுட்பங்களையும் ஆராய்ந்து காட்டி, அவற்றின் குறை நிறைகளைத் திட்ப நுட்பமுற விளக்கியுணர்த்தும் அறிவாராய்ச்சித் திறனில், உமாபதி சிவம் ஒப்புயர்வற்ற சிறப்பினராதலை, இந்நூலினுல் நாம் நன்கு தெளியலாம். சிந்தனைத் திறனும் ஆராய்ச்சி நுண்ணறிவும், இந்நாளில்தான் பெரிதும் வளர்ந்து விட்டிருப்பதாக எண்ணிக் கொண்டிருப்பவர்கள், பல நூற்றாண்டு கட்கு முன்னரே நம்முடைய பழம் பெருஞ் சான்றோர்கள் எவ்வளவு நுட்பமாகச் சிந்தனை செய்து, சிக்கலான செய்திகளிலும் தெளிவு கண்டிருக்கின்றார்கள் என்றறிந்து மகிழ, இந்நூலைப் பயிலுதல் இன்றியமையாதது.

மாயா வாதம்
ஐக்கிய வாதம்
பாடாண வாதம்
பேத வாதம்
சிவசம வாதம்
சங்கிராந்த வாதம்
ஈசுர அவிகார வாதம்
நிமித்த காரண பரிணும வாதம்
சைவ வாதம்

என்னும் பலவேறு கொள்கைகளையும் சுருக்கமாக நன்கு தொகுத்துக் கூறுவதுடன், அவற்றின் பொருந்தாத் தன்மைகளையும் அழகுற விளக்கிக் காட்டுவது இந்நூல். சங்கற்பம்-கொள்கை. நிராகரணம்-மறுத்தல்.

இதன்கண் இவர் பிற சமயக் கொள்கைகளை எடுத்துக் கூறி மறுத்திருப்பது, சமயக் காழ்ப்புடைமைபற்றி யன்று; கருத்தியல் விளக்கத்தின் பொருட்டே யாகும் (2).

பலவேறு சமயக் கொள்கைகளைப் பற்றியும் எடுத்துக் கூறுங்கால், இவர் **வாசஸ்பதி மிசிரர்** என்பவர்போல (3), அவ்வச் சமயக் கொள்கைகளைச் சார்ந்தவர் போன்றே நலம்பெறக் கூறிச் செல்கின்றார். இத்தகைய நடுவுநிலை திறம்பா நல்லுள்ளம் கொண்டிருந்தமை, உமாபதி சிவத்தின் உயரிய பண்பு நலத்தினை உணர்த்துவதாகும்.

சர்வ சித்தாந்த சங்கிரகம்
சர்வ தர்சன சமுச்சயம்
விவேக விலாஸம்
சர்வ தர்சன சங்கிரகம்

போன்ற பல சிறந்த வடமொழி நூல்களைப்போல, அவற்றிற்கு ஒருவகையில் இணையாகத் தமிழில் அமைந்த நூல் சங்கற்ப நிராகரணம் ஆகும் என்பது மிகையாகாது. தத்துவக் கொள்கைச் சிந்தனைகளினல் அறிவுத்திறனை நுட்பமும் கூர்மையும் ஆக்கிக்கொள்ள விரும்புபவர்களுக்குச் சங்கற்ப நிராகரணம் ஒரு சாணைக்கல் போன்றதெனலாம்.

பழமையும் புதுமையும்:

உமாபதி சிவம் புதுமையுணர்வும் முற்போக்குக் கொள்கையும் உடையவர் என்பது நாம் அறிந்து மகிழ்தற்குரியது. மக்களுட் சிலர் பழமையினையே விரும்புவர். வேறு சிலரோ புதுமையினையே விரும்பிப் போற்றுவர். "புதியன கண்ட போழ்து விடுவரோ புதுமை காண்பார்" எனக் கம்பர் பாடுவது போல, மக்களுட் பெரும்பாலோர்க்குப் புதுமையில் ஒருவகை வியப்பும் மோகமும் நிகழ்தல் உண்டு. இந்நாளில் ஒருசிலர், ஏதோ தாங்கள்தான் புதுமைக் கருத்தும் முற்போக்கு நோக்கமும் உடையவர்கள் போல நினைத்துக்கொள்ளுதலைக் காண்கின்றோம். ஆனால் இற்றைக்கு ஏறத்தாழ 600 ஆண்டுகளுக்கு முன்பே, உமாபதி சிவம் மிக்க முற்போக்கு மனநிலை உடையவராக விளங்கியிருந்தார். பழமையைத் தழுவுவதோடு மட்டும் அமைந்துவிடாமல், புதுமைகளைப் போற்றுவதிலும் உமாபதி சிவம் மிக்க ஆர்வமும் ஊக்கமும் உடையவராகத் திகழ்ந்திருந்தார்.

"பழமையான நூல்கள் அனைத்துமே நல்லன அல்ல. இந்நாளில் தோன்றுகின்ற புதிய நூல்கள் யாவுமே தீயனவாகி விடமாட்டா. பழையன சிலவற்றுள் குற்றமும், புதியன பலவற்றுள் நற்றமும் அமைந்திருப்பதும் இயற்கை. நல்லிலக்கணங்கள் அமையப்பெற்ற ஒரு மணியினைப் புறத்தே மாசு படிந்து பொதிந்திருப்பினும், தலையாயவர்கள் அதன் உண்மை மதிப்பறிந்து விரும்பி ஏற்றுக்கொள்வார்கள். இடைப்பட்ட தன்மையுடையவர்கள் அம்மணியின் பழமையையும் அழகையும் ஆராய்ந்து பார்த்து அணிந்து கொள்வர். ஒரு பொருளின் குணத்தையோ குற்றத்தையோ ஆராய்ந்தறியும் திறனில்லாத கடைப்பட்டவர்களே, பலர் ஒன்றைப் புகழ்ந்தால் தாமும் கண்மூடிக்கொண்டு அதனைப் புகழ்வர்; பலர் ஒன்றை இகழ்ந்தால் தாமும் கண்மூடிக்கொண்டு அதனை இகழ்வர். இங்ஙனம் தமக்கென ஒரு திறனே கொள்கையோ இல்லாமல், ஏனைப் பெரும்பாலோர் சென்ற வழியினையே தாமும் பின்பற்றி ஒழிதல் அறிவில்லாத கடை மக்களின் பண்பு" எனச் **சிவப்பிரகாசம்** என்னும் நூலில் உமாபதி சிவம் உரைத்தருளுமாற்றால், அவர்தம் இனிய உள்ளப் பாங்கை யாவரும் தெள்ளிதின் உணரலாம்.

(2) "All partitions of knowledge should be accepted, rather for lines to mark and distinguish than for sections to divide and separate, so that the continuance and entirety of knowledge be preserved."

— Francis Bacon.

(3) "Vachaspati Misra, who commented on almost all the systems of Hindu thought, wrote on each, as if he believed in its doctrines."

— *Dr. S. Radhakrishnan*, Indian Philosophy.

தொன்மையவாம் எனுமெவையும் நன்ருகா;
இன்று
தோன்றிய நூல் எனுமெவையும்
தீதாகா ; துணிந்த
நன்மையினர், நலங்கொள்மணி
பொதியும்அதன் களங்கம்
நவையாகா தென உண்மை நயந்திடுவர்;
நடுவாம்
தன்மையினர், பழமைஅழகு ஆராய்ந்து
தரிப்பர் ;
தவறுநலம் பொருளின்கட்சார்வு
ஆராய்ந்து அறிதல்
இன்மையினர், பலர்புகழில் ஏத்துவர் ;
ஏதிலர் உற்று
இகழ்ந்தனரேல் இகழ்ந்திடுவர்;
தமக்கென ஒன் றிலரே!
— சிவப்பிரகாசம்; 2.

இச்செய்யுட் பொருள் எத்துணை விழுமியது என்று சொல்லுதலும் வேண்டுமோ? இத்தகையதொரு கருத்து, **காளிதாசர்** இயற்றிய **மாளவிகாக்நி மித்திரம்** என்னும் நூலில் வந்திருப்பதும் இங்கு நாம் ஒப்பிட்டு மகிழ்தற்குரியது (4).

புதுவகை விளக்கம் :

உமாபதிசிவம் நல்ல பெருஞ் சிந்தனையாளர். எதனையும் தெளிவுற எளிதின் விளக்கும் திறனுடையவர். அவர் பொருள்களை விளக்கும் முறைகளில் ஒரு புதுமை நலம் பொலிந்து காணப்படும். தாம் விளக்கும் செய்தி ஒருவகையிற் பழமையுடையதாகவே இருந்தாலும் அதனைப் புதிய முறைகளில் வெளியிடுதல் அவர்க்குரிய இயல்பாகும். மக்கள் மனம் ஒரே வகையில்தான் சிந்தித்தல் வேண்டும் என்று கருதாமல், ஒரு பொருளையே பலவேறு கோணங்களில் ஆராய்ந்தறியலாம் என்று சிந்தனைக்கு உரிமையும் வாய்ப்பும் அளித்தவர் உமாபதிசிவம். இதனை மெய்ப்பிக்கும் ஒரு சில இனிய சான்றுகளை மட்டும் சுருக்கமாக ஈண்டுக் காண்போம்.

(1) சைவசித்தாந்தத்தில் பதிபசு பாசம் எனப் பொருள்கள் மூன்றே என்பது வழக்கம். பதிபசு பாசம் ஆகிய முப்பொருள்களையே இவர் ஆறு பொருள்களாகக் குறிப்பிடுதல், இதற்குத் தக்க எடுத்துக் காட்டாகும். 'இறைவன் உயிர்கள் ஆணவம் கன்மம் சுத்தமாயை அசுத்தமாயை எனப் பொருள்கள் ஆறு. இவைகள் அநாதியேயுள்ளன' என உமாபதிசிவம் உணர்த்துகின்ருர்.

ஏகன் அநேகன் இருள்கருமம் மாயை இரண்டு
ஆகஇவை ஆறு; ஆதியில்

என்பது திருவருட்பயன். அற்றேல், இங்ஙனம் சைவசித்தாந்த தத்துவ உண்மையொடு முரணுமாறு இவர் கூறியிருத்தல் பொருந்துமோ எனின், ஒரு பொருளைக் குறித்தே பலவகையிற் பல கோணங்களில் சிந்தித்துணர்தலும் உணர்த்துதலும் இன்றியமையாதன என்னும் கருத்தினராகலின், இங்ஙனம் கூறினர். ஆயினும் உண்மைக்கு முரணுமலும், தக்க சான்றுகள் கொண்டுமே கூறியிருக்கும் திறம், இவர்தம் சிறப்பியல்பினைப் புலப்படுத்தும்.

"சுவாயம்புவம் முதலியவற்றிற் பொருள்கள் ஏழு என்றலும், பவுட்கரம் மதங்கம் முதலியவற்றின் ஆறு என்றலும், பராக்கியை முதலியவற்றின் ஐந்து என்றலும், சர்வஞ்ஞானோத்தரம் முதலியவற்றின் நான்கு என்றலும், இரௌரவம் மிருகேந்திரம் முதலியவற்றின் மூன்று என்றலும் காணலாம். அவை யெல்லாம் மூன்று என்றதனுள் அடங்குதலின் முப்பொருள் என்றலே எல்லா ஆகமங்கட்கும் துணிபு."

எனச் சிவஞான சுவாமிகள், தமது சிவஞானபோதப் பேருரையிற் குறிப்பிட்டி

(4) "Kalidasa in his Malavikagnimitra says: Everything is not good simply because it is old; no literature should be treated as unworthy simply because it is new. Great men accept the one or the other after due examination. Only the fool has his understanding misled by the beliefs of others."

—*Dr. S. Radhakrishnan*, Recovery of faith.

ருத்தல் ஈண்டு எண்ணி யுணரற்பாலது. முப்பொருள்களையே ஆகமங்கள் வெவ்வேறு வகையில் விரித்து உணர்த்துதலும் உண்டு என்று அறிவித்தற்கே, உமாபதி சிவம் பொருள்களை ஆறு என்று குறிப்பிடுவாராயினர்.

(2) அருள் நந்தி சிவம், தம் நூலிற் கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டை என ஞானம் நான்கு வகைப்படும் என்று குறிப்பிட்டார்.

> கேட்டலுடன் சிந்தித்தல் தெளிதல் நிட்டை
> கிளர்தல்என ஈர்இரண்டாம் கிளக்கின் ஞானம்

என்பது சிவஞான சித்தியார் செய்யுள் (276). உமாபதிசிவம் இதனையே வேறொரு வகையால் இரண்டு என்று கூறுகின்றார். ஒன்று திருவருளோடு கூடி இரண்டற நின்று அனுபவிக்கின்ற ஞானம் மற்றொன்று சிவாகமங்களை ஓதியுணர்ந்து அறியும் ஞானம். முன்னையது முதலிகள் மூவர்க்கும் காரைக்காலம்மை முதலாயினோர்க்கும் நிகழ்ந்தது. பின்னையது திருநந்திதேவர் முதலான சமய குரவர்கள், உபதேசத்தினாற் பெற்றது. இவற்றை முறையே பரஞானம் அபர ஞானம் என்பர்.

> ...உயர்ஞானம் இரண்டாம்; மாறு
> மலம்அகல அகலாத மன்னு போதத்
> திருவருள் ஒன்று; ஒன்றுஅதனைத் தெளியஓதும்
> சிவாகமம்என் றுலகறியச் செப்பும் நூலே
>
> — சிவப்பிரகாசம். 10

ஞானம் பற்றிய இப்பாகுபாடுகள் ஒரு வகையிற் பெரிதும் முதன்மை வாய்ந்தன. ஏனெனில் இவற்றை அடிப்படையாகக் கொண்டு, "சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு **சிவஞானம்**" எனத் தொடங்கும் பெரியபுராணப் பாடலிற் குறிக்கப் பெறும் ஞானத்திறங்கள் எவை என்பது பற்றிச் சைவவுலகின் மாபெரும் சான்றோர்கள் ஆகிய சென்னை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகர், யாழ்ப்பாணம் வட கோவைச் சபாபதி நாவலர், மதுரை மகாவித்துவான் சபாபதி முதலியார் போன்ற பேரறிஞர்களிடையே இற்றைக்கு 70--80 ஆண்டுகளுக்கு முன்னர் மாபெருஞ் சொற்போர்கள் நிகழ்ந்துள்ளன; மறுப்புரை நூல்கள் (Polemic literature) பல வெளிவந்துள்ளன.

(3) உமாபதி சிவம் நிரம்ப நூல்கள் இயற்றிய ஒரு சிறந்த பெருங்கவிஞர் (Prolific poet). சித்தாந்த சாத்திரங்களில் எட்டுச் சிறந்தநூல்களை இயற்றியதேயன்றி,

கோயிற் புராணம்
சேக்கிழார் புராணம்
திருமுறைகண்ட புராணம்
திருத்தொண்டர் புராணசாரம்
திருப்பதிக் கோவை

என்னும் பிற நூல்களையும் இவர் பாடியிருக்கின்றார். ஒவ்வொரு நூலும் ஒவ்வொரு தனி நடையும் சிறப்பும் பெற்று மிளிர்கின்றது. விருத்தம் வெண்பா கலிவெண்பா குறட்பா கட்டளைக் கலித்துறை ஆகிய பலவேறு பாவினங்களையும் கையாண்டுள்ளார். நூற்பொருட் பாகுபாடுகளிலும் அவர் புதிய முறையினைப் பின்பற்றி யிருக்கின்றார். திருவருட்பயனின் பத்துத் தலைப்புக்களும் இதற்கு நல்ல எடுத்துக்காட்டு. மற்றும் சிவப்பிரகாசம் என்னும் நூலில், தமக்கு முதனூலும் வழிநூலும் ஆகிய சிவஞானபோதம் சிவஞான சித்தியார் என்பவை, பன்னிரண்டு சூத்திரங்களாக அமைந்திருக்க, இவர் பெத்தம் முத்தி என்று இரு பாகுபாடு செய்துகொண்டு, முதல் ஐம்பது பாடல்களில் பெத்த நிலையினையும், பின்னை ஐம்பது பாடல்களில் முத்தி நிலையினையும்பற்றி விளக்குகின்றார். "பெத்த முத்திகள் மதித்தாம் அன்றே" என்பது சிவப்பிரகாசச் செய்யுள் (99). முத்தி நிலைபற்றிய பகுதியில், தாம் கூறலுறும் செய்தியினை

1. ஆன்ம இலக்கணம்
2. ஐந்தவத்தைகளின் இயல்பு.
3. கேவலநிலையில் உயிர்களுக்கு இறைவன் உணர்த்தும் முறைமை.
4. ஞான வாய்மை.
5. ஆன்ம தரிசனம்.
6. ஆன்ம சுத்தி.
7. ஆன்ம லாபம்.
8. ஐந்தெழுத்தருள்நிலை.
9. அணைந்தோர் தன்மை.

எனத் தாமே ஏற்றபெற்றி பொருட் பாகுபாடு செய்துகொண்டு விளக்கியிருக்கின்றார்.

இங்கிவை பொது இயம்பும்
என்பர்கள்; இதன்மேல் ஆன்மா,

தங்கிய ஐந்த வத்தை,
தன்னுண்மை உணர்த்தும் தன்மை,

பொங்கொளி ஞான வாய்மை,
அதன்பயன், புனிதன் நாமம்,

அங்கதின் அணைந்தோர் தன்மை,
அறைகுவன் அருளி னாலே.

— சிவப்பிரகாசம், 51.

என இவர் அருளிச் செய்திருத்தல் காணலாம். இங்ஙனம் இவர் தமக்கென ஒரு நெறியினை வகுத்துக்கொண்டு கருத்துக்களை விளக்குவராயினும், தம் முன்னையோர் வகுத்தருளிய பன்னிரண்டு சூத்திர அமைப்பு முறையினையும் நழுவ விடாமல் தழுவிப் போற்றியே, சிவப்பிரகாசம் என்னும் சிறந்த நூலினை இயற்றியிருத்தல் உரைகாரர்களால் விளக்கப் பெற்றிருத்தல் அறிந்து மகிழத் தக்கது.

திருவருட் பயன் :

(4) உலகிற்சிறந்த சமய ஆசிரியர்கள் என விளங்கியிருந்த அனைவரும், "உழுத சால்வழியே உழுவான் இழுதை நெஞ்சம் இதென்படுகின்றதே" எனத் திருநாவுக்கரசர் பாடுமாறு போலப் பழமையினையே போற்றிக்கொண்டு செல்லாமல், தமக்கேயுரிய இயல்பிற் பலப்பல புதுமைப் போக்குகளையும் புகுத்தியருளி உலகுக்கு நலம் புரிந்துள்ளனர் (5). அம்முறையில்,

இவர் சித்தாந்தக் கருத்துக்களை விளக்கும் முறையில் ஒரு புதுமையும் இனிமையும் பொலிதலைப் பின்வரும் சில உதாரணங்களால் உணரலாம் :

(அ) பொருள்களை ஞானக் கண்ணினால் காணப் பெறாத உயிர்களுக்கு ஞானமெல்லாம் அஞ்ஞானம் போலவே தோற்றும். எங்ஙனமெனில், பகலில் கண் தெரியாத கூகை என்னும் பறவையின் கண்களுக்கு இருளை நீக்கும் ஞாயிற்றின் ஒளியும் இருளாகவே அமைதல் போல.

ஊமன்கண் போல, ஒளியும் மிக இருளே
யாம்; மன்கண் காணா தவை.

(ஆ) ஆணவம் மிகவும் கொடியது. இருள் போன்றது. இருளாவது வேறு பொருள்களை யெல்லாம் மறைத்தாலும், தன் உருவத்தைக் காட்டி நிற்கும். ஆனால், ஆணவ மலமோ பிற பொருள்கள் அனைத்தையும் மறைப்பதோடன்றித் தன்னையும் கூடக் காட்டாமல் முற்றிலுமே மறைத்துவிடும்.

எல்லா உயிர்களையும் எக்காலத்துமே புணர்ந்து நின்றாலும், தான் புணர்ந்து நிற்கும் உயிராகிய கணவனுக்கும் கூடத் தன்னைக் காட்டி வெளிப்படுத்திக் கொள்ளாத 'கற்புத் தன்மை' ஆணவமலம் ஆகிய அரக்கிக்கு உண்டு.

---

(5) "The great religious teachers of the world preach something different from the traditions they inherit. The seers of the Upanishads, Gautama the Buddha, Zoroaster, Socrates, esus, Muhammad, Nanak and Kabir had to undergo in their lives an inevitable breakaway from the traditional views"

— *Dr. S. Radhakrishnan,*
Recovery of Faith.

ஒருபொருளும் காட்டாது இருள், உருவம் காட்டும்;

இருபொருளும் காட்டாது இது.

பலரைப் புணர்ந்தும் இருட்பாவைக்கு உண்டு, என்றும்

கணவற்கும் தோன்ருத கற்பு

(இ) திருவருள் துணையினுல் வாழும் உயிர்கள் அத்திருவருளை அடைந்து இன்புருமல் மயக்கமாகிய பிறவிக்கடலில் விழுந்து புலன் வழிகளிலே உழன்று அலையா நிற்கும்; எது போல் எனில், பாற்கடலிலே வாழ்கின்ற மீன்கள் பாலைக்குடித்து இன்புற்று வாழாமல், அதன்கண் அழுக்குகளையே தேடி அலைந்துண்டு வாழ்தல் போல.

பால்ஆழி மீன்ஆளும் பான்மைத்து; அருள் உயிர்கள்

மால்ஆழி ஆளும் மறித்து.

(ஈ) உயிர்கள் தம்மைத் தாங்கி நலஞ் செய்யும் திருவருளின்பத்தைப் பெறுவதைவிட்டு, உலகியல் நுகர்ச்சிகளை விரும்பியுழன்று, திருவருளையும் இழந்து, உலக நுகர்ச்சியும் விரும்பியவாறு கைகூடப் பெருமல் வருந்தி அலைகின்றன. எதுபோலும் எனில், உறியின் மீதிலுள்ள பாற்பானையின் மேல் தாவிச் சென்று அமர்ந்துள்ள பூனையானது பாலைப் பருகுதலை விட்டு, அங்கே கூரையின் மேல் ஓடிச் சென்று மறைய முயலும் ஓர் எலியைக்கண்டு அதன்மேற் பாய்ந்து, அவ்வெலியையும் பிடிக்க முடியாமல், உறியிலுள்ள பாலையும் கவிழ்த்து, தானும் கீழே விழுந்து, துன்புறுதலைப் போலும்.

பரப்பமைந்து கேண்மின் இது;
பாற்கலன் மேற் பூசை

கரப்பு அருந்த நாடும் கடன்

பூசை—பூனை

கரப்பு—எலி

(உ) ஆசாரியன் ஒருவகையில் இறைவனிலும் சிறந்தவன் ஆவான். நஞ்சு தீண்டப் பெற்ற ஒருவனின் கழுத்தில் கீரிப் பிள்ளையையே கொண்டு வந்து கட்டினுலும் நஞ்சு தீராது; கீரிப்பிள்ளையைப் போலத் தன்னைப் பாவித்து மந்திர சித்தி கைவந்த ஒருவன் இடும் கயிற்றினுலேயே, நஞ்சுதீண்டப் பெற்றவன் உயிர் பெறுதல் இயலும். அதுபோல, ஆணவ மலத்தினின்று உயிர்களை இறைவன் நேரே விடுவிக்க மாட்டான்; இறையருள் பெற்ற ஞானுசிரியர்களே உயிர்களைப் பற்றியுள்ள மலவலியைப் போக்க வல்லவர் ஆவர். நஞ்சு ஆணவம்; கீரி இறைவன்; பாவகன் மந்திரம் வல்லான். உயிர்பெறுதல்—வீடுபேறு அடைதல்.

"விடம்நகுலம் மேவினும்,
மெய்ப்பாவகனில் மீளும்

கடனில், இருள்போவது இவன்கண்."

நகுலம்—கீரிப்பிள்ளை

பாவகன்—மந்திரசித்திபெற்றவன்

கடனில்—முறைபோல.

(ஊ) அருள்புரியும் இறைவன் என்றும் உள்ளான். அருள் பெறுதற்குரிய உயிர்களும் என்றும் உள்ளன. ஆயினும் உயிர்களுக்கு அருட்பேறு எளிதில் வாய்த்து விடுவதில்லை. உயிர்களுக்கும் இறையருளுக்கும் இடையே போந்து, இறையருளைத் தான் பெற்றுத் தன்வழியே உயிர்கள் இறயருளைப் பெறுதலில் துணைபுரிதற்கு ஒரு ஞாஞசிரியன் இன்றியமையாதவன் ஆவன். எதுபோல எனில், சூரியனும் உள்ளான் அவனுக்குத் தீக்காலும் தன்மையும் உள்ளது. எனினும் தீப்பற்றும் இயல்புடைய பஞ்சு தீப்பிடிப்பதில்லை. சூரியனுக்கும் பஞ்சுக்கும் இடையே சூரிய காந்தக்கல் (Lens) இருந்தால்தான் பஞ்சில் தீப்பற்றும். அதுபோல என்பது. சூரியன் இறைவன். பஞ்சு உயிர். சூரிய காந்தக்கல் ஞான ஆசிரியன். நெருப்பு ஞானஒளி.

"ஞானம் இவன் ஒழிய நண்ணியிடும்;
நற்கல் அனல்

பானு ஒழியப் படின்."

நற்கல் - சூரியகாந்தக்கல்.

பானு - சூரியன்.

அனல் - நெருப்பு.

இங்ஙனம் எளிய இனிய சிறந்த உவமைகள் (Homely similes) கொண்டு, அரிய பெரிய கடினமான பொருள்களை விளக்குதல் உமாபதி சிவத்தின் தனிப் பெரும் சிறப்பியல்பாகும்.

உமாபதிசிவம் திருமுறைகளிலும் நாயன்மார்களிடத்திலும் மிக்க ஈடுபாடு கொண்டவர். சிறப்பாகச் **சேக்கிழார் திருவள்ளுவர்** போன்ற சிறந்த செந்தமிழ்ச் சான்றோர்களை உமாபதி சிவம் பெரிதும் மதித்துப் போற்றியுள்ளார். திருவாசகத்தின்பால் அவருக்குச் சிறந்த பெருமதிப்பு இருந்தது. திருவாசகப் பாடல்களை அவர் தம்முடைய நூல்களில் மேற்கோளாக எடுத்துக் காட்டியிருக்கின்றார்.

இந்திய நாட்டு ஆசிரியர்கள் வேறு பிறர் எவரிடத்தும் காணப்படாத வரலாற்றுணர்ச்சி (Historical spirit), நம் உமாபதி சிவத்தின்பால் நன்கினிது அமைந்திருந்தது. சாலிவாகன சகாப்தம் 1235 (கி. பி. 1313) ஆம் ஆண்டில் தாம் சங்கற்ப நிராகரணம் இயற்றிய செய்தியினை,

"ஏழஞ்சு இருநூறு எடுத்த ஆயிரம்
வாழும்நற் சகனம் மருவா நிற்ப"

என்னும் வரிகளில் உமாபதிசிவம் குறிப்பிட்டிருப்பது கால ஆராய்ச்சிக்கும் வரலாற்றுணர்ச்சிக்கும் பெரிதும் துணை புரிந்துள்ளது. இக்காலக் குறிப்பின் துணைகொண்டே, பிற சைவசித்தாந்த நூல்களின் காலம் முதலியவற்றை நாம் அறிய முடிகின்றது. பேராசிரியர் மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை அவர்கள், தம்முடைய 'திருஞான சம்பந்தர் கால ஆராய்ச்சி' என்னும் நூலில் உமாபதிசிவம் உதவியிருக்கும் இக்காலக் குறிப்பினை மிகவும் வியந்து பெரிதும் போற்றியுள்ளார். (5)

"Here then is a date which may prove a **veritable lodestar** to guide us through the conjectural cloudland of current chronology"

— *Prof. P. Sundaram Pillai*, M.A., The Age of Thirugnana Sambandha, P. 23.

தில்லைவாழ் அந்தணர் திருமரபில் உதித்த உமாபதிசிவம், பல்லக்கில் இவர்ந்து பரி வாரங்கள் ஒளிவிளக்கு ஏந்திவரச் சென்று கொண்டிருந்த தம்மைக் கண்டு, 'பட்ட மரத்திற் பகற் குருடு போவதைப் பாரீர்' என்று பக்கலில் இருந்தோர்க்குச் சுட்டிக் காட்டிக் கூறிய மறைஞான சம்பந்தரைக் குருவாக ஏற்றுக் கொண்டதும், நெசவுவேலை செய்வோர் பாவோடுங்கால் வார்த்த கூழினை உண்டு முழங்கை வாரவிட்ட அவர் தம் மிச்சிலை யுண்டு மகிழ்ந்ததும்,

அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதிய கைச்சீட்டு—படியின்
மிசைப்
பெற்றான்சாம் பானுக்குப் பேதமறத் தீக்கை
செய்து
முத்தி கொடுக்க முறை.

என இறைவன் விடுத்த திருமுகப் பாடலின்படி, **பெற்றான் சாம்பான்** என்னும் அன்பருக்குத் தீக்கை புரிந்தருளியதும் ஆகிய செய்திகள், உமாபதிசிவம் "**சாதி குலம்** பிறப்பென்னும் சுழிபட்டுத் தடுமாறும்" இயல்பினர் அல்லர் என்பதனை யுணர்த்தும்.

இனி இறுதியாக ஒன்று சிந்தித்து அமைதல் சாலும். மனிதர்களுக்குக் கொள்கை என்பது, ஆழ்ந்து ஆராய்ந்து சிந்தித்துப் பல்லாற்றானும் நல்லதெனத் தெளிந்த நெறிமுறையினை வாழ்க்கையிற்

It is the most unfortunate thing in India and in Indian Religion that the same books and the same texts furnish the authority and the sanction for every existing phase of belief and thought, and when this fact is coupled with such a blind ignoring of what is past and what is modern, and when the materials for applying such an historical test are not very considerable, the task of deciding which is the true interpretation and which is false, is rendered very difficult, though not impossible..."

— **J. M. Nallaswami Pillai**, B.A.,B.L., Studies in Saiva Siddhanta, p. 242.

கடைப் பிடிப்பது. அங்ஙனம் தாம் கடைப்பிடிக்கும் கொள்கையில், அவர வரும் ஒரு பெருமிதமும் பற்றும் அழுத்தமும் ஆர்வமும் உடையவராதல் கடமை. அம்முறையில் மறைஞான சம்பந்தரால் ஆட்கொள்ளப் பெற்றுச் சைவசித்தாந்தச் சான்றோராக விளங்கிய உமாபதிசிவம், அச்செந்நெறியின்கண் அழுந்திய தெளிவும் பற்றும் ஆர்வமும் உடையவராகத் திகழ்ந்தார்.

"சைவசித்தாந்தம் வேதாந்தம் என்பதனோடு மாறுபட்டதன்று; அதனது தெளிவாகவும் பிழிவாகவும் திகழ்வது. வேதத் தலைதரு பொருளாய் விளங்குவது. 'ஓரும் வேதாந்தம் என்ற உச்சியிற் பழுத்த ஆரா இன்ப அருங்கனி பிழிந்து. அதன் சாரங் கொண்டது சைவ சித்தாந்தம்'. ஏகான்மவாதம் என்னும் கொள்கையினை ஒரு சிலர் வேதாந்தம் எனக் கூறுவர். **வேதாந்தம்** என்பது வேதத்தின் முடிவுகளாகிய உபநிடதங்களையே குறிக்கும். பல பொருள் படும் சூத்திரத்தை அங்ஙனம் படாமைத் தெளித்துரைக்கும் பாடியம் போல உபநிடதங்கள் ஆகிய வேதாந்தத்தின் பொருளைத் தெளிவித்து ஐயமற விளக்குவதே சைவ சித்தாந்தம்.

சைவசித்தாந்தம் **சற்காரிய வாதம்** என்னும் அறிவியலுண்மையினை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது. முன்னுக்குப்பின் முரணுமல், 'மலைவறும் உணர்வு' என நிலவுவது. உலகாயதம் புத்தம் சமணம் மீமாம்சர் மாயாவாதம் முதலிய புறச்சமயக் கொள்கையாளர்கள் உணர்வரியது; சைவம் பாசுபாதம் காளாமுகம் வயிரவம் வாமம் மாவிரதம் என்னும் அகச்சமயக் கொள்கையாளர்கள் அறுவர்க்கும் விளங்கத் தக்கது; தருக்க நெறிமுறைகளிற் பிறழாமல் அவற்றிற்கு இலக்கியம் எனலாம்படி இலங்குவது.

இறைவனும் உயிர்களும் பொன்னும் பணியும் போல **அபேதம்** என்னும் ஏகான்மவாதிகள், சொல்லும் பொருளும் போற் **பேதாபேதம்** என்னும் பரிணமவாதிகள், இருளும் ஒளியும் போல் **பேதம்** என்னும் துவைதிகள் ஆகிய மூவகையினருக்கும் அப்பாற்பட்டது.

கலப்பினுல் உடலின் உயிர்போல **ஒன்ருய்**, பொருட்டன்மையாற் கண்ணின் அருக்கன்போல **வேருய்**, உயிர்க்குயிராதற் றன்மையால் கண்ணொளியின் ஆன்மபோதம் போல **உடனுய்** இறைவன் உயிர்களோடு அத்துவிதமாய்ப் பிரிவின்றி இயைந்து நிற்பன்.

இவ்வத்துவிதம் அபேத சம்பந்தம் ஆகிய **ஐக்கியமும்** அன்றிப், பேதாபேத சம்பந்தம் ஆகிய **தாதான்மியமும்** அன்றிப், பேதசம்பந்தம் ஆகிய **சையோகமும்** அன்றிக், கலப்பும் உடனுதலும் வேருதலுமாகிய மூன்றும் தன்கண் தோன்ற நிற்றல் பற்றி அம் மூன்றற்கும் பொதுவாய், அம்மூன்றுமே தன்கண் தோன்ற நிற்கும். இங்ஙனம் இறைவனோடு உயிர்கட்குள்ள அத்துவித இயைபினை அழகுற விளக்கும் சிறப்புடையது சைவசித்தாந்தமே யாகும்"

புறச்சமயத் தவர்க்கிருளாய், அகச்சமயத் தொளியாய்ப்,
புகல் அளவைக்கு அளவாகிப், பொற்பணி போல் அபேதப்
பிறப்பிலதாய், இருள்வெளிபோற் பேதமும், சொற் பொருள்போற்
பேதாபே தமும் இன்றிப், பெருநூல் சொன்ன
அறத்திறனல் வினைவதாய், உடல்உயிர்கண் அருக்கன்
அறிவொளிபோல் பிறிவரும் அத்துவிதம் ஆகும்
சிறப்பினதாய், வேதாந்தத் தெளிவாம் சைவ
சித்தாந்தத் திறன் இங்குத் தெரிக்க லுற்ரும்

—சிவப்பிரகாசம், 7.

என்றெல்லாம் சைவசித்தாந்தச் செந்நெறியின் தனிப்பெருஞ்சிறப்பினை மிகவும் வலியுறுத்திப் பறைசாற்றிப் பரப்பிய பெருமை, உமாபதி சிவத்திற்கு உரியதெனலாம். தமிழ்ப் பெருஞ் சான்றோர்களுள் ஒருவராகிய உமாபதிசிவத்தின்

அருமை பெருமைகளை அறிந்து தமிழர் அனைவரும் போற்ற வேண்டுவது, தமிழரின் தலையாய கடமைகளுள் ஒன்றாகும்!

வாழ்க உமாபதி சிவம்!
வளர்க சைவ சித்தாந்தம்!

மனிதனாய் ஆணாய்க் கிரேக்கனாய்ப் பிறந்த
மாட்சிமைக்கு அறிஞர்தாம் ஒருவர்
கனிமிக மகிழ்ந்தார்! நலமிகு தமிழன்,
நற்சைவன், சைவசித் தாந்தி
எனஇவண் பிறந்த இனியநற் பேற்றை
எண்ணி, நாம் இறையருள் வழுத்தித்
துனியறு சைவச் செந்தமிழ் வளர்க்கும்
தொண்டுகள் புரிந்துநன் றுய்வாம்! (6)

—தழுவற்செய்யுள், ஆசிரியர்

[சிதம்பரத்தில் நிகழ்ந்த சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் வைரவிழாவில், சைவப் பெரியார் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் தலைமையில், ஆற்றிய சொற்பொழிவைத் தழுவியது. (1-1-66)]

தில்லையில் நிகழ்ந்த சைவசித் தாந்தச்
சிறப்புறு மகாசமா ஜத்தின்
மல்லலுற் றோங்கும் வைரநல் விழாவில்,
மாண்புயர் சிவநெறிச் சான்றோர்
எல்லையில் சீர்த்திச் சச்சிதா னந்தர்
எழிற்பெருந் தலைமையில், எண்ணில்
பல்கலைக் குரிசில் உமாபதி சிவனார்
பற்றிசெய் சொற்பொழிவு ஈதாம்!

—ஆசிரியர்.

(6) "The three blessings for which I am grateful to Fortune are; first that I was born a **human** being and not one of the brutes; second that I was born a **man** and not a woman; third that I was born a **Greek** and not a barbarian."

—**Thales**, in Diogenes Laertu's. Thales, sec. 33.



திருவாமாத்தூர்த் தலபுராண வெளியீட்டு விழாவில் நமது அறநிலைய ஆணையர் அவர்கள் கலந்து கொண்டு உரை நிகழ்த்துதல். (15—12—65)

விடை தெரியுமா?

1. இறைவனின் தடத்த வடிவங்கள் ஆகிய மாகேசுவர வடிவங்கள் எத்தனை? அவை யாவை?

2. சப்த விடங்கத் தலங்கள் என்பன யாவை? அவ்வத் தலங்களுக்கு முறையே உரிய நடனம் எது?

3. சைவ சமய குரவர் நால்வர், சந்தான குரவர் நால்வர் ஆகியோர்க்கு முறையே உரிய திருநட்சத்திரங்களைக் குறிப்பிடுக.

4. சிவாலயங்களில் 'பஞ்ச மூர்த்திகள் புறப்பாடு' 'பஞ்சபுராணம் ஓதுதல்' என்னும் வழக்காறு உள்ளது. பஞ்ச மூர்த்திகள் யாவர்? பஞ்ச புராணம் என்பவை யாவை?

5. சமயநூல்கள் கூறும் முப்பத்தாறு தத்துவங்கள் என்பன எவை எவை? விளக்குக.

6. இறைவனிடத்திற் பக்தி எவ்வெவ் வகைகளிற் செய்யப்படலாம்? (அல்லது) பக்தி எத்தனை வகைப்படும் என்று நூல்கள் கூறுகின்றன?

7. பக்தர்கள் எத்தனை வகைப்படுவர்? அவரவர்களின் இயல்பு யாது?

8. 'திருப்பாவை ஜீயர்' என்னும் சிறப்பினைப் பெற்ற ஸ்ரீராமானுஜர் மிகவும் உவந்த திருப்பாவைப் பாசுரம் எது?

9. ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குரிய இலக்கணங்கள் அல்லது சிறந்த பண்புகள் என்னென்ன?

10. பின்வருவனவற்றுள் எது சரி? எது பிழை? காரணம் கூறுக:—

    1. விநாயகர், விநாயகர்
    2. செந்தில், செந்தி
    3. சரவணபவ, சரஹணபவ
    4. சீனுவாசன், சீநிவாசன், சீனிவாசன்.

—விடை: அடுத்த பக்கம் பார்க்க

விடை விளக்கம்

(1) இறைவனின் தடத்த வடிவங்கள் ஆகிய மாகேசுவர வடிவங்கள் இருபத்தைந்து என நூல்கள் கூறும். அவைகள் வருமாறு:—

1.	நடராஜர்	14	அர்த்தநாரீசுவரர்
2	சந்திரசேகரர்	15	கிராதர்
3	உமாமகேசுவரர்	16	கங்காளர்
4	இடபாரூடர்	17	சண்டேசானுக்கிரகர்
5	கல்யாண சுந்தரர்	18	நீலகண்டர்
6	பிட்சாடனர்	19	சக்கரப்பிரதரர்
7	காமாரி	20	கசமுகாநுக்கிரகர்
8	காலாரி	21	சோமாஸ்கந்தர்
9	திரிபுராரி	22	ஏகபாதர்
10	சலந்தராரி	23	சுகாசனர்
11	மாதங்காரி	24	தட்சிணாமூர்த்தி
12	வீரபத்திரர்	25	இலிங்கோற்பவர்
13	அரியர்த்தர்		

(2) திருவாரூர் திருநள்ளாறு திருநாகைக்காரோணம் திருக்காறுயில் திருக்கோளிலி திருவாய்மூர் திருமறைக்காடு என்னும் ஏழு தலங்களும், சப்த விடங்க ஸ்தலங்கள் என்று கூறப்படும். இதனைப் பின்வரும் வெண்பா ஒன்று உணர்த்துதல் அறிந்தின்புறத் தக்கது. சப்தம் — ஏழு. விடங்கர் — தியாகராஜர்; உளியினாற் செதுக்கப்படாதவர்.

சீரார் திருவாரூர் தென்நாகை நள்ளாறு
காரார் மறைக்காடு காறுயில்—பேரான
ஒத்ததிரு வாய்மூர் உவந்ததிருக் கோளிலி
சத்த விடங்கத் தலம்.

இத் தலங்களுக்கு முறையே உரிய இறைவனின் திருப் பெயர்களும், நடனங்களும் வருமாறு:—

	தலம்.	இறைவன் பெயர்	நடனம்.
1.	திருவாரூர்	வீதி விடங்கர்	அசபா நடனம்
2.	திருநள்ளாறு	நகவிடங்கர்	உன்மத்த நடனம்
3.	திருநாகைக்காரோணம்	சுந்தர விடங்கர்	பாராவார தரங்க நடனம்
4.	திருக்காறுயில்	ஆதிவிடங்கர்	குக்குடநடனம்
5.	திருக்கோளிலி	அவனி விடங்கர்	பிருங்க நடனம்
6.	திருவாய்மூர்	நீலவிடங்கர்	கமல நடனம்
7.	திருமறைக்காடு	புவனிவிடங்கர்	ஹம்ஸபாத நடனம்.

'வகைப்பாடு வாழ்க்கையின் வளம்' (Variety is the spice of Life) என்னும் அடிப்படையில், இறைவன் ஒருவனுக்கே வெவ்வேறு தலங்களில் வெவ்வேறு பெயர்களை வழங்கி, வெவ்வேறு நடனத்திறங்களையும் உரிமைப்படுத்தித் தோன்று

தொட்டுப் போற்றி மகிழ்ந்து ஈடுபட்டு வரும் தமிழ் மக்களின் தலைசிறந்த கடவுளுணர்வும், கலைத் திறனும் நினைத்தொறும் இன்பமும் பெருமிதமும் பயப்பனவாகும்.

(3) அப்பர் சம்பந்தர் சுந்தரர் மாணிக்கவாசகர் என்னும் நால்வரும் சைவ சமய குரவர் ஆவர். இந்நால்வருக்கும் உரிய திருநட்சத்திரங்கள் வருமாறு :—

1.	அப்பர்	—	சித்திரைச் சதயம்
2.	சம்பந்தர்	—	வைகாசி மூலம்
3.	சுந்தரர்	—	ஆடிச் சுவாதி
4.	மாணிக்கவாசகர்	—	ஆனி மகம்

மெய்கண்டார், அருள்நந்திசிவாசாரியர், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவாசாரியர் என்னும் நால்வரும் சைவசமய சந்தான குரவர்கள் எனப்படுவர். இவர்கள் நால்வருக்கும் முறையே உரிய திருநட்சத்திரங்கள் வருமாறு :—

1.	மெய்கண்டார்	—	ஐப்பசிச் சோதி
2.	அருள்நந்தி சிவம்	—	புரட்டாசிப் பூரம்
3.	மறைஞானசம்பந்தர்	—	ஆவணி உத்திரம்
4.	உமாபதி சிவம்	—	சித்திரை அத்தம்.

சித்திரைச் சதயம் அப்பர் ; சிறந்த வைகாசி மூலம்
அத்தரைப் பணிசம்பந்தர் ; ஆனிமா மகத்தில் அந்த
முத்தமிழ் வாதவூரர் ; முதியநல் ஆடி தன்னிற்
சுத்தமாம் சோதி நாளில் சுந்தரர் கயிலை சேர்ந்தார்.

சித்திரை அத்தம் உமாபதி ; ஆவணித் திங்கள்தனில்
உத்திரம் சீர்கொள் மறைஞான சம்பந்தர் ; ஓதுகன்னிச்
சுத்தமெய்ப் பூரம் அருள்நந்தி ; ஐப்பசிச் சோதிதன்னில்
வித்தக மெய்கண்ட தேவர் சிவகதி மேவினரே.

(4) சிவபிரான், அம்பிகை. விநாயகர், முருகர், சண்டேசுரர் என்னும் ஐந்து மூர்த்திகளின் திருவுருவங்களையும் உலா எழுந்தருளுவித்தலைப் '**பஞ்சமூர்த்திகள் புறப்பாடு**' என்பர்.

1. மூவர் அருளிய தேவாரம். 2. மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம்—திருக்கோவையார். 3. கருவூர்த் தேவர் முதலிய ஒன்பதின்மர் பாடியருளிய திருவிசைப்பா. 4. சேந்தனுர் அருளிய திருப்பல்லாண்டு. 5. சேக்கிழார் இயற்றிய பெரிய புராணம் என்னும் ஐந்து நூல்களினின்றும் ஒவ்வொரு பாடலைப் பூசை வேளைகளிற் காலச் சுருக்கங் கருதிப் பாடுதல் '**பஞ்சபுராணம் ஓதுதல்**' எனப்படும்.

(5) பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம் என்னும் **பூதங்கள்** ஐந்தும், சப்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தம் என்னும் **தன்மாத்திரைகள்** ஐந்தும், வாக்கு பாதம் பாணி பாயு உபத்தம் என்னும் **கன்மேந்திரியங்கள்** ஐந்தும், சுரோத்திரம் துவக்கு சட்சு சிங்குவை ஆக்கிராணம் என்னும் **ஞானேந்திரியங்கள்** ஐந்தும், மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் **அந்தக்கரணங்கள்** நான்கும் ஆகிய 24 தத்துவங்களும், **ஆன்ம தத்துவங்கள்** எனப்படும்.

காலம் நியதி கலை வித்தை அராகம் புருடன் மாயை என்னும் 7 தத்துவங்களும் **வித்தியா தத்துவங்கள்** எனப் பெயர் பெறும். சுத்தவித்தை ஈசுரம் சாதாக்கியம் சக்தி சிவம் என்னும் 5 தத்துவங்களும் **சிவ தத்துவங்கள்** என வழங்கும். ஆன்ம தத்துவம் 24, வித்தியா தத்துவம் 7, சுத்த தத்துவம் 5 -ஆக மொத்தம் தத்துவங்கள் 36 ஆதல் காணலாம்.

(6) பாகவதம், நாரத பக்தி சூத்திரம் ஆகிய நூல்கள் பக்தியினைப் பின் வருமாறு 9 வகைப்படுத்தி விளக்கிக் கூறுகின்றன.

1. யாதனம் — கோயில்கள் எடுப்பித்தல், திருநந்தவனம் அமைத்தல் முதலிய திருப்பணிகள் செய்தல்.
2. சிரவணம் — இறைவனின் வரலாறும் பெருமையும் பற்றிக் கூறும் நூல்களைத் தக்கவர்கள் சொல்லக் கேட்டு மகிழ்தல்.
3. கீர்த்தனம் — இறைவனின் திருநாமங்களை உச்சரித்தல், இசையுடன் பாடல்களைப் பாடுதல்
4. அர்ச்சனம் — நீராட்டிப் பூச்சூட்டி நிவேதனம் படைத்துப் பூசித்தல்
5. ஸ்துதி — இறைவனைப் புகழ்ந்து தோத்திரப் பாடல்களை இயற்றுதல் அல்லது பாடுதல்
6. வசனம் — இறைவனின் அருட்பெருமைகளை எடுத்துப் பலருக்கும் கூறி விளக்குதல்
7. வந்தனம் — இறைவனை அஷ்டாங்கம், சாஷ்டாங்கம் முதலிய வகைகளிற் பணிந்து வணங்குதல்
8. ஸ்மரணம் — இறைவனை எப்பொழுதும் மறவாமல் இருத்தல்
9. தியானம் — சுகாசனம் முதலிய நிலைகளில் அமர்ந்து, மனத்தை ஒருமுகப்படுத்தி, அன்பு செலுத்தி இறைவனை வழிபடுதல்

(7) பக்தர்கள் பொதுவாக மூவகைப்படுவர். ஐச்வர்யார்த்திகள், கைவல்யார்த்திகள், முமுட்சுக்கள் என அம் மூவகையினரையும் நூல்கள் குறிக்கும்.

(அ) உலகத்திற் பலவகைச் செல்வங்களைப் பெற விரும்பி இறைவனிடம் பக்தி செய்து வழிபடுவோர் **ஐச்வர்யார்த்திகள்** எனப்படுவர். இவர்களிலும் இரு வகை உண்டு. ஒரு வகையினர் முன்பு தாம் பெற்றிருந்த செல்வத்தை இழந்துவிட்டு, அதனைப் பெறுவதற்காக விரும்பியிருப்பவர்கள். இவர்கள் ப்ரஷ்டைச்வர்ய காமர்கள் எனப்படுவர். மற்றொரு வகையினர் தாம் வறியராக இருந்து வருதலாற் புதிதாகச் செல்வ வளம் பெறுதல் வேண்டும் என்று விரும்பியிருப்பவர்கள். இவர்களுக்கு அபூர்வைச்வர்ய காமர்கள் என்று பெயர்.

அண்டக் குலத்துக் கதிபதி யாகி அசுரர் இராக்கதரை
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த இருடீகேசன் தனக்குத்
தொண்டக் குலத்திலுள்ளீர் வந்தடி தொழுது ஆயிர நாமம் சொல்லிப்
பண்டைக் குலத்தைத் தவிர்ந்து பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு என்மினே

என்னும் பாசுரத்தில், பெரியாழ்வார் இவ்விருவகை ஐச்வர்யார்த்திகளையும் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

(ஆ) உலகத்தில் தனித்திருந்து ஆத்மாநுபவம் ஆகிய கைவல்யம் ஒன்றனை மட்டுமே விரும்பி, அதற்காகப் பக்தி செய்பவர்கள் **கைவல்யார்த்திகள்** என வழங்கப் பெறுவர்.

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து எங்கள் குழாம்புகுந்து
கூடும் மனமுடையீர்கள் வரம்பு ஒழிவந்து ஒல்லைக் கூடுமினோ!
நாடும் நகரமும் நன்கறிய நமோ நாராயணாய என்று
பாடும் மனம் உடைப் பத்தர் உள்ளீர் வந்து பல்லாண்டு கூறுமினே!

என்னும் பாசுரத்தால், பெரியாழ்வார் கைவல்யார்த்திகளை மங்களாசாசனத்துக்கு அழைக்கின்றார்.

(இ) அழிந்து போகக் கூடியதும் துன்பம் நிறைந்ததுமான இவ்வுலக வாழ்க்கையில் வெறுப்பும், அழியாததும் இன்பம் நிறைந்ததுமான வீடு பேற்றில் விருப்பும் மிக்கவராய், எம்பெருமானைச் சார்ந்து அநுபவிக்கும் அநுபவத்தையே விரும்பி நிற்கும் ஞானிகள் **முமுட்சுக்கள்** எனப் பெறுவர்.

வாழாட்பட்டு நின்றீர் உள்ளீரேல் வந்து மண்ணும் மணமும் கொண்மின்
கூழாட்பட்டு நின்றீர்களை எங்கள் குழுவினில் புகுதல் ஒட்டோம்:
ஏழாட்காலும் பழிப்பிலோம் நாங்கள் இராக்கதர் வாழ் இலங்கை
பாழாளாகப் படைபொருதானுக்குப் பல்லாண்டு கூறுதுமே.

என்னும் பாசுரத்தில், ஸ்ரீ பெரியாழ்வார் "வாழாட்பட்டு நின்றீர்" என இவர்களைக் குறிப்பிடுகின்றார்.

(8) ஸ்ரீ ராமாநுஜர் திருப்பாவையில் மிகவும் ஈடுபாடு கொண்டவர். அதனாலேயே அவருக்குத் 'திருப்பாவை ஜீயர்' என்னும் சிறப்புப் பெயர் ஏற்பட்டது. எனினும் அவர்,

உந்தும் மதகளிற்றன் ஓடாத தோள்வலியன்
நந்தகோ பாலன் மருமகளே நப்பின்னாய்
கந்தம் கமழும் குழலீ கடைதிறவாய்
வந்தெங்கும் கோழி அழைத்தனகாண் மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயில்இனங்கள் கூவின காண்
பந்தார் விரலி! உன் மைத்துனன் பேர்பாடச்
செந்தா மரைக்கையால் சீரார் வளைஒலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்தேலோர் எம்பாவாய்!

என்னும் பாசுரத்தினைத் தனிச் சிறப்பாக மிகவும் உவந்திருந்தார்.

ஸ்ரீ ராமாநுஜர் திருப்பாவையை அநுசந்தித்துக்கொண்டு, மாதுகரத்திற்கு எழுந்தருள்வது வழக்கம். அங்ஙனம் ஒருநாள் **பெரிய நம்பி** திருமாளிகைக்கு எழுந்தருளினர். அப்போது அங்குக் கதவு தாள் இட்டிருந்தது. அந்நிலையில் திருப்பாவை அநுசந்தான ஒலியைக் கேட்டுப் பெரிய நம்பிகளின் திருமகளாரான **அத்துழாய் அம்மை,** கதவைத் திறந்தார். இராமாநுஜர் அவளைக் கண்டவாறே மூர்ச்சித்து விழுந்தார். அதுகண்டு அத்துழாயம்மை பெரியநம்பி பக்கலிற் சென்று, "கதவு திறந்த என்னைக் கண்டதும் ஜீயர் மூர்ச்சித்து விழுந்தார். இஃது என்னே?"

என்று அச்சமும் அவலமும் தோன்றக் கூறி நின்றார். பெரிய நம்பிகள் பேரறிவின ராதலால், சிறிதும் பதறாமல், "ஜீயர் '**உந்தும் மதகளிறன்**' எனத் தொடங்கும் பாசுரத்தை அநுசந்தித்துக்கொண்டு இருந்திருக்க வேண்டும். அதன்கண்,

> பந்தார் விரலி! உன் மைத்துனன் பேர்பாடச்
> செந்தா மரைக்கையாற் சீரார் வளை ஒலிப்ப
> வந்து திறவாய் மகிழ்ந்தேலோர் எம்பாவாய்

என்னும் வரிகளை அநுசந்தித்துக் கொண்டிருக்கும் அளவில், கதவு திறந்த நின்னைக் கண்டு நப்பின்னைப் பிராட்டியையே தாம் சேவிக்கப் பெற்றதாகக் கொண்டு ஜீயர் பக்திப் பரவசத்தால் மூர்ச்சித்து விழுந்தனராதல் வேண்டும்" என்று அத்துழாயம்மைக்கு உண்மையை விளக்கியருளினார். இராமாநுஜரின் பக்தியுணர்வின் சிறப்பினையும் பெரிய நம்பிகளின் பேரறிவின் பெற்றியினையும் விளக்கும் இந்நிகழ்ச்சி கருதி, வைணவப் பெரியோர்கள் இப்பாசுரத்தினை இராமாநுஜர் தனிச் சிறப்பாக மிகவும் உவந்த பாசுரம் என்று பாராட்டிக் கூறுவர். **மாதுகரம்** — மலர்தோறும் சென்று வண்டு தேனைச் சேர்ப்பது போல, வீடுதோறும் சென்று பெரியோர்கள் பிட்சை ஏற்பது. **மதுகரம்** — வண்டு.

(9) ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குரிய இலக்கணங்கள் அல்லது சிறந்த பண்பு நலங்கள் பின் வருவன ஆகும். அவை வருமாறு :—

(அ) எம்பெருமானைத் தவிர வேறு பொருள்களில் உள்ள பற்றுக்கள் யாவற்றையும் அறவே விடுதல்.

(ஆ) எல்லா உயிர்களையும் எக்காலத்திலும் பாதுகாக்கும் எம்பெருமான் தவிர, வேறொருவரும் தமக்குத் தஞ்சம் அல்லர் எனத் தெளிந்து, அவனையே உபாயமாகப் பற்றுதல்.

(இ) பகவான் சரம சுலோகத்தில் 'என்னையே உபாயமாகப் பற்று' எனக் கட்டளையிட்டிருத்தலால், அவனையே உறுதியாகப் பற்றியுள்ள தமகககு வீடுபேறு தவறாமற் கிடைக்கும் என நம்பித் துணிந்திருத்தல்.

(ஈ) இங்ஙனம் வீடுபேறு தப்பாமற் கிடைக்கும் என்று நம்பித் துணிந்திருந்தாலும். அதனை அடைதற்கு ஆர்வம் மிகுந்து விரைந்து முயலுதல்.

(உ) வீடுபேறு அடைதலில் மனம் விரைந்து நிற்பினும், உலகத்தில் வாழும் நாட்களில், எம்பெருமான் உவந்து கோயில் கொண்டிருக்கும் திவ்ய தேசங்களில் மிகவும் ஈடுபாடு கொண்டு, அவ்வத் திவ்ய தேசங்களில் விளங்கும் எம்பெருமான்களின் சிறந்த குணநலன்களை அனுபவித்துக்கொண்டு, மன மொழி மெய்களினால் கைங்கரியம் செய்து வருதலையே தமக்குப் பொழுது போக்காகக் கொள்ளுதல்.

(ஊ) ஞானம் அநுட்டானம் இவை நன்றாகவேயுடைய ஸ்ரீவைஷ்ணவர்களைக் காணின் "தீயில் தாமரை மலர்ந்தன்ன" இவ்வுலகிலும், இத்துணைச் சிறப்பு வாய்ந்தார் சிலர் உளரோ? என அவர்கள் பெருமையைப் பாராட்டி, அவர்களிடம் அழுக்காறு ஒழிந்து, அவர்கள் தாழ்குலத்தினராக இருப்பினும், அவர்கள்பாற் கலந்து உவகையுடன் அன்பு பாராட்டுதல்.

(எ) தள்ளத் தக்கன இவை, கொள்ளத் தக்கன இவை எனத் தெள்ளிதின் விளக்கும் திருமந்திரத்திலும். அதை விரித்துச் சொல்லும் துவயத்திலும் ஊன்றி நிற்றல்.

(ஏ) ஆசாரியாபிமானம் ஒழியக் கதியில்லை, ஆசாரியாபிமானமே உத்தாரகம் என்றுணர்ந்து, தன்னை ஏற்றுப் பணி கொள்ளும் ஆசாரியன்பால் மிக்க அன்பு பாராட்டுதல்.

(ஐ) இரும்பைப் பொன்னுக்குவாரைப் போன்று, இழிந்த தன்னை ஏற்று உபதேசத்தினால் திருத்தி உய்வித்த ஆசாரியனிடத்திலும். இத்தகைய ஆசாரியனிடம் தன்னைக் கொண்டுபோய்ச் சேர்த்த ஈசுவரனிடத்திலும் நன்றியுடையவனாய் இருத்தல்.

(ஒ) சித்து அசித்து ஈசுவரன் என்னும் மூன்றையும் பொருளாகக் கொண்டுள்ள ஞானமும், உலகப் பொருள்களில் பற்றற்ற தன்மையும், இவை இரண்டும் நமக்கு வாய்த்துள்ளன என்று இறுமாப்புக் கொள்ளாமையாகிய சாந்தியும், அமையப்பெற்ற பரம பாகவதரோடு கூடி வாழ்தல்.

> "புறம்புண்டான பற்றுக்களை அடைய வாஸனையோடே விடுகையும், எம்பெருமானையே தஞ்சம் என்று பற்றுகையும், பேறு தப்பாதென்று துணிந்திருக்கையும், பேற்றுக்கு த்வரிக்கையும், இருக்கும் நாள் உகந்தருளின நிலங்களிலே ப்ரவணனாய்க் குணாநுபவ கைங்கர்யங்களே போது போக்காகையும், இப்படி இருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் ஏற்றம் அறிந்து உகந்திருக்கையும், திருமந்த்ரத்திலும் த்வயத்திலும் நியதனாகையும், ஆசார்ய ப்ரேமம் கனத்திருக்கையும், ஆசார்யன் பக்கலிலும் எம்பெருமான் பக்கலிலும் க்ருதஜ்ஞனாய்ப் போருகையும், ஜ்ஞாநமும் விரக்தியும் சாந்தியும் உடையனாய் இருக்கும் பரம ஸாத்விகரோடே ஸஹவாஸம் பண்ணுகையும், ஸ்ரீவைஷ்ணவ அதிகாரிக்கு அவச்ய அபேக்ஷிதம்."
>
> —ஸ்ரீ பிள்ளைலோகாசார்யர்.

(10) (அ) விநாயகர் என்பதே சரி. வினாயகர் என்பது பிழை. **வி + நாயகர்** : மேலான தலைவர், தனக்கு மேலே ஒரு தலைவர் இல்லாதவர் எனப் பொருள்படும். வி – மேலான, இன்மை. நாயகர் – தலைவர். 'னகாரம்' மொழிக்கு முதலில் வராது. ஆதலின் **வி + னாயகர்** எனப் பிரித்தல் இயலாது. எனவே வினாயகர் என்பது பிழை.

(ஆ) செந்தி என்பது பிழை. செந்தில் என்பதே சரி. 'முருகனே செந்தி முதல்வனே மாயோன் மருகனே' என்று சிலர் தவறாகப் பாடுவர். 'செந்தில் முதல்வனே' என்றே பாடுதல் வேண்டும். ஒரு சிலர் ஜெயந்தி — செயந்தி — செந்தி என மருவி வந்ததென வழு அமைதி கூறுவர். எனினும் "நம் செந்தில் மேய வள்ளி மணாளற்குத் தாதை கண்டாய்" எனத் திருநாவுக்கரசரும், "சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும் ஏரகமும் நீங்கா இறைவன் கை வேல் அன்றே" என இளங்கோவடிகளும் பாடியிருத்தலின், **செந்தில்** என்பதே பொருத்தமும் திருத்தமும் உடையதாகும். 'செந்தில் ஆண்டவன்' 'செந்தில் அதிபன்' என்னும் வழக்கும் காணலாம். 'செம்மையான இல்' 'செம்மையான

ஊர்' என்னும் பொருளில் 'செந்தில்' 'செந்தூர்' என்று வழங்கப் பெறுகின்றது. செம்மை+த்+இல். த் என்பது எழுத்துப்பேறு. செம்மை நிறம் உடைய பசு, செம்மை நிறம் உடைய ஆம்பல் என்பன தகர எழுத்துப்பேறு பெற்று, சேதா எனவும், சேதாம்பல் எனவும் வருதல் போல்வது இது.

(இ) சரவணபவன் என்பதே சரி. சரஹணபவன் என்பது பிழை. சரம்+வனம்+பவன். சரம் – நாணல். வனம் – காடு. பவன் – பிறந்தவன். இராம+ அயனம் இராமாயணம் என்றும், நார+அயனன் நாராயணன் என்றும் வருதல் போல, சரவனம் என்பது சரவணம் என்று வரும். சரவணப் பொய்கையின்கண் திருவவதாரம் செய்தருயளிமையால் முருகனுக்குச் **சரவணபவன்** எனப் பெயர் வழங்குவதாயிற்று. இதனைப் பொருளறியாமையினுற் சிலர் சரஹணபவன் என்று கூறுவது பிழையாகும்.

மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினுல் அளக்கொணுமல்
நிறைவுடன் யாண்டும் ஆகி நின்றிடும் நிமல மூர்த்தி
அறுமுக உருவாய்த் தோன்றி அருளொடு சரவணத்தின்
வெறிகமழ் கமலப் போதில் வீற்றிருந் தருளி னுனே.

ஏவர்தம் பாலும் இன்றி எல்லைதீர் அமலற்கு உள்ள
மூவிரு குணனும் சேய்க்கு முகங்களாய் வந்த தென்னப்
பூவியல் சரவ ணத்தண் பொய்கையில் வைகும் ஐயன்
ஆவிகள் அருளும் ஆற்றல் அறுமுகங் கொண்டான் அன்றே.

—கந்தபுராணம்.

(ஈ) சீநிவாசன் என்பதே சரி. சீனுவாசன், சீனிவாசன் என்பன பிழை. ஸ்ரீநிவாஸன் என்பதன் தமிழ் வடிவமே **சீநிவாசன்** என்பது. "அகல கில்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கையுறை மார்பா" என்று ஆழ்வார் அருளிச் செய்தபடி, திருமகள் வாழ்தற்கு இடமாக இருப்பவன் ஸ்ரீநிவாஸன், சீநிவாசன் எனப்படுவன். ஸ்ரீ, சீ – திருமகள். நிவாசம் – சிறப்புற வாழ்தல். சீனி+வாசன் எனப் பிரிப்பின் சர்க்கரையின் வாசனையை விரும்புபவன் என்றும் பொருள்படுமாதலின், அது பிழை. 'சீனு' என்பது பொருளற்றது.

—ஆசிரியர்.

[குறிப்பு: அடுத்த மாத இதழில் இருந்து "**பரி வார தேவதைகள்**" என்னும் பொருள் பற்றிய விளக்கக் கட்டுரைகள் தொடர்ந்து வெளி வரும்.

—ஆசிரியர்]

"எங்கு எழில் என் ஞாயிறு?"

சிறந்த கவிஞர்கள் உயர்ந்த கருத்துக்களைக் கவிதைகளாக வெளியிடுகின்றார்கள். அங்ஙனம் உயர்ந்த புதிய கருத்து விளக்கங்களை அளிக்கும் கவிஞர்கள், அக் கருத்துக்களை வெளியிடுவதற்கு ஏற்ற இனிய சொற்களையும் சொற்றொடர்களையும் கூட, ஆராய்ந்து கண்டு அமைத்து நமக்கு அழகுறப் படைத்துக் கொடுக்கின்றனர். அதன் பயனாக ஒரு மொழியின் சொற் செல்வ வளம், பல வகைகளில் வளர்ந்து விரிவடைகின்றது. **ஷேக்ஸ்பியர்** போன்ற கவிஞர்கள் பலரும் தாமே புதிதாகப் படைத்து முதன்முதலாக வழங்கிய எத்தனையோ பல அழகிய இனிய சிறந்த சொற்றொடர்களை (Felicitous phrases), மேலை நாட்டார் பெரிதும் போற்றி மதித்து அவ்வப்போது எடுத்துக் கையாண்டு மகிழ்தலைக் காண்கின்றோம்.

அம்முறையில், மாணிக்கவாசகர் அழகுறப் படைத்து முதன்முதலாக வழங்கிய அரிய தொடர்கள் பலவற்றுள் **"எங்கு எழில் என் ஞாயிறு?"** என்பதும் ஒன்றாகும் எனலாம். இத் தொடரின் சிறப்பினை என்னென்பது? எவ்வகையில் விளக்குவது? தமிழ் மொழியானது பழமையும் பெருமையும் வாய்ந்த இலக்கியங்கள் பலவற்றை யுடையது. தமிழிலக்கியங்களுள், சங்க இலக்கியங்கள் தனிச் சிறப்புடையவை. தெய்வ நல மாட்சிமையுற்றுத் திகழ்தலால், சங்க இலக்கியங்களிலும் ஒரு வகையில் திருமுறை நூல்கள் பெருமை வாய்ந்தவை. அத் திருமுறைகளிலும், பல வகையில் திருவாசகம் அருமைப்பாடு மிக்கது. திருவாசகத்திலும், திருவெம்பாவை ஒப்புயர்வற்றுப் பிறங்குகின்றது. அதன்கண் வரும் அரிய பல தொடர்களுள் 'எங்கு எழில் என் ஞாயிறு?' என்னும் இத்தொடர், இனிமை நிரம்பித் திகழ்வது எனில், மிகையாகாது.



ஸ்ரீ ஒப்பிலியப்பன் கோயில் திருக்கல்யாண மகோற்சவம் 50-ஆம் ஆண்டு நிறைவு விழாவில், நமது அறநிலைய ஆணையர் அவர்களின் தலைமையில், தமிழவேள் உயர் திரு P.T. ராஜன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்து, உரை நிகழ்த்துதல். (1-11-65)

திருவெம்பாவைப் பாடல்கள், தொன்று தொட்டுத் தமிழ் மக்களால் பெரிதும் போற்றிப் பாராட்டப் பெற்று வருகின்றன. அதன்கண் வரும் அரிய சொற்றொடர்கள் பலவற்றை, ஆழ்ந்து இனிது ஆராய்ந்து சுவைத்துத் தமிழ்ச் சான்றோர்கள் பலரும் போற்றியுள்ளனர். உதாரணமாக, ஒன்றை மட்டும் ஈண்டுக் காட்டுதல் சாலும்.

"ஆதியும் அந்தமும் இல்லா
அரும்பெரும் சோதியை..."

எனவரும் திருவெம்பாவைத் தொடக்கப் பாடலின் தொடக்கச் சொற்றொடர்தானே, வேதாந்த சித்தாந்த சமரச ஞான வித்தகச் சான்றோர் ஆகிய தாயுமான சுவாமிகள் திருவுள்ளத்தினைப் பெரிதும் கவர்ந்து விட்டிருக்கின்றது! சுவாமிகள் இதன் சொற்பொருட் சுவை நலங்களில் மிகவும் ஈடுபட்டு, இதனை வியந்து பாராட்டி இன்புறுகின்றார்.

"ஆதியந்தம் இல்லா
அரியபெருஞ் சோதிஎன்ற

நீதிமொழி கண்டு, அதுவாய்
நிற்கும்நாள் எந்நாளோ?"

கடவுள் சோதி வடிவினர்; அச்சோதி ஞாயிறு திங்கள் தீ முதலிய ஏனைச் சோதிகள் போல்வது அன்று; அவற்றிற் கெல்லாம் மூலமும் முதலுமாய் விளங்குவது. ஆதலின் அஃது அரிய சோதி, பரஞ்சோதி. ஏனைச் சோதிக் கெல்லாம் தோற்றமும் ஒடுக்கமும், ஆதியும் அந்தமும் உண்டு. கடவுள் ஆகிய சோதிக்கு ஆதியந்தமோ, தோற்ற ஒடுக்கமோ இல்லை. இனைய பல நுண்ணிய தத்துவ உண்மைகளை உணர்த்திக் கொண்டு நிற்றலின், இஃது ஒரு பெரும் நீதிமொழி. இந்நீதி மொழியின் உண்மைகளை ஊன்றி யுணர்ந்து, சோதி வடிவினனாகிய கடவுளை வழிபட்டுச் சோதியாகக் கலத்தலே முத்திப் பேறு. அம்முத்திப் பேற்றை அடையும் நாள் எந்நாளோ? எனத் தாயுமானவர், இப்பாடலில் ஏக்கற்று நின்று இயம்புதல் காணலாம். இவ்வாற்றால் தாயுமானவர்க்குத் திருவெம்பாவைப் பாடல்களிலும், அதன்கண் வரும் சிறந்த பல அழகிய அரிய தொடர்களிலும் எத்துணை ஈடுபாடு இருந்தது என்பது புலனாகும்.

இங்ஙனமே, சான்றோர்கள் பலருக்குச் சுவை விளைவித்து உவகையூட்டிய சிறந்த தொடர், 'எங்கு எழில் என் ஞாயிறு?' என்பது. திருவெம்பாவையில் "உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்" எனத் தொடங்கும் பாடலின் இறுதியடியில் அமைந்து வரும் இத்தொடரைப் பெருமக்கள் பலர் வியந்து மகிழ்ந்துள்ளனர்.

திருவெம்பாவை என்பது, வைகறையில் துயிலெழுந்து நீராடச் செல்லும் கன்னிப் பெண்கள் உலகம் இனிது வாழ்தற்கு மழைபெய்தல் குறித்தும், தம்முடைய வாழ்வு செம்மையுற அமைதற்குத் தாம் நல்ல கணவன்மாரை அடைதல் குறித்தும், நோன்பிருந்து இறையருளை வழிபட்டுப் பரவும் நிலையில் இயன்றது. "முன்னிக் கடலைச் சுருக்கி" என்னும் பாடல், உலகநலம் விரும்பி மழை பெய்யுமாறு வேண்டுதலை யுணர்த்துகின்றது. நல்ல கணவன்மாரை அடைதல் குறித்து இறையருளை வழுத்தும் முறையில் 'முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளே' என்னும் பாடலும், 'உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்' என்னும் பாடலும் அமைந்துள்ளன.

இவ் விரண்டாவது பாடலில்தான் இத் தொடர் அமைந்து காணப்படுகின்றது. 'பெருமானே! நின்பால் நாங்கள் ஒன்றை விண்ணப்பித்துக் கொள்ளுகின்றோம். கேட்டருளல் வேண்டும். நின் அன்பர்களை எங்களுக்குரிய கணவர்களாக வந்து வாய்த்தல் வேண்டும். எம்முடைய கொங்கைகள் நின் அன்பர்களின் தோள்களையே யன்றிப் பிறருடைய தோள்களைச் சேர்தல் ஆகாது. எம்முடைய கைகள் உனக்கு மட்டுமே பணி செய்தல் வேண்டும். எம்முடைய கண்கள் இரவிலும் பகலிலும் நின்னைத் தவிர வேறு பிறிது எதனையும் நோக்குதல் கூடாது.

இவ்வாறு யாம் விரும்புதலையே இவ்வுலகில் எமக்கு நீ அருள் செய்து விடுவாயாயின், சூரியன் எந்தத் திசையில் தோன்றினாலும் பின்னர் எங்களுக்குக் கவலையில்லை'' என்பது இப்பாடலின் பொருள்.

சூரியன் திசைமாறித் தோன்றினாலும், ஒரே சமயத்திற் பல திசைகளில் சூரியன் தோன்றி யிருப்பது போலக் காணப் பட்டாலும், அஃது உலகிற்கு நேர இருக்கும் பெருந் தீங்கினை யுணர்த்தும் என்பது பண்டைத் தமிழ் மக்களின் நம்பிக்கைகளுள் ஒன்று. **கோவூர் கிழார்** என்னும் புலவர் பெருமான் புறநானூற்றுப் பாடல் ஒன்றில், எட்டுத் திசையினும் எரி கொள்ளி எரிந்து வீழ்தல், பெருமரம் ஒன்று இலைகள் உதிர்ந்து அதன் நீண்ட கிளைகள் வற்றித் தீப்பற்றுதல், சூரியன் பல இடங்களிற் செறிந்து தோன்றுதல், அஞ்சத்தக்க ஆந்தை முதலிய பறவைகள் குரலிடுதல் முதலிய நனவு நிகழ்ச்சிகளும்; பற்கள் நிலத்தின்கண் வீழ்தல், எண்ணெயை மயிரின்கண் வார்த்தல், பன்றியின்மேல் ஊர்தல், ஆடையைக் களைதல், படைக் கலன்கள் தாம் இருந்த இடத்தினின்று பெயர்ந்து விழுதல் போன்ற கனவுக் காட்சிகளும், தீங்கு பயப்பனவாகும் என்று குறிப்பிடுகின்றார்.

> " திசைஇரு நான்கும் உற்கம் உற்கவும்,
> பெருமரத்து
> இலையில் நெடுங்கோடு வற்றல் பற்றவும்,
> வெங்கதிர்க் கனலி துற்றவும் பிறவும்,
> அஞ்சுவரத் தகுந புள்ளுக்குரல் இயம்பவும்,
> எயிறுநிலத்து வீழவும் எண்ணெய்
> ஆடவும்,
> களிறுமேற் கொள்ளவும், காழகம் நீப்பவும்,
> வெள்ளி நோன்படை கட்டிலொடு கவிழவும்,
> கனவின் அரியன காணூ..."
>
> —புறநானூறு, 41.

இங்ஙனம் 'சூரியன் திசை மாறித் தோன்றினாலும், ஒரே சமயத்திற் பல திசைகளில் தோன்றினாலும் நேரக்கூடிய தீங்கிற்காக, நாங்கள் ஒரு சிறிதும் கவலைப்படமாட்டோம். நின் அன்பர்களாகிய நல்ல கணவன்மார்களே எங்களுக்குக் கிடைக்குமாறு நீ அருள் செய்து விட்டால் எங்களுக்கு அதனின் மிக்க பேறு வேறு இல்லை. அப்பேற்றை எமக்கு நல்கி யருளுதல் வேண்டும்' எனக் கன்னிப் பெண்கள் இறையருளை வழுத்தும் நிலையிலே வந்து அமைந்துள்ளதனால், இத் தொடர்ப் பொருளின் பொருத்தமும் சிறப்பும் தெளியப்படும்.

(1) இத்துணைப் பொருத்தமும் சிறப்பும் அமைந்துள்ளமை பற்றியே, இவ்வினிய தொடரைப் பலரும் உவந்து எடுத்துப் போற்றி யிருக்கக் காண்கின்றோம்.

> திருத்தக்க மாமுனிசிந் தாமணியும் கம்பன்
> விருத்தக் கவித்திறமும் வேண்டேம்—பெருத்தக்க
> கொங்குவேள் மாக்கதை கேளேம் குறள்
> அணுகேம்
> எங்கெழிலென் ஞாயிறு எமக்கு?

என்னும் ஒரு தனிப்பாடலில், இத்தொடர் அமைந்து வந்திருத்தல் அறிந்து இன்புறற்பாலது.

(2) சீவக சிந்தாமணியிற் கனக மாலையார் இலம்பகத்தில், சீவகனின் தாய் ஆகிய விசயையின்பால் சீதத்தன் புத்திசேனன் பதுமுகன் விசயதத்தன் என்பாரை அறிமுகம் செய்து வைத்துத், தாம் சீவகனுக்குற்ற நண்பர்கள் ஆகப் பெற்ற செய்தியைத் **தேவதத்தன்** என்பான் கூறுவதாக வரும் பகுதியில், திருத்தக்கதேவர் இத்தொடரை எடுத்துப் பின் வருமாறு கையாண்டிருத்தல் காணலாம்.

> எங்கள்வினை யால்இறைவன் வீடியஅஞ் ஞான்றே
> எங்களுயிர் நம்பியொடு யாங்கள்பிறந் தேமா
> எங்கள்தமர் நம்பிக்கிவர் தோழரென ஈந்தார்
> எங்கெழிலென் ஞாயிறுஎன இன்னணம்
> வளர்ந்தேம்

(3) சைவ சித்தாந்த சந்தான ஆசிரியர்களுள் ஒருவரும், சிவஞான சித்தியார் என்னும் தலைசிறந்த தத்துவ நூலை இயற்றியவரும் ஆகிய அருள் நந்தி சிவாசாரியர் அவர்கள், சீவன் முத்தர்களின் இயல்பினை விளக்கும் இடத்தில், இத்தொடரை எடுத்தாண்டிருக்கின்றார்.

"புண்ணியம் நம்மை மேலே உயரச் செய்யும். பாவம் நம்மைக் கீழே தள்ளும். புண்ணிய வடிவினன் ஆகிய இறைவனை வழிபடுதலால் எய்தும் புண்ணியம் மிகவும் சிறந்துயர்ந்தது. அதனால் ஞானம் எய்தும். அங்ஙனம் ஞானம் அடைந்து, முறையே பொன் விலங்கும் இரும்பு விலங்கும் போன்ற புண்ணியம் பாவம் என்னும் இரண்டினையும் அறுத்தொழித்து, நரகம் சுவர்க்கம் நிலவுலகம் ஆகிய எதன்கண்ணும் பிறத்தலினின்று நீங்கி, இவ்வுலகில் சீவித்துக்கொண்டு இருக்கும்போதே முத்தியை அடைந்து விட்ட நிலையிலுள்ளவர் **சீவன் முத்தர்கள்.** தம் உடல் உள்ள அளவும், இறைவனது வியாபக நிறைவின்கண் அடங்கிக் கலந்திருந்து, தம் உடல் கழியப் பெற்ற நிலையில் இறைவன் போலவே எங்கும் வியாபித்து நிற்கப் பெறுவர். தமக்கென ஒரு குறைவும் இல்லாத நிலையில், அவர்கள் 'இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை' என்றபடி, **சூரியன் எங்கே உதித்தால் தான் நமக்கு என்ன?** என்று கவலையற்று, மகிழ்ந்திருப்பார்கள்' என்று அருள் நந்தி சிவம் கூறுகின்றார்.

புண்ணியம்மேல் நோக்குவிக்கும்; பாவம்கீழ்
நூக்கும்;
புண்ணியனைப் பூசித்த புண்ணியத்தி னலே
நண்ணியஞா னத்தினல் இரண்டினையும்
அறுத்து,
ஞாலமொடு கீழ்மேலும் நண்ணுன் ஆகி,
என்னும்இக லோகத்தே முத்திபெறும்
இவன்தான்,
எங்கெழிலென் ஞாயிறு எமக்கென்று
குறைவின்றிக்,
கண்ணுதல்தன் நிறைவதனிற் கலந்து, காயம்
கழிந்தக்கால், எங்குமாய்க் கருதரன்போல்
நிற்பான்.

—சிவஞான சித்தியார், 283.

(4) இவ்வாறே திருநாவுக்கரசர் பெருமான் தம்முடைய 'தனித்திருத் தாண்டகம்' என்னும் பதிகத்தில்; இத்தொடரை எடுத்துப் போற்றி இனிதாண்டிருக்கின்றார். "அழகிய பவளம் போன்ற சிவந்த சடையின்மேல் கங்கை நதியைச் சூடியவரும், தீயை ஏந்தி ஆடுபவரும், ஆனைந்து எனப்படும் பஞ்சகவ்வியப் பொருள்களால் திருமுழுக்கு ஆட்டுதலை விரும்பியருள்கின்ற செம்பவள வண்ணரும், செங்குன்ற வண்ணரும், செவ்வான வண்ணரும் ஆகிய சிவபெருமான், என் சிந்தையின்கண் எழுந்தருளி வீற்றிருக்கின்றார். ஆதலின் நம் மீது கூற்றுவன் வெகுண்டு வரும் ஆற்றல் இலன் ஆயினன். கொடிய வினைகள் ஆகிய பகைகளும் மெல்ல அழிந்தொழிந்தன. எம்முடைய கவலைகள் தீரப் பெற்றோம். எமக்கு நேரக்கூடிய துன்பம் எதுவும் இல்லை. சூரியன் எங்கே உதித்தால்தான் எமக்கு என்ன? யாம் வலிமை குன்றிய எளிமைத் தன்மையுடையோம் அல்லோம். சிவபெருமானின் திருவருள் துணை ஆகிய பெருவலிமையினை யாம் பெற்றிருக்கின்றோம்" என்னும் கருத்தமையப் பின்வரும் திருத்தாண்டகம் அமைந்துள்ளது.

வெம்பவரு கிற்பதன்று கூற்றம் நம்மேல்;
வெய்ய வினைப்பகையும் பைய நையும்;
எம்பரிவு தீர்ந்தோம்; இடுக்கண் இல்லோம்;
எங்கெழிலென் ஞாயிறு? எளியோம்
அல்லோம்;
அம்பவளச் செஞ்சடைமேல் ஆறு சூடி
அனலாடி ஆன்அஞ்சும் ஆட்டு உகந்த
செம்பவள வண்ணர் செங்குன்ற வண்ணர்
செவ்வான வண்ணர் என்சிந்தை யாரே.

முடிவுரை

இதுகாறும் ஆராய்ந்த வாற்றால், திருவெம்பாவையினையும், அதன்கண் போதரும் அழகிய பல அரிய சொற்றொடர்களையும், நம் பண்டைச் செந்தமிழ்ச் சான்றோர்கள் பலரும், பெரிதும் மிக உவந்து போற்றியுள்ள பெற்றிமை தெளியலாம். இத்தகைய சிறப்பு வாய்ந்த திருவெம்பாவைப் பாடல்களையும், பிற தெய்வத் திருநூல்களையும் நாம் அனைவரும் நன்கினிது கற்று உணர்ந்து, போற்றி நலம் பெறுவோமாக!

— ஆசிரியர்.

சிவஞான சித்தியார்

(அளவையியற் குற்றங்கள்.)

"ஈண்டு பக்கப் போலிநான்
கேதுப் போலி யொருமூன்ருய்
வேண்டு மெழுமூன் ருகும்விளங்
குவமைப் போலி யீரொன்பான்
காண்டுந் தோல்வித் தானமிரண்
டிருபத் திரண்டாங் கருதிலிவை
யாண்டு மொழிவ ரவையெல்லா
மளக்கி லறுபத் தைந்தாகும்."

முன்னுரை:

இச் சிவஞானசித்தியார் செய்யுள், அளவையியற் பகுதியில் மிகவும் மூதன்மையான தாகும். தருக்க நூலின் விரிந்த பொருள்கள் பலவும் இதன்கண் சுருங்கத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. எனவே இச்செய்யுள் சித்தாந்த நூல்களைத் தொடக்க நிலையிற் பயிலுவோர்க்குப் பெரிதும் மயக்கம் விளைத்து நிற்கும் தகையதாகும். பொருளுணர்ச்சி அமையச் சொற்களைப் பிரித்துப் படிப்பது தானும் இயலாமல் "குன்றின் முட்டிய குரீஇப் போல" மாணவர்களை இடர்ப்படச் செய்வது இச்செய்யுள். உரையாசிரியர்கள் பலரும் இச்செய்யுட் பொருளைப் போதிய அளவு தெளிவுற விளக்காமலே விடுத்துப் போயினர். ஆசிரியர் **சிவாக்கிர யோகிகள்** இச்செய்யுட் பொருளை விரிவாகவும் தெளிவாகவும் விளக்கியுள்ளனராயினும், வடமொழிக் கலப்பும் மேற்கோள்களும் மிக விரவி நின்று, நிரம்பக் கற்று வல்ல ஒரு சிலருக்கே பயன்படுவதாக உள்ளது.

வடநூற் பொருள்களைத் தெளிந்து தமிழிற் செவ்விதின் விளக்கவல்ல சிறப்புடைய ஆசிரியர் **சிவஞான சுவாமிகள்** இதனை விரிவாக விளக்கியிருப்பாராயின் நமக்குப் பெருநலம் விளைந்திருக்கும். அவர் அங்ஙனம் செய்யாதொழிந்தது நம்மனோர் தவக்குறைவே யாகும். இஃதெங்ஙனமாயினும், இயன்ற அளவின் முயன்று இச்செய்யுட் பொருளை ஒரு சிறிதேனும் ஆராய்ந்து காண்போம்.

"ஈண்டு பக்கப் போலி நான்(கு);
ஏதுப் போலி ஒருமூன்ருய்*
வேண்டும் எழுமூன்றுஆகும்; விளங்கு
உவமைப் போலி ஈரொன்பான்
காண்டும்; தோல்வித் தானம்இரண்டு,
இருபத் திரண்டாம்; கருதில் இவை
**யாண்டும் ஒழிவர்; அவையெல்லாம்
அளக்கில் அறுபத் தைந்துஆகும்."

செய்யுட் பொருள்

இச்செய்யுள் அனுமான அளவையின்கண் நிகழக் கூடிய குற்றங்களைத் தொகுத்துக் கூறுகின்றது. "ஈண்டு" என்றது அனுமான அளவைக்குரிய கருவிகளாவனவற்றை "பக்கப் போலிகள் நான்கு; துணியப்படாதது (அசித்தம்), மறுதலைக்கட் படுவது (விருத்தம்), ஒருதலைப்படாதது (அநைகாந்திகம்) என மூன்று வகைப்படும் ஏதுப்போலிகள் இருபத்தொன்று; உவ

* "ஒரு மூன்றும்" எனவும் முன்பு சில பதிப்புக்களில் இருந்தது.

** "யாண்டும் மொழிவர்" எனவும் "ஆண்டு மொழிவர்" எனவும் சிலர் பிரிப்பர். சிவாக்கிரயோகிகள் பாண்டிப் பெருமாள் முதலியோர் "ஆண்டு மொழிவர்" என்றே பிரித்துள்ளார். "ஆண்டு" என்பதனை அவர் 'ஆராய்ந்து பார்த்து' என்னும் பொருட்டாகக் கொண்டனர் போலும். ஈண்டுக் கூறப்பெறுவன குற்றங்களாகலின், 'மொழிவர்' எனப் பிரிப்பதிலும் 'ஒழிவர்' எனக் கோடலே பொருத்தமாம். திருவாவடுதுறைச் சுப்பிரமணிய தேசிகர் அவர்கள் "யாண்டும் ஒழிவர்" என்றே பிரித்துப் பொருளுரைத்துள்ளார்.

மைப் போலிகள் பதினெட்டு. மயங்கப் பேசுதல் (அப்பிரதிபத்தி), வாளாதிருத்தல் (விப்பிரதிபத்தி) என இரு வகைப் படும் தோல்வி நிலைகள் இருபத்திரண்டு. ஆக அறுபத்தைந்தும் அநுமான அளவையின் கண் நிகழக்கூடிய குற்றங்கள் ஆகும்" என்பது இச்செய்யுளின் திரண்ட பொருள்.

'அறுபத்தைந்து' என அனுமான அளவைக் குற்றங்களைக் கணக்கிடும் முறைகளில் தருக்க நூல் ஆசிரியர்களுக்குள்ளே சிறு சிறு கருத்து வேறுபாடுகள் காணப்படும். ஆயினும் "சகலாகம பண்டிதர்" ஆகிய ஆசிரியர் அருள் நந்தி சிவனுர், தருக்க நூற்றுறையிலும் வல்ல தமது நுண்மாண் நுழைபுலந் தோன்ற "அறுபத்தைந்து" எனப் பெரும்பான்மைபற்றி அறுதியிட்டு வரையறுத்துக் கூறியருளினுர் எனக் கொள்ளல் பொருந்தும்.

"பக்கம் ஏது திட்டாந் தங்கள்
ஒக்க நல்லவும் தீயவும் உள..."

"தீய பக்கமும் தீய ஏதுவும்
தீய எடுத்துக் காட்டும் ஆவன
பக்கப் போலியும், ஏதுப் போலியும்
திட்டாந்தப் போலியும் ஆஅம்".

— மணிமேகலை

பக்கப் போலிகள் :

'பக்கப் போலி' என்பது பிறர் பொருட்டனு மானத்தின் முதலாவதாயுள்ள பக்கவுறுப்பைப் பிழைபடக் கூறுதல். அஃதாவது, பக்க இலக்கணத்திற் குறைபாடுடைத் தாயிருந்தும் பக்கம் போலத் தோன்றுவது. தன்னில் வேருகிய பிறிதொன்றைப் போன்றிருப்பன வெல்லாம் 'போலி' எனப்படும். பக்கப் போலியை வடமொழியில் 'பக்ஷாபாசம்' எனக் கூறுவர். பக்ஷம்—பக்கம். ஆபாசம்—போலி. பக்கம் தன்மி விசேடியம் என்பது ஒரு பொருட்கிளவிகள். துணி பொருள் இருக்குமிடம் பக்கம் (மலை). துணி பொருளுண்மைக்கு எடுத்துக் காட்டப் பெறும் பொருள் இருக்கும் இடம் சபக்கம் (அட்டில்). துணி பொருள் இல்லாத இடம் விபக்கம் (பொய்கை). பக்கம் நிலைக்களம் எனவும், விபக்கம் உவமையில் நிலைக்களம் எனவும், சபக்கம் உவமை நிலைக்களம் எனவும், தமிழில் வழங்கப்படும். பக்கமும் சபக்கமும் பொருளுண்மைக்கும், விபக்கம் பொருளின்மைக்கும் உரிய இடங்கள் ஆகும்.

மூன்று பக்கம்; பக்கம்,நிகர்
பக்கம், நிகரில் பக்கம்,என(த்);
தோன்றும் பக்கம் துணிபொருளுக்கு
இடமாம்; உவமை நிகர்பக்கம்;
ஆன்ற பொருள்சென் றடையாத
இடமாம் நிகரில் பக்கம்; முதல்
ஏன்ற இரண்டும் பொருளுண்மைக்கு
இடமாம்;ஒன்று பொருள் இன்மும்."

துணி பொருட்கு இடனுதலாய பக்கத் தன்மையிற் குறையுடைத்தா யிருப்பினும் ஒருபுடை யொத்துப் பக்கம் போலத் தோன்றுவது பக்கப் போலி. பக்கப் போலிகளின் தொகை பற்றி மறைஞான தேசிகர், சிவாக்கிர யோகிகள், சிவஞான சுவாமிகள், பாண்டிப் பெருமாள் ஆகியோர் வெவ்வேறு வகையிற் கூறுவர். பக்கப் போலி ஒன்பது வகைப்படும் என மணிமேகலை கூறும்.

பக்கப் போலி ஒன்பது வகைப்படும்;
பிரத்தி யக்க விருத்தம், அனுமான
விருத்தம், சுவசன விருத்தம், உலோக
விருத்தம், ஆகம விருத்தம், அப்பிர
சித்த விசேடணம், அப்பிர சித்த
விசேடியம், அப்பிர சித்த உபயம்,
அப்பிர சித்த சம்பந்தம் என"

— சீத்தலைச் சாத்தனுர்.

இங்ஙனம் மணிமேகலை கூறுமாயினும், ஆசிரியர் அருள் நந்தி சிவாசாரியர் பக்கப் போலிகள் நான்கு என்றே கொண்டனர். "ஈண்டு பக்கப் போலி நான்கு" என்பது சிவஞான சித்தியார்.

அவை பின்வருவனவாகு மெனக் கொள்ளலாம்.

1. காட்சிப் போலி: இதனைப் 'பிரத்தியட்ச ஆபாசம்' என்பர். யாவரும் கண்கூடாகக் கண்டுணர்ந்து நன்கினிது தெளிந்த பொருளுண்மைக்கு முரண்படக் கூறுவது. "நெருப்புத் தண்மையுடையது" என்பது காட்சிப் போலி. இதனைக் 'காண்டல் விரோதம்' எனவும் கூறுவர். "உப்பு புளிப்புச் சுவையுடையது" என்றாற் போல்வனவும் காட்சிப் போலியேயாம்.

2. கருதற் போலி: 'ஒலி நிலை பேறுடையது' என்றல். முயற்சியிற் பிறத்தலான் ஒலி 'நிலையாது' என யாவரும் கருதி யுணரத்தக்க உண்மைக்கு ஒவ்வாது மாறுபடுதலின், இது கருதற்போலி யாயிற்று. 'குடம் அழியற்பால தன்று' என்பது போல்வனவும் கருதற் போலியேயாம். கருதற் போலியை 'அனுமான ஆபாசம்' என்பர்.

3. துணிபொருட் போலி: இப்பியை வெள்ளி யென்றும், பழுதையைப் பாம்பென்றும், கானலை நீர் என்றும் பிறழ உணர்ந்து துணிவது. பார்வைக் குறைவு முதலிய காரணங்களால் நேர்ந்த பிறழ்வுணர்ச்சியால் ஒரோவழி இங்ஙனம் ஒருவர் துணிய நேரினும், அதனை அவர் மெய்ப்பித்து நிறுவுதல் இயலாதாகலின், துணி பொருட்போலி யாயிற்று. இது 'பிரதிஞ்ஞாபாசம்' எனப்படும்.

4. சொல்லியற் போலி: 'அந்தணர் கட்குடிப்பர்; ஆசிரியர் பிழைபடக் கற்பிப்பர்' என்றாற் போல்வன. அந்தணராயின் கட்குடியார், கட்குடிப்பராயின் அந்தணராகார். ஆசிரியராயின் பிழைபடக் கற்பியார், பிழைபடக் கற்பிப்பராயின் ஆசிரியராகார். இச் சொற்கள் ஒன்றோடு ஒன்று முரணிநிற்றலின், இவைகள் சொல்லியற் போலியாயின. இதனை 'வசனுபாசம்' என்பர். இது சுவசன விருத்தம் எனவும், வியாகதம் எனவும் கூறப்படுவதுண்டு.

"சுவசன விருத்தம் தன்சொல் மாறிஇயம்பல்;
என்தாய் மலடி என்றே இயம்பல்"

இனி, "பக்கப் போலிகள் நான்கு" என்பதற்குச் **சிவாக்கிர யோகிகள்** வேறு வகையில் விளக்கம் கூறுவர். 'அவர் கூறுமாறு; துணிபொருள் இல்லது (அப்பிரசித்த விசேடணம்), துணி பொருட்டன்மையில்லது (அப்பிரசித்த விசேடியம்), துணி பொருளும் தன்மையும் ஆகிய இரண்டும் இல்லாதது (அப்பிரசித்த உபயம்) துணி பொருளும் தன்மையும் இருந்தும் இயைபு இல்லாதது (அப்பிரசித்த சம்பந்தம்).

1. அப்பிரசித்த விசேடணம்: "வானத் தாமரை மணங்கமழ்வது, தாமரைத் தன்மையால், குளத்தில் மலர்ந்த தாமரை போல" என்புழி, துணி பொருளாகிய வானத் தாமரை யுண்மை அறியப்படவில்லை. பிறவிக் குருடனை நோக்கிப் 'பால் வெண்மை நிறமுடையது' என்பதும் அப்பிரசித்த விசேடணம். அப்பிரசித்தம்— அறியப்படாதது. விசேடணம்—சிறப்பிப்பது.

2. அப்பிரசித்த விசேடியம்:— "உயிர் என்றும் உள்ளது, அணு வடிவிற்றாகலின்" என்புழி, துணி பொருளாகிய உயிர்க்கு அணுவடிவம் உண்மை அறியப்படவில்லை. பிறவிக் குருடனை நோக்கி 'நிறம் அறியத் தகுவது' என்பதும் அப்பிரசித்த விசேடியம். விசேடியம்—சிறப்பிக்கப்படுவது.

3. அப்பிரசித்த உபயம்: "முயற்கோடு மணமுடையது, நிலத்தின் திரிபாகலின்" என்புழி, துணி பொருளாகிய முயற்கோடும், துணி பொருட்டன்மையாகிய நிலத்தின் திரிபுடைமையும் ஆகிய இரண்டும் உள்ளமை அறியப் படவில்லை. பிறவிக் குருடனை நோக்கி 'மதியின் நிறம் வெண்மை' என்பதும் அப்பிரசித்த உபயம். உபயம்—இரண்டு.

4. அப்பிரசித்த சம்பந்தம்:— "நிலம் அழிவில்லது, கட்புலனாதலின்" என்புழி, கட்புலனாதலாகிய ஏதுவிற்கும், அழிவில்

லது என்னும் துணிவிற்கும் உடனிகழ் தொடர்புண்மை அறியப்படவில்லை. சிலர் இதனை 'அப்பிரசித்த அசம்பந்தம்' என இயைத்து "அப்பிரசித்தா சம்பந்தம்" எனவும் வழங்குவர்.

> " அப்பிர சித்தா சம்பந்தம் ஆவது
> எதிரிக்கு இசைந்த பொருள்சா தித்தல்..."

அப்பிரசித்தா சம்பந்தமாவது, எதிரி விசேடிய விசேட சம்பந்தம் உணர்ந்து உடம்பட்டுள்ளதனையே துணியுமாறு பக்கவுறுப்புக் கூறுவது. அஃதாவது ஒருவனை நோக்கி 'நீ ஆண் மகன்' எனக் கூறுவதும், யானைப் பாகனை நோக்கி உன் கையில் இருப்பது 'தோட்டி' எனக் கூறுவதும், பிறவுமாம் என்றும் சிலர் கூறுவர்.

ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார் தமது மணிமேகலை நூலின்கண் பக்கப் போலிகள் ஒன்பது எனக் கூறியுள்ளனர், ஆயினும், ஈண்டுக் காட்டியன ஒழித்து எஞ்சிய ஏனைய ஐந்தும் மறுதலை (விருத்தம்) என்னும் ஏதுப் போலியின்கண் அடங்கும் எனக் கருதி, ஆசிரியர் அருள் நந்தி சிவனார் பக்கப் போலிகள் நான்கு என்றே கொண்டமைந்தார் போலும்.

ஏதுப் போலிகள் :

'துணிபொருளோடு உடனிகழ் தொடர்பு (வியாத்தி) உடையதாய்த் துணி பொருள் இருக்குமிடத்தில் இருத்தலாகிய ஏது இலக்கணத்தில் குறைபாடுடைத்தாயினும் ஒரு புடை ஒத்து ஏதுப்போலத் தோன்றுவது, ஏதுப்போலி (ஏத்துவா பாசம்) எனப்படும். நல் ஏதுவில் வியாத்தி உணர்நிலைக்களனாகிய சபக்க விபக்கங்கள் பிறனுக்குப் பிரசித்தி உடையதாக இருத்தல் வேண்டும். ஏதுப் போலியானது துணியப்படாதது (அசித்தம்), மறுதலைக்கட் படுவது (விருத்தம்), ஒருதலைப்படாதது (அனைகாந்திகம்) என மூவகைப்பட்டு விரியான் இருபத்தொன்றும்,

> " விளம்பிரு பக்கத் தேதுவாம் விருத்தம் ;
> விளங்கசிச் சயித்திடாப் பக்கத்
> துளங்கொள ஏது உரைத்தலாம் அசித்தம் ;
> உரைத்தமூன் றிலும்உறும் ஏது
> உளைந்திடும் அனைகாந் திகம் ; உதாரணம்போன்
> றுதாரணம் அன்றியே ஒழிதல்
> விளைந்ததிட் டாந்தா பாசம்; இங் கிவைதீர்ந்
> திடவிவ கரிப்பர்வித் தகரே "
>
> — சிவப்பிரகாசப் பெருந்திரட்டு.

> " ஏதுப்போலி ஒதின்மூன் றாகும் ;
> அசித்தம், அனைகாந் திகம், விருத் தம்என "
>
> — மணிமேகலை

ஏதுப் போலியின் பிரிவுகளாகிய அசித்தம் விருத்தம் அனைகாந்திகம் என்னும் மூன்றையும், ஆசிரியர்கள் வேறு வேறு முறையில் விரித்து இருபத்தொன்றாக்குவர். **சிவஞான முனிவர்** அசித்தம் 13, விருத்தம் 5, அனைகாந்திகம் 3 என்பர். **சிவாக்கிரயோகிகள்** அசித்தம் 16, விருத்தம் 1, அனைகாந்திகம் 4 எனக் கணக்கிடுவர். **மறைஞான தேசிகர்** முதலிய மற்றும் சிலர் அசித்தம் 12, விருத்தம் 2, அனைகாந்திகம் 7 எனக் கூறுவர், இங்ஙனம் ஆசிரியர்கள் தாமே தம்முட் சிற்சிறு கருத்து வேறுபாடுடையராய்ப் பல திறப்படுதலின், ஈண்டுப் பொதுவாக அசித்தம் எனப்படுவன பலவற்றையும் ஒருங்கு தொகுத்துக் கண்டு உணர்ந்து கொள்ளுதல் நலம்பயக்கும். அவைகள் வருமாறு ;

அசித்த வகைகள்

அசித்தமானது பக்கத்திலே சென்று வியாபியாமையான் முடிவு பெறாதிருக்கும் ஏது. வியாத்தியோடு கூடிப் பக்கத்திலே சென்று முடியும் ஏதுவே முடிவு பெறுவது. சித்தம் முடிவு பெறுவது. அசித்தம் முடிவு பெறாதது

1. **சொரூப அசித்தம்** ; பக்கத்தில் சொரூபம் இல்லாமையான் முடிவு பெறாத ஏது, சொரூபம் - தன்னியல்பு. "ஒலி

நிலை பேறிலது. கட்புலனுதலின்'' என்புழி ஏதுவாகிய கட்புலனுதல் என்னும் தன்மை ஒலியின்கண் உண்மை துணியப் படவில்லை,

2. **வியாத்தி அதிகரண அசித்தம்** : ஏதுவின் சொரூபம் பக்கத்தில் அமைந்திருப்பினும் அதன் உடன்பாட்டு எதிர்மறை வியாத்தி அறிதற்கு நிலைக்களமாகிய சபக்க விபக்கங்கள் அமையாதிருப்பது. அதிகரணம் - நிலைக்களம். "பொருள்களெல்லாம் அழிதன் மாலைய, அறியப்படுதலின்'' என்புழி, துணிபொருளாகிய அழியும் தன்மைக்குச் சபக்க விபக்கங்கள் 'எல்லாம்' என்னும் சொல்லால் இல்லாது போயின. எனவே, நல் ஏதுவில் வியாத்தி உணரும் நிலைக்களமாகிய சபக்க விபக்கங்கள் அனைவர்க்கும் வெளிப்பட்டனவாய் இருத்தல் வேண்டும் என்பது பெறப்படும்.

3. **விசேடிய அசித்தம்** : விசேடண விசேடியமாகச் சொல்லப்படும் ஏது வசனத்தின் விசேடணப் பொருள் மட்டும் உள்ளதாக விசேடியப் பொருள் இல்லதாய் (அசித்தமாய்) இருப்பது. "வாயு காட்சிப்பொருள், பரிசமுடைய உருவ முடைமையால்'' என்புழி, ஏதுவின் கண்ணுள்ள உருவமுடைமையாகிய விசேடியம் வாயுவாகிய பக்கத்தில் இல்லை. இதனைச் சிவஞான முனிவர் 'விசேடியம் இல்லது' என்பர்.

4. **விசேடண அசித்தம்** :— தன்பாலுள்ள விசேடணம் பக்கத்தில் இல்லாமையால் முடிவு பெருதது. "ஒலி நிலைபேறுடையதன்று, காணப்படும் பொதுத் தன்மை யுடைமையான்'' என்புழி, காணப்படுதலாகிய விசேடணம் ஒலியாகிய பக்கப் பொருளில் இல்லை. இதனைச் சிவஞான முனிவர், 'விசேடணம் இல்லது' என்பர்.

5. **பாக அசித்தம்** ; பக்கப் பொருளின் ஒரு பாகத்தில் மட்டும் அமைந்து மற்றொரு பாகத்தில் அமையாமையால் முடிவுபெருத ஏது. "உயிரும் உடம்பும் நிலைபேறுடையன, தோற்றுவிக்கப் பட்டமையான்'' என்புழி, தோற்றுவிக்கப்படுதல் என்னும் ஏது பக்கப் பொருளின் ஒரு பகுதியாகிய உடம்பிற்கு மட்டும் பொருந்தி, மற்றொரு பகுதியாகிய உயிருக்குப் பொருந்தாததாக உள்ளது. உயிர் ஒருவரால் தோற்றுவிக்கப்படாமல் 'என்று நீ அன்று நான்' என்பதற்கேற்ப அநாதியாகவே இருந்துவருவது.

6. **ஆசிரய அசித்தம்** : ஏதுவின் பற்றுக்கோடாகிய பக்கப்பொருள் இல்லாதது. ஆசிரயம் - பற்றுக்கோடு. "மூலப் பகுதி உள்ளது. அஃது உலகமாக வெளிப்படுதலின்'' எனச் சாங்கியர் கூறுகின்றுழி, நையாயிகர் மூலப்பகுதி ஒன்று உண்டென அறியாதவராதலின், நையாயிகர்க்கு மூலப் பகுதியாகிய ஆசிரயம் அசித்தமாயிற்று. 'நிறம் பொருளன்று, பண்பாதலால்' எனப் பிறவிக் குருடனை நோக்கிக் கூறின், நிறம் பிறவிக் குருடனால் அறியப் படாமையால், அஃது அவனுக்கு ஆசிரயா சித்தமாம். 'எலி பறக்கும் இயல்புடையது, இறகுடையதாதலின்' 'முயல் கோடுடைத்து, ஆன் வயிற்றுப் பிறத்தலான்' முதலியனவும் ஆசிரயா சித்தமாகும்.

> "ஆச்சிரய அசித்தம் ; மாறுன வனுக்கு
> ஏற்ற தன்மி இன்மை காட்டுதல் ;
> 'ஆகாசம் சத்த குணத்தால் பொருளாம்'
> எனின்,
> 'ஆகாசம் பொருள் அல்ல' என்பார்க்குத்
> தன்மி அசித்தம்''

என்பது மணிமேகலை.

7. **ஆசிரய ஏகதேச அசித்தம்** : ஆசிரயமாகிய பக்கப் பொருளின் ஒரு பகுதி பிறனுக்கு அசித்தமாய் இருப்பது. "மலப் பகுதியும் உயிரும் கடவுளும் நிலைபேறுடையன. பிறிதொன்றனுல் தோற்றுவிக்கப் படாமையின்'' எனச் சாங்கியர் கூறுகின்றுழி, நையாயிகர்க்குத் துணிபொருளின் ஒரு பகுதி (ஏகதேசம்) ஆகிய மூலப்பகுதி யுண்மை துணியப்படாமல் அசித்தமாம். "ஐம்பெரும் பூதமும் பொருள்களாம், பண்புடைமையால்'' எனப் பௌத்த சார்வாகரை நோக்கிக்

கூறின், குணமுடைமைக்கு ஆசிரயமாகிய ஐம்பெரும் பூதங்களென்னும் பக்கப் பொருளில் ஒரு பகுதி ஆகிய 'ஆகாயம்' பௌத்த சார்வாகர்களுக்கு அசித்தமாம், இதுபோல்வனவற்றைப் 'பாகாசித்தம்' எனவும் கூறுவர்.

8. **வியர்த்த விசேடிய அசித்தம்** பயனிலதாகிய விசேடியம் உடைமையான் முடிவுபெறுத ஏது. "ஒலி நிலைபேறிலது, தோற்றுவிக்கப்படுவதாய பொதுத் தன்மை யுடையதாகலின்" என்புழி, 'பொதுத்தன்மை யுடையது' என்னும் விசேடியம் பயனிலது (வியர்த்தம்).

9. **வியர்த்த விசேடண அசித்தம்:** பயன் இல்லாத விசேடணம் உடைமையான் முடிவுபெறுத ஏது. "ஒலி நிலை பேறிலது, பொதுத் தன்மையுடைய செயப்படு பொருளாதலின்" என்புழி, 'பொதுத்தன்மையுடைமை' என்னும் விசேடணம் வியர்த்தமாம். வியர்த்தம்—வீண்.

10. **சந்தேக அசித்தம்:** ஐயம் உடைமையால் முடிவுபெறுத ஏது. "இம்மலை நெருப்புடையது, புகையோ பனியோ தோன்றலால்" என்புழி, புகையோ பனியோ என ஏதுவானது ஐயுற நின்றது. இதனைச் 'சந்திக்த அசித்தம்' எனவும், 'சித்த அசித்தம்' எனவும் கூறுவர்.

"சித்த அசித்தம் ஆவது
ஏது சங்கயமாய்ச் சாதித்தல்;
ஆவி பனிஎன ஐயுறு நின்றே
தூயபுகை நெருப்புண்டு எணத்துணிதல்"

என்பது, இதற்கு மணிமேகலையின்கண் சித்தலைச் சாத்தனர் தரும் விளக்கம்.

11. **சந்திக்த விசேடிய அசித்தம்:** ஐயத்திற்குரிய விசேடியம் உண்மையான முடிவு பெறுத ஏது. சந்திக்தம்—சந்தேகத்திற்குரியது. "கபிலர் இதுபோது விருப்பு வெறுப்புக்களுடன் கூடியவர், மனிதத் தன்மையோடு கூடிய மெய்யுணர்வு இல்லாத ஒருவராதலின்" என்புழி, மனிதத் தன்மைக்கு விசேடியமாய் நின்ற மெய்யுணர்வு அவர்மாட்டு உண்டோ இன்றோ எனத் தெளியப்படாமல் ஐயுற நின்றது.

12. **சந்திக்த விசேடண அசித்தம்:** ஐயத்திற்குரிய விசேடணம் உடைமையான் முடிவு பெறுத ஏது. "கபிலர் இன்றும் அறியாமை உடையவர், அவர் என்றும் மெய்யுணவிற் குறைபாடுடைய மனிதராகலின்" என்புழி, கபிலராகிய விசேடியப் பொருளுக்குரிய 'மெய்யுணர்விற் குறைபாடுடைமை' என்னும் விசேடணம் சந்தேகத்திற்குரியதாய் அசித்தமாயிற்று.

13. **வியதிகரண அசித்தம்:** "ஒலி தோற்றுவிக்கப்படுவது, ஆடை தோற்றுவிக்கப்படுவது ஆகலின்" என்புழி துணிபொருளும் ஏதுவும் தொடர்புடையன ஆகாமல் வேறுவேறாய் நின்று அசித்தமாயிற்று. வியதிகரணம் — வேறுவேறு இடத்தில் இருத்தல்.

14. **உபய அசித்தம்:** விசேடணம் விசேடியம் ஆகிய இரண்டும் இல்லாமையால் அசித்தமாவது, "குடம் நிலைபேறிலது, பண்பாய்ப் பொறிகட்கு எட்டாததாகலின்" என்புழி, 'பண்பு' என்னும் விசேடணமும் 'பொறிகட்கு எட்டாதது' என்னும் விசேடியமும் ஆகிய இரண்டும் துணியப்படவில்லை. உபயம் இரண்டு. "இது புலிவாழ் காடு புலிக் கொம்புடைமையால்" "இக்கன்று வலியுடையது, கடாப்பால் குடிக்கின்றமையால்" என்பனபோல உபய வாதிகளாலும் உள்ளனவாகக் கொள்ளப்படாத ஏதுக்களும் 'உபய சித்தம்' என்னும் ஏதுப் போலியாம்.

"உபயா சித்தம்;
சாதன ஏது இருவர்க்கும் இன்றிச்
'சத்தம் அநித்தம், கட்புலத்து என்றல்."

15. **அன்னியதர அசித்தம்;** "ஒலி நிலைபேறில்லது, தோற்றுவிக்கப்படுதலின்" என்புழி, ஒலி தோற்றுவிக்கப்படு

வது என்னும் கொள்கை மீமாஞ்சகர்க்கு உடன்பாடன்று. அன்னியதரன் - இருவரில் ஒருவன். "நாய் தீண்டற்பாலதன்று, தீட்டுடையதாகலின்" என்னும் வைதிகன் கூற்று, அவைதிகனுக்கு உடன்பாடன்றாய் 'அன்னியதர அசித்தம்' ஆகும்.

"அன்னிய தராசித்தம், மாறாய் நின்றார்க்கு
உன்னிய ஏது அன்றாய் ஒழிதல்;
'சத்தம் செயலுறல் அநித்தம்' என்னின்
சித்த வெளிப்பாடு அல்லது, செயலுறல்
உயர்ந்த சாங்கியனுக்கு அசித்தம்".

16. **ஏது அஞ்ஞான அசித்தம்**: அறியப்படாத ஏதுவால் முடிவு பெறாதது. "தேவதத்தன் நிரம்பப் பொருளுடையவன், ஆகூழ் உடையனாதலின், சாருதத்தனைப் போல" என்புழி, ஆகூழ் உடைமையாகிய ஏதுவின் உண்மை அறியப்படாமல் அசித்தமாயிற்று.

17. **அதிகரண அஞ்ஞான அசித்தம்**: "வானத்தில் பரமாணுவானது பொருள்களைப் படைப்பதாகல் வேண்டும், பரமாணுவாதலின், குடத்தைப் படைப்பதாகிய பரமாணுவைப்போல" என்புழி, பரமாணுவாகையால் என்னும் ஏதுவினால், வானத்தில் பரமாணுக்கள் இடம் பெற்றுள்ளன என்பது அறியப்படாததோடு, அவை பொருள்களைப் படைக்கும் என்பதும் அறியப்படவில்லை,

18. **வியாப்பியத்துவ அசித்தம்**: "பொருள்களெல்லாம கணப்பொழுதில் தோன்றி மறைவனவாதல் வேண்டும், அசத்தாதலின், நீர்க்குமிழி போல" என்புழி அசத்துத் தன்மையாகிய ஏதுவிற்கும், 'கணப்பொழுதில் தோன்றி மறைவன' என்னும் துணி பொருளுக்கும் உடனிகழ் தன்மை (வியாத்தி) யுண்மை துணியப்படவில்லை.

19. **ஔபாதிக வியாப்பியத்துவ அசித்தம்**: "உபாதியோடு கூடிய ஏதுவினால் முடிவு பெறாதது. 'கருவிலுள்ள குழவி கருமை நிறமுடையதாதல் வேண்டும், அல்லியின் பிள்ளையாதலால், அல்லி என்பவளின் முன்னைப் பிறந்திறந்த பிள்ளையைப் போல" என்புழி, உணவு முதலிய உபாதிகளால் குழவி வெண்ணிறமுடையதாதலும் கூடுமாதலின், 'அல்லியின் பிள்ளை' என்னும் ஏதுவிற்கும், 'கருமை நிறம் உடையதாதல் வேண்டும்' என்னும் துணி பொருட்கும் வியாத்தியுண்மை பெறப்படவில்லை.

20. **ஆகம பாதித விடய சாத்திய அசித்தம்**: "வேள்வி முதலியன துறக்கத்தை அடைவிப்பன அல்ல. வெறும் சடங்குகள் ஆதலின்" என்புழி, 'வேள்வி முதலியன துறக்கத்தை அடைவிப்பன' என ஆகமங்கள் கூறுவனவற்றோடு மாறுகொள்ளுதலின் 'ஆகம பாதித விடய சாத்திய அசித்தம்' ஆயிற்று.

21. **உபமான பாதித விடய சாத்திய அசித்தம்**: "கவயமா என்பது பசுவை ஒப்பதன்று, பொருளாதலின்" என்புழி, ஓராற்றான் ஒத்துப் பிறிதோராற்றான் வேறுபடுவதே 'உபமானம்' எனப்படுமாகலின், 'கவயமா பசுவினை ஒப்பதன்று' என்பதே, பசு கவயமாவினை ஒக்கும் எனவற்புறுத்தலால் 'உபமான பாதித அசித்தம்' ஆயிற்று.

22. **அருத்தா பத்தி பாதித விடய சாத்திய அசித்தம்**: "நூறாண்டு பிழைத்திருக்கின்ற தேவதத்தன் வீட்டிலுமில்லை, வெளியிலுமில்லை, கட்புலனாகத் தோன்றாமையால்" என்புழி, வீட்டில் இல்லையேல் வெளியில் இருப்பான் - வெளியில் இல்லையேல் வீட்டில் இருப்பான் எனக் கருதியுணரும் அருத்தா பத்தியால், வீட்டிலுமில்லை வெளியிலுமில்லை என்னும் சாத்தியம் அசித்தமாயிற்று.

23. **பிரயோசக அசித்தம்**: 'உலகப் பொருள்கள் வழி வழியே தொடர்ந்து தோன்றுவனவாகும், பொருள்களாகலின்" என்புழி, 'வழி வழியே தொடர்ந்து தோன்றுவன' என்பதனைத் துணிதற்குப் 'பொருள்களாகலின்' என்னும் ஏதுவானது பயன்படாததாய் இருத்தலின் அசித்தமாயிற்று. பிரயோசகம்—பயன்படுவது.

—தொடரும்.

சிவஞான போதம்

(திரு. க. வச்சிரவேல் முதலியார், பி.எ., எல்.டி., காஞ்சிபுரம்)

மூன்ரும் அதிகரணம் :—

சூத்திரப் பகுதி :-

"மாலற நேயம் மலிந்தவர் வேடமும்—
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே"

சிவபக்தருடன் இணங்கி நிற்பார்க்கு அவ்விணக்கம் நிலைபெறுதற் பொருட்டு மேலே செய்யக்கடவது, அவர் தம் திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவன், எனவே தெளியக் கண்டு வழிபடுதலே ஆகும் என்பது இதன் கருத்து. திருவேடம் பூண்ட மெய்யன்பர்களை நேயம் மலிந்தவர் வேடம் எனவும், சிவாலயத்தில் உள்ள திருமேனியை ஆலயம் எனவும் உபசரித்துக் கூறியுள்ளார். திருவேடமும் திருக்கோயிலும் காட்சி மாத்திரத்தில் சிவன் முத்தரை உள்ளங்கவர்ந்து குளிர்வித்து உவகை தருதல் பற்றி அவ்வாறு உபசரித்துக் கூறினர்.

அந்தமில் வேடத்துத் திருநாவுக்கரசரைத் திருஞானசம்பந்தர் எதிர்கொண்டு தொழுத செய்தியைச் சேக்கிழார் பெருமான் பின்வருமாறு நமக்கு உணர்த்துகின்ருர் :—

"தூயவெண்ணீறு துதைந்தபொன் மேனியுந் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரு சிந்தையும் நைந் துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் பதிகச் செஞ்சொல்
மேயசெவ்வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே"

"வாக்கின் பெருவிறல் மன்னர் வந்தணைந் தாரெனக் கேட்டுப்
பூக்கமழ் வாசத்தடஞ்சூழ் புகலிப் பெருந் தகையாரும்
ஆக்கிய நல்வினைப் பேறென் றன்பர் குழாத் தொடும் எய்தி
ஏற்கும் பெருவிருப் போடும் எதிர்கொள எய்தும்பொழுதில்

"சிந்தை யிடையறு அன்பும் திருமேனி தன்னில் அசைவும்
கந்தை மிகையாம் கருத்தும் கையுழவாரப் படையும்
வந்திழி கண்ணீர் மழையும் விடிவிற் பொலி திருநீறும்
அந்தமிலாத் திரு வேடத்தரசும் எதிர் வந்தணைய."

"கண்ட கவுணியக்கன்றும் கருத்திற் பரவும் மெய்க்காதல்
தொண்டர் திருவேடம் நேரே தோன்றிய தென்று தொழுதே
அண்டரும் போற்ற அணைந்தங் கரசும் எதிர்வந்திறைஞ்ச
மண்டிய ஆர்வம் பெருக மதுர மொழியருள் செய்தார்"

திருவேடம் என்றது இவ்வியல்பினராகிய மருட்கையின்நீங்கிய சிவஞானிகளையே ஆகும்.

வார்த்திகம் :—'இனிப் பக்தரது திருவேடத்தையும் சிவாலயத்தையும் பரமேசுரன் எனக் கண்டு வழிபடுக என்றது, அவன் மற்றிவ்விடங்களில் பிரகாசமாய் நின்றே அல்லாத இடத்து அப்பிரகாசமாய் நிற்றலான்".

தன்ஞற் கூறப்படும் பொருள் :— சீவன் முத்தர் சிவஞானிகளின் திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவன் எனவே கண்டு வழிபடுவர்.

ஐயம் :— "எப்பொருள் எத்தன்மைத் தாயினும் மெய்ப்பொருள் காண்பதறிவு" எனப் பொதுமறை கூறுதலின், எல்லாப் பொருள்களையும் சிவம் (ஈசாவாஸ்யம் இதம் ஸர்வம்) என நினைத்தல் அன்றிச் சில இடங்களில் மட்டும் சிவத்தின் உண்மையைக் கண்டு வழிபடுவர் என்னும் வரையறை பொருந்துமோ பொருந்தாதோ என்பது.

—260-ம் பக்கம் பார்க்க

ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

திரு K. பட்சிராஜன், B.A., B.L., திருநெல்வேலி.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

நம்பெருமாள் பெரிய திருவிழாக் கொண்டருளித் தீர்த்தவாரிக்கு எழுந்தருளும் போது உடையவர் கோஷ்டியாகக் கூட எழுந்தருளினர். அப்போது முதலியாண்டான் திருக்கைலாகு கொடுக்க அதனைப்பற்றிக் கொண்டு சென்றார் உடையவர். தீர்த்தவாரி முடிந்தது. உடையவர் நீராடிப் புனல் புலர்த்தி மீண்டும் புறப்படத் தொடங்குகையில் கோஷ்டியிருந்த பிள்ளையுறங்கா வில்லி தாஸரை அழைத்து அவருடைய திருக்கைத் தலம் பற்றி எழுந்தருளினர். உடையவரது இந்தச்செயலைக் கண்ட கோஷ்டியிலுள்ள "உயர் குலத்" துள்ளார் திகைத்தனர். ஆனால் அப்போது அவரிடம் அதுபற்றிக் கேட்க யாருக்கும் துணிச்சலில்லை. இம்முறையையே உடையவர் தாம் நீராடப் போம்போதெல்லாம் செய்து வர, கோஷ்டியில் பரபரப்பு வளர்ந்தது. ஒரு நாள் முதலியாண்டான் உடையவரை அணுகித் தயங்கித் தயங்கி நின்றார். அப்படி நின்ற ஆண்டானை நோக்கி உடையவர் "என்ன ஆண்டானே எதோ கேட்க வேண்டுமென்னும் எண்ணத்தோடு நிற்கிறீர் போலக் காண்கிறதே. என்ன விஷயம் சொல்லும்" என்ன ஆண்டானும், "நன்று கேள் என் உயிர் நாதா! நலத்தால் மிகுந்த வேதியராய் இன்றுன் தொண்டராயுள்ளார் இலங்குதிருக்கை தர நீயும்"

"நீராட எழுந்தருளி நீமீள வருமளவில்
பேராசையுடைத் தொண்டர்
பின்முன்வரப், பிள்ளைகரம்
தாரா நின்றானுனக்கு சாத்தாதான்
என ஒன்றும்
ஓராதே நீ பிடித்து வருதிறத்தை உரை
யென்றான்"

கேட்ட உடையவர் புன்முறுவல் பூத்தவராய் விடையிறுத்தார் "ஆண்டானே; ஜன்மம் உயர்ந்திருக்கச் செய்தேயும் தாழ நில்லா நின்றோமே, என்கிற அபிமான முண்டே நமக்கெல்லார்க்கும் அக்குறையு மில்லாதவரன்றேயிவர்" என்று. முதலியாண்டான் குன்றிப் போனார். பிறப்பினால், பிறவற்றால் வரும் அகங்காரத்தால் தானே நாம் இக்கேள்வியைக் கேட்டோம் என்று நொந்தார். தலைகுனிந்தவராய் மெல்ல நழுவினர்.

இச்சரிதை இவ்விதமே குருபரம்பராப்ரபாவம் என்ற நூலிலும், ராமாநுஜார்ய திவ்யசரிதையிலும், வடிவழகிய நம்பிதாசர் செய்யுட் குரு பரம்பரையிலும் காண்கிறது. எனினும் ஆண்டான் கேள்விக்கு உடையவர் 'பத்து வார்த்தைகள்' அருளிச் செய்தார் எனக் கூறுவர் தாஸர். மற்றைய இரண்டிலும் 'பத்து வார்த்தைகள்' இச்சமயம் கூறப் பெற்றதாகக் கூறவில்லை.

ஆனால் திருக்குருகூர் தேவராஜய்யங்கார் ஸ்வாமிகள் அருளிச் செய்துள்ள "ஸ்ரீ சடகோப திவ்ய சரித்திரம்" என்று நூலில் நாமதேயப்படலத்தின் காப்புச் செய்யுளில் மற்றொரு விதமாக இந்நிகழ்ச்சி காண்கிறது.

நீராடி வரும்போது உடையவர் வடுகநம்பி கையைப்பிடித்து வந்ததாகவும், ஆண்டான் இது பற்றிக் கேட்க உடையவர் பதிலொன்றும் விவரமாகக் கூறாமல் சரி காட்டுகிறேன் என்று கூறினர் என்றும், மறுநாள் ஆண்டான் கையிலும் வடுக நம்பிகையிலும் ஒரொரு செப்புச் செம்பையளித்து இருவரும் சென்று திருக்காவிரித் தீர்த்தம் கொண்டு வாருங்கள் என்று நியமித்தார் என்றும், அவ்விதமே இருவரும் கொணர, உடையவர் இரண்டினின்றும் நீரைக் கொட்டி விட்டு ஆண்டான் செம்பு புறமே விளக்கப் பெற்று உள்ளே நன்கு விளக்கப் பெறாமல் அங்கங்கே கறை படிந்திருந்ததையும், வடுக நம்பி கொணர்ந்த செம்பு உள்ளும் புறமும் ஒரே படித்தாக மறு

வின்றிப் பளபளத்து விளங்கியதையும் காட்டி யனுள முதலியாண்டான் குறிப்புணர்ந்து வெட்கி னின்றுர் என்றும், இச்சரிதை விவரிக்கப்பட்டுளது.

"கற்றவன் நீராட எழ முதலியாண்டான்
கையும் பின் வடுகநம்பி கரமென்போதும்
பற்றி எழற்கு ஆண்டான் உள்வெதும்ப
அத்தைப்
பரிகரிக்க அவர்க்கிருதாம் பரச்செம் பீங்
தாங்கு
அற்ற நதிப்புனல் கொணர்வித் தல்தால்
நம்பி
ஆந்திரிக பக்திவெளி யறியச் செய்த
நற்றவனெம் மெதிராச னடியை வாழ்த்தி
நாமதேயப் படலம் நல்குவாமால்"

என்பது ஸ்ரீ சடகோபதிவ்ய சரித்திரப்பாடல்.

பெரிய நம்பியின் திருமகள் அத்துழாய் தன் புக்ககத்தில் வாழுங்கால் விடியற்காலை ஆற்றுக்குச் செல்ல வேண்டிவர, தன் மாமியாரைத் துணை வேண்டினுள். அவள் துடுக்காக "உன் சீதன வெள்ளாட்டியைக் கூட்டிப்போ" என்று பதிலிறுக்க, அத்துழாய் தன் பிறந்தகத்தின் ஏழ்மையைக் கொண்டு அல்லவா மாமியார் இப்படிக் குத்தலாகக் கூறினுள் என்று பொருமிக் கண்ணீரும் கம்பலையுமாய்த் தன் தந்தையிடம் வந்து கூறி உளம் வருந்தினுள். பெரிய நம்பி நாம் இதெல்லாம் அறியோம். உடையவர்டம் விண்ணப்பம் செய் என்று கூறிவிட்டார். அவளும் உடையவரிடத்திலே நிகழ்ந்தவற்றை விண்ணப்பம் செய்ய உடையவர் அருகிருந்த முதலியாண்டானைக் காட்டி "இதோ உன் சீதனவெள்ளாட்டி" என்று அளிக்க முதலியாண்டானும் ஆசார்ய நியமனத்தை ஏற்று அத்துழாயோடு அவள் புக்ககம் சென்று அவளுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து கொண்டிருந்தார். அவர் பணிவிடை செய்யும் விதம் அப்புக்ககத்தார் அவரை எவ்விதத்திலும் சந்தேகப் படும்படி இல்லாது ஒரு வெள்ளாட்டி செய்வது போன்றே இருந்தது. பல நாள் செல்ல ஒருநாள் ஒரு உபந்யாசம் கேட்கப் போன விடத்திலே நிகழ்ந்த நிகழ்ச்சி ஆண்டான் உண்மையில் தான் யார் என்பதை விளக்க வேண்டிய நிலையைக் கொணர்ந்தது. அவர் உண்மையில் யார் என்பதை அறிந்த அத்துழாயின் புக்ககத்தார் மனம் பதறி ஆண்டான் திருவடிகளில் விழுந்து (ஆண்டான் அவர்களிலும் பன்மடங்கு செல்வமுடையவர்) ஸ்வாமீ! இங்ஙனம் செய்யலாமோ?" என்று வருந்திக் கேட்க ஆண்டான் "நமக்கென்ன தெரியும்? உடையவர் நியமனம். வேணுமாகில் அவரையே போய்க் கேளுங்கள்" என்று அடக்கமாகப் பதிலுரைத்தார். அவர்கள் செய்வதறியாமல் உடையவரிடம் சென்று அவரை வணங்கி "ஸ்வாமி! எங்களை இப்படி அதோ கதியில் தள்ள வேணுமா? எங்கள் அற்ப செல்வத்தால் வந்த அகந்தையைப் பெருஞ்செல்வர் (பொருள் ஞானம் இரண்டிலும் பெருஞ்செல்வர்) முதலியாண்டானை வெள்ளாட்டியாக அனுப்பித்தான் காட்டவேண்டுமா? நாங்கள் உணர்ந்து கொண்டோம் ஸ்வாமி உணர்ந்து கொண்டோம். கிருபை செய்து அவரைத் தேவரீர் ஸன்னிதிக்கு அழைத்துக் கொள்ளுங்கள்" என்று பலவாறு வேண்டினர். உடையவரும் 'அப்படியா! ஆண்டானை அத்துழாயின் சீதன வெள்ளாட்டியாக அளித்து விட்டோம். அவர் அங்கிருந்து அவ்வெள்ளாட்டிக் கைங்கர்யம் செய்வது உங்களுக்கு இஷ்டமில்லையானுல் அவ்வடிமையை இங்கேயிருந்து செய்து விட்டுப் போகிருர் அவ்வளவுதானே' என அருளி முதலியாண்டானைத் தம்மருகே மீண்டும் அழைப்பித் தருளினுர்.

மாறனேர் நம்பி என்ற பரம பாகவதரை நினைவில் வைத்திருக்கிறீர்கள் அல்லவா! ஸ்ரீ ஆளவந்தார் கோஷ்டியிலே அவருடைய தீரா வியாதி என்ற பிரஸாதத்தை ஏற்றுக் கொண்ட உத்தம சீடர்! அந்நோயை ஏற்ற அப்பெரியார் அதைத் தாங்கிக் கொண்டே வெளிச் சென்று தன் தேக யாத்திரையைக் கழித்து வந்தார். சில காலம் செல்ல நோய் முற்றி அவர் வெளிச் செல்ல இயலாது போயிற்று. ஊருக்கு வெளியே ஒரு குடிசையில் வாழ்ந்து வந்தார்.

அவர் அவ்விதம் நோயைப்பெற்ற காலத்திலிருந்தே பெரிய நம்பிகள் அவருடைய பெருமதிப்பை உணர்ந்திருந்தார். அவர் வாழ்க்கை எவ்வண்ணம் செல்கிறது என்பதையும் கவனித்து வந்தார். ஒன்றிரண்டு நாளாக அவர் காணப்

படாமையால் நம்பிகள் அவர் குடிசைக்குச் சென்ருர். அவர் நிலைமையைக் கண்டு கலங்கினர். உடல் நோய் அழுகியிருந்தது. பார்த்த நம்பிகட்கு ஆசார்யனுக்காக எத்தகைய தியாகம் செய்தவர் அவர் என்பதை மீண்டும் உறுத்திக் காட்டியது அது. அன்று முதல் நம்பிகள் தினந்தோறும் தன்னுடைய கால வழிபாடுகளை எல்லாம் கடுக முடித்துவிட்டு ஒரு குடம் தீர்த்தமும் ஒரு நாளைய உணவும் கொண்டு மாறனேர்நம்பி குடில்சென்று அவர் நோய் அழுகியிருந்த விடமெல்லாம் தம் திருக்கரத்தால் கழுவி அவரை நீராட்டி உடை அணிவித்துத் தாம்கொணர்ந்த உணவையும் உண்பித்து அவரோடு சிறிது நேரம் ஸல்லாபித்துச் செல்வதைத் தம் கடமையாகக் கொண்டொழுகி வந்தார்.

தினந்தோறும் நம்பிகள் தீர்த்தத்துடனும் எதையோ கையில் மூடி எடுத்துக்கொண்டும் ஊருக்கு வெளியே செல்வதைக் கவனித்தார் உடையவர். அவர்க்கு வியப்புணர்வு மிகுந்தது. அதன் உண்மையைத் தெளியவேண்டும் என்ற அவா உண்டாயிற்று. தம்மாசார்யராதலால் அவரை வினவுவதும் தகுதியன்று. எனவே உடையவர் ஒருநாள் நம்பிகள் அறியாமல் அவரைப் பின்தொடர்ந்தார். நம்பிகள் மாறனேர் நம்பிகுடிலுக்குள் சென்று கதவை அடைத்ததும் உடையவர் விரைவாகக் குடிசையை அடைந்தார். அதன் சுவற்றிலிருந்த ஒரு சிறு சன்னல்வழியாக எட்டிப்பார்த்தார். நம்பிகள் மாறனேர் நம்பியின் புண்களைக் கழுவிக் கொண்டிருந்தார்! பார்த்த உடையவர் கண்மலர்கள் தாமாகவே நீரைப் பெருக்கின. தம்மைக் காட்டிக் கொள்ளாமல் நம்பிகள் செய்த கைங்கர்யங்கள் அனைத்தையும் சேவித்தார். மெல்ல அங்கிருந்து நழுவினர். அவர் உள்ளம் தம்மாசார்யரான பெரிய நம்பிகளின் மேம்பட்ட பெருமையையே உன்னி உன்னி உருகிக்கொண்டிருந்தமையின் மெல்லவே சிந்தனையில் ஆழ்ந்தவராய்ச் சென்றுகொண்டிருந்தார் அவர். இதற்குள் பெரிய நம்பிகள் தம் கடமையை முடித்துவிட்டு வந்தவர். உடையவரைக் கண்டு ‘எங்கு வந்தீர்’ என வினவினர். உடையவர் ஏதோ சொல்லி மழுப்பிவிட்டார். ஆனல் பெரிய நம்பிகள் உண்மையை உணர்ந்து கொண்டார். எனினும் ஒன்றும் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை.

காலம் சென்றது. மாறனேர் நம்பியின் நோய் வரவர அதிகமாயிற்று. ஒருநாள் அவர் திருவாய் த்வயத்தை (ஸ்ரீமந் நாராயணசரணௌ சரணம் ப்ரபத்யே. ஸ்ரீமதே நாராயணுய நம: என்ற மந்திரரத்னம்) உச்சரித்துக் கொண்டேயிருக்க, பெரிய நம்பிகளை நோக்கி “ஸ்வாமீ! புரோடாசத்தை நாய்க்கிடாதே கொள்ளும்” (வேள்வியின் அவிப்பொருளை நாய் தீண்ட விட்டுவிடாது பார்த்துக்கொள்ளும் என்று பதப்பொருள். இது ப்ரபன்ன சரீரம். இது கழிக்கப் பெற்றுக் கிரியை செய்யுங்கால் ப்ரபன்னமுறையில் நடத்தும். எமதர்மனிடம் காட்டிக் கொடுக்கும் கிரியை நடந்துவிடாதபடி கவனித்துக்கொள்ளும் என்பது தொனிப்பொருள்), என்று நம்பிகள் கையைப் பிடித்து வாக்குத்தத்தம் வாங்குவாரைப் போலே அருளிச் செய்துவிட்டு இந்த உடலைக் கழித்துக் கொண்டார். பெரிய நம்பிகள் அவர் அருளியதை நம்பெருமாள் வாக்காகக் கொண்டு தம் அந்தரங்க சிடர்களை உடன்கூட்டி அவரை ப்ரம்மமேத முறைப்படி (ப்ரம்மநிஷ்டராய் ப்ரபன்னரான உத்தமர்களுக்குச் செய்யும் கிரியை) அவர் திவ்விய மங்கள விக்கிரகத்தைத் திருப்பள்ளிபடுத்தியருளி, பின் தீர்த்தமாடாதே நேரே திருமாளிகை போய்ச் சேர்ந்தார். தம்மாசார்யரோடு உடையவரும் அக்கைங்கர்யத்தில் ஈடுபட்டார்.

வர்ணுச்ரமதர்மமே புருஷார்த்தமாகக் கொண்டவர், ஒரு தாழ்ந்த வகுப்பினனுக்கு ப்ரம்மமேத ஸம்ஸ்காரமா?” என்று உள்ளம் வெதும்பினர். குசுகுசுவென்று தமக்குள்ளே பேசினர். பெரிய நம்பிகளை விட்டு விலகத் தலைப்பட்டனர். பார்த்தார் உடையவர். பெரிய நம்பிகளைச் சென்று தண்டனிட்டார். “ஸ்வாமீ! என்ன துணிச்சலான காரியத்தைச் செய்து விட்டீர்கள்! ஜாதி என்பது உடம்போடே போகக்கூடியது தான். உண்மையாயினும் அந்த நோயும் அந்நோயிகளின் கர்வமும் எத்தனை காலமாக வேரூன்றிக் கிடக்கின்றது! அந்நோயை ஒரே நொடியில் கிள்ளிவிடுவதென்பது முடியக்கூடிய செயலா? அடியேன், அந்நோயின் தன்மையை மெல்ல மெல்ல உணர்த்தி அதனைக்கழிக்க வழிகளை ஆய்ந்து சிறுகச் சிறுக வேலிகளை நகர்த்தி வருகிறேன். தேவரீர் திடுதிப்பென்று இப்படி ஒரு காரியத்தைச் செய்துவிட்டீர்களே. அப்படித்

தான் செய்யத் திருவுள்ளம் பற்றினாலும் அடியேன் போன்ற சீடர்களைக் கொண்டு செய்வித்துக் கொள்ளாமல் தேவரீரே இதைச் செய்தது இக் கொடுவுலகத்தார் உள்ளங்களைப் புண்படுத்தி விட்டதே ஸ்வாமீ ! இதுவும் அடியேன் பாக்கியக் குறைவுதான்" என்ற வருத்தமும் பணிவும் தோன்ற விண்ணப்பித்தார், பெரிய நம்பிகள் எவ்விதக் கலக்கமும் அடையவில்லை. உடையவர் கொண்ட பயம் அவர் உணராததல்ல. எனினும் அவர் திருமுகமண்டலம் ஒரு தெய்வீக ஒளி வீசிற்று. வாய் புன்னகை பூக்க அவர் உடைய வரை நோக்கி "ஜீயரே மாறனேர் நம்பியை உம் மனத்தே என்னவாக நினைத்தீர் ! அன்று ஆள வந்தார் கோஷ்டியில் வெளியிட்ட கோரிக்கையை எந்தச் சீடன் ஏற்க முன் வந்தான். மாறனேர் நம்பியல்லவா அப்பிரஸாதம் அடியேனுக்கு அருளிச் செய்யவேணும் என்று வந்தார். மற்றை யோர் மெல்ல நழுவத்தானே செய்தனர். மாறனேர் நம்பி ஆளவந்தாருடைய அபிமானத் துக்குகந்தவர்களில் தலைசிறந்தவரன்றோ. அவர் அடியேன் கையைப் பற்றியிட்ட ஆணையைச் சீடரைக் கொண்டு நிறைவேற்றுவதா? ஆகை யாலே நாம் அந்திதொழுகைக்கு ஆளிட்டாலும் இடுவோம். இக்காரியத்தில் வேறொருவரை ஏவிப் பணிகொள்வோமா காணும்? ஏதோ வரம்பை யழித்து விட்டதாகக் கூறினீரே! பெரியோர் களுடைய அநுஷ்டாநம் (செய்யும் முறை) அவர் கள் ஸ்வரூபம் (நிஜவடிவம்) எப்படிப்பட்ட தென்று நாம் சிந்தை செய்து பார்க்க வேண்டாமா. இக்ஷ்வாகு வம்சத்திலே பிறந்தவர் பெருமாள். பறவைக் குலத்திலே பிறந்தவர் சடாயு. அந்தச் சடாயுவை 'நான் உடல் நீ ஆவி' என்று பெரு மாளின் பிதா தசரதர் கூறி அவரைத் தம்பி மானத்துக் குகந்தவராகக் கொண்டதாலன்றோ, பெருமாள் அந்தச் சடாயுவுக்கு ஒரு புத்திரன் செய்யும் முறையிலே கிரியைகளைச் செய்தார். ப்ரபன்னனை அவரை அவரது பறவைக்குலப் பெயரான சடாயு என்றழைப்பது தகாதென்றல் லவா நீரும் நாமும் நம் முன்னையோரும் அவரைப் பெரியவுடையார் என்றழைப்பது ! அதே போன்று கிருஷ்ணனது உகப்புக்கு மிகவும் பாத் திரமானவர் என்றல்லவா ஸ்ரீவிதுரருக்கு, இப் போது பேசும் எவரைக் காட்டிலும் தருமங்களை உணர்ந்த தருமபுத்திரர், மகனாக நின்று கிரியை களைச் செய்தார். ஸ்ரீவிதுரரை விதுராழ்வார் என்று பாராட்டுகிறோமே காணும்! தசரதருக் கும், ஸ்ரீகிருஷ்ணனுக்கும் உகப்பானவர்களை அவர்களைப் போலப் பாவித்தல்லவா பெருமாளும் தர்மபுத்திரரும் நடந்து கொண்டார்கள். அவர் கள் இவர்கள் கொள்கைப்படி தாழ்ந்து விட்டார் களா? இவர்களைத் திருவுள்ளத்திலே கொண்டல் லவா நம்மாழ்வார் 'பயிலும் சுடரொளி' 'நெடு மாற் கடிமை' என்ற இரு திருவாய்மொழிகளி லும் அவர்கள் பெருமையையும் மேன்மையையும் பரக்க ஓதியுள்ளார்! அவற்றோடு ஒத்திட்டுப் பார்த்தோமானால் பெருமாளையும் தர்மபுத்திரரை யும் காட்டில் நான் உயர்ந்தவனாகேனே. பெரிய உடையாரையும் ஸ்ரீவிதுரரையும் காட்டில் மாறனேர் நம்பி தாழ்ந்தவரன்றே. ஆளவந்தார் உகப்புக்குப் பாத்திரமான அவரை ஸ்ரீஆளவந் தாரைப் போலல்லவா நாம் உணரவேண்டும்! பெருமாளுக்கும் தர்மபுத்திரருக்கும் இருந்த சாமானிய தர்மத்தைக் காட்டிலும் ஆழ்வார்கள் நமக்கு வகுத்துக் காட்டிய அருளிச் செயல்கள் மேம்பட்டவையல்லவா. அவையென்ன வெறும் கடலோசையா?' என்று வைஷ்ணவ தர்மத்தை விளக்கியருளிச் செய்தார். அவர் கூறியவற்றின் உண்மையை உணர்ந்தார் உடையவர். அவற்றின் பொருளை எல்லாம் பிறருக்கு விளக்கியருளினார்.

இராமநுஜர் விளக்கியருளியபோதிலும் ஊரி லுள்ளார் வெறுப்புத் தணியவில்லை. அவர்கள் பெரிய நம்பிகளோடு எவ்விதத் தொடர்பையும் தவிர்ந்தே இருந்தனர். நம்பிகள் அதனைப் பொருட் படுத்தவே இல்லை. ஆனால் அவர் திருக்குமாரி யான அத்துழாய், வயதின் இளமை காரணமாக மக்களின் இந்தப்போக்கைக்கண்டு உளம் குமுறி னாள். அப்பா செய்தது வைஷ்ணவதர்மத்தோடு ஒட்டியது. ஆனால் தொண்டுக்கே கோலம் பூண்பார் அதனை ஒப்பமறுக்கின்றனரே. பரனடி யார் திறத்துப் பல்வகை அற்பமான தடைகளை வைத்துப் பார்க்கின்றனரே. இவர்கள் செய்தது சரியில்லை என்றால் அவர்களுக்கு ஏன் அப்பரமன் இன்னும் உணர்த்தவில்லை? அவனடியார் திறத்து அப்பா செய்தது சரியா தவறா என்று அப்பரமனை யே கேட்டு விட்டால் என்ன?" இப்படி ஓடியது அவள் உள்ளம்.

பெரிய பெருமாள் திருவிழாவின் போது திருத்தேர், நம்பிகள் வாழ்ந்த வீதிவழியே வந்து கொண்டிருந்தது. அத்துழாயின் உளப் போக்கின் வேகமும் அன்று உச்ச நிலையை அடைந்திருந்தது. இன்று பெருமானைச் சந்நிதியிலேயே கேட்டு விடுவது என்று நிச்சயித்தாள். வாயிற்புறம் வந்தாள். தேர் அவர்கள் வீட்டுக்குச் சற்றுத்தள்ளி வந்து கொண்டிருந்தது. ஒரு ஆவேசம் கொண்டவள் போன்று அத்துழாய் கூட்டத்தில் புகுந்து திருத்தேர்முன் நின்றாள். கண்டவர் ஒன்று மறியாது திகைத்துப் போயினர். அத்துழாய் திருத்தேரில் அமர்ந்த பெருமானை நோக்கி "நம்பெருமானே! அடியேனுடைய தந்தை, உம்முடைய அந்தரங்க அடியார் மாறனேர் நம்பியின் சரம தசையில் நடந்து கொண்டது உமது திருவுள்ளத்துக்கு உகந்ததா இல்லையா. உகந்ததாயின் இததிருத்தேர் இங்கேயே நிற்க வேண்டும். உலகோரை உண்மை யுணர்த்திய பிறகே உமது திருத்தேர் செல்ல வேண்டும் என்று கைகூப்பிக் கண்ணீர் சொரியக் கதறினாள். தேரிழுப்போர் "பூ! இதற்குத்தானா இவள் இங்கு வந்தாள். வர்ணாசிரம தர்மத்தை மீறியதுமல்லாமல் பெருமானையே நிறுத்திக் கேட்கும் துணிவு வேறு. இழுங்கள் தேரை என்று கூவியவராய் தம்முழு வலிமையும் கொண்டு தேரை இழுக்க முற்பட்டனர். ஆனால் என்ன விந்தை! தேர் அசையாமல் நின்று விட்டது! நம்பிகளை இகழ்ந்து ஒதுக்கியவர் எப்பாடுபட்டும் பலனில்லை. அத்துழாய்க்கோ மகிழ்ச்சி கரை புரண்டது. துள்ளிக் குதித்தாள். எம்பெருமானே அச்யுதன் (அடியவர்களை என்றுமே நழுவவிடாதவன்) என்ற உமது திருநாமம் பொருள் பொதிந்ததென்று காட்டினீர். எனினும் தேவரீர் உம்மடியாரை அனைவரும் காண அங்கீகரித்து மதித்தாலன்றி இவ்வேஷக் கூட்டம் ஒப்பாது. "காட்டு மேல் காட்சி கொள்ளும்" குழுவல்லவா அது என்று மீண்டும் கைகுவித்து வேண்டினாள்.

திடீரென்று அர்ச்சகருக்கு உடல் பதறியது. பெருமாள் அவருள்ளே ஆவேசித்தார். ஆவேசங் கொண்ட அர்ச்சகர் பெருமாள் தலைமாலையையும் சடாரியையும் பரிவட்டத்தையும் ஒரு தட்டிலே ஏந்தியவராய் அத்துழாயை நோக்கி எழுந்தருளினார். முன்னர் கூக்குரலிட்ட கூட்டம் தேர் நின்றதும் வியந்து நின்றது. இப்போது அர்ச்சகர் ஆவேசித்தவராய் வருவது கண்டு பயந்து நடுங்கியது. நம்பெருமாள் ஒரு வேளை சீற்றமே கொண்டு விட்டால் நம் பாடு என்ன? எனத்துடித்தனர். வந்த அர்ச்சகர் அத்துழாயை நோக்கி "மகளே! உன் துணிவுக்கு உவந்தோம். உன் தந்தை செய்ததே உண்மை ஸ்ரீ வைஷ்ணவ தர்மம். இனியாவது ஸ்ரீ வைஷ்ணவ உலகம் இதை உணரட்டும்" என்று இத மொழி கூறித் தன் வீட்டு வாசலிலே நின்று கொண்டிருந்த பெரிய நம்பிகளிடம் நேரே சென்று 'நம்பி' என அருளப்பாடிட்டு அவர் தலையில் பரிவட்டத்தைக் கட்டி மாலைகளை அணிவித்துச் சடாரியையும் அவர் தலைக்கணியாகச் சேர்த்தருள அதுவரை நம்பிகளை இகழ்ந்த கும்பலனைத்தும் தேர்வடத்தைக் கீழே போகட்டு, சாஷ்டாங்கமாக நம்பிகளைத் தெண்டனிட்டுக் கிடந்தது. நம்பிகளோ பெருமாள் தம்மிடம் வைத்த விசேஷ கிருபையை எண்ணி வியந்து நின்று, பின் தேறியவராய் கீழே படுகாடு கிடந்த திரளை நோக்கி 'பரமபாகவதர்களே! அபசாரம். எழுந்திருங்கள். பெருமாள் உங்கள் முகமாகத் தனதடியார் பெருமையை உணர்த்தச் செய்தான். இவ்வுணர்வு நித்தியமாக வளர அவன் கிருபை செய்வானாக" என்று கை கூப்பி வேண்டலும் கூட்டம் எழுந்தது. திருத்தேரும் கோலாகலமாக நம்பிகள் தலைமையிலே இழுக்கப்பெற்று ஓடியது. நம்பிகள் பெருமை புத்தொளி பெற்றிலங்கியது.

(குறிப்பு:—சென்ற டிசம்பர் இதழில் உடையவர் ஸ்ரீபாஷ்யம் ஸாதித்துக் கொண்டிருக்கையில் ஓரிடத்தில் ஆழ்வான் பட்டோலை கொள்ளாது நிறுத்தினதாக வந்த வரலாறு பன்னீராயிரப்படி குருபரம்பரையிலும், ராமாநுஜார்யதிவ்ய சரிதையிலும் கண்டதை வைத்து அடியேனால் எழுதப் பெற்றது. ஆனால் ஸ்ரீவைஷ்ண ஸமூகத்துக்கும், உபயவேதாந்தங்களுக்கும் ஓரே தூண்போல எழுந்தருளியிருக்கும் ஸ்ரீகாஞ்சி ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி இந்த ஐதிஹ்யத்துக்கு ஆதாரமே கிடையாதென்றும், அடியேன் அப்படி எழுதியிருப்பது உசிதமன்றென்றும், தாம் இதுபற்றி முன்பே இது தவறான ஐதிஹ்யமென்று நிரூபித்திருப்பதாயும், அடியேனுக்கு எழுதியுள்ளார்கள். இந்த ஐதிஹ்யத்தின் ப்ராமாணிகத்தை அடியேன் நிர்ணயம் செய்ய உரியனல்லேன். மஹனீயர்கள் ஸ்ரீ ஸ்வாமியின் திருவுள்ளத்தைக் கணிசித்துக் கொள்ளுமாறு ப்ரார்த்தித்துக்கொள்கிறேன்).

—தொடரும்.

அழகிய சிற்றம்பலம்

(கோவை திரு சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், B.A., B.L.)

இடம் :

கோவை நகருக்கு மேற்கே நொய்யல் என்ற காஞ்சிமா நதியின் தெற்குக் கரையில் மூன்று கல் தொலைவில் உள்ளது பேரூர் என்ற வைப்புத் தலம். அது சுந்தரமூர்த்திகளால் ஊர்த்தொகையில், 'பேரூருறைவாய் பட்டிப் பெருமான் பிறவா நெறியானே' என்றும், கோயில் திருப்பதிகத்தில் 'மீ கொங்கில் அணி காஞ்சிவாய்ப் பேரூர்ப் பெம்மானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே பெற்றும் அன்றே' என்றும் சிறப்பிக்கப் பெற்ற திருத் தலம். பேரூரில் பல திருத்தளிகள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று அழகிய சிற்றம்பலம். இந்தக் கோயில் பேரூர்ப் புராணத்தில் கூறப் பட்டுள்ளது. பெரிய கோயிலாகிய பட்டீசுவரர் கோயிலுக்கு வடகிழக்கு மூலையில் ஒரு பர்லாங்கு தொலைவில் உள்ள ஒரு தனிக்கோயில் அது ஆகும். தெற்கணும்பி சங்கரையன் மகன் மாதையன் என்பவனால் அகழப்பெற்ற திருக்குளத்திற்கு வடகிழக்கில், காலவேச்சரம் செல்லும் வழியில் சிறிது கிழக்கே தள்ளி இருக்கிறது கோயிலில் தற்போதுள்ளவை கருவறையும் சுற்றுலையும் மட்டுமே. கருவறையைச் சுற்றிலும் கல் வெட்டுக்கள் உள்ளதாலும், அவைகள் கொங்குச் சோழர்கள் காலத்தவையாகையாலும், கோயில் ஏழு எட்டு நூற்றாண்டுகளுக்கு முன்பே ஏற்பட்டதாயிருக்க வேண்டும். கோயிலில் தற்காலத்தில் வழங்கப்படும் பெயர் அழகிய சிற்றம்பலம் என்பதாகும். இப்பெயர் கச்சியப்பர் பேரூர்ப் புராணம் பாடுவதற்கு முன்னிருந்தே, அதாவது மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்தே இருந்திருக்க வேண்டும். சிற்றம்பலம் என்று இருக்கிறபடியால் நடராசப் பெருமான் சன்னிதி இங்கே இருந்திருக்க வேண்டும். எப்போது எடுபட்டதோ அல்லது கட்டப்படவில்லையோ அறியோம். அதைப் பற்றிக் கர்ண பரம்பரையும் இல்லை.

ஐதீகம் :

அழகிய சிற்றம்பலத்தைப் பற்றிக் கச்சியப்ப முனிவர் பேரூர்ப் புராணத்தில் அரிய செய்யுள் நடையில் ஒரு படலமே இயற்றியிருக்கிறார். அப் படலமே 200 செய்யுள்களைக் கொண்டது. அதில் இந்தத் திருக்கோயில் தோன்றிய செய்தி கூறப் பட்டுள்ளது.

சுந்தரமூர்த்தி நாயனார் திருப்பேரூரை அடுத்து வணங்கிச் சென்று. தில்லைச் 'சிற்றம்பலத்தே நடராசப் பெருமானைப் பாடிய திருப்பதிகத்தில் 'பேரூர்ப் பெருமானைப் பெற்றோம்' என்று அருளிச் செய்த தேவாரத்தைத் தில்லை வாழ் அந்தணர்கள் கேட்டு, நாயனாரை நோக்கி 'இத் தில்லைத்தலம் போல் இவ்வுலகத்தில் ஒரு தலம் உண்டோ? என வினவியதற்கு 'இக்கனக சபையில் தாண்டவம் செய்வது போலத் திருப் பேரூர் வெள்ளியம்பலத்தில் சிவபெருமான் திரு நடம் செய்தருளுகின்றார். இத்தலத்தில் முத்தி தருவதன்றித் தர்மார்த்த காமங்கள் தருவதில்லை' என்று நாயனார் நவின்றனர். உடனே தில்லை வாழ் அந்தணர்கள் திருப்பேரூரை அடைந்து காஞ்சிமா நதியில் குளித்துத் திருமேனியிலே சிவ சின்னங்களாகிய திருநீறும் கண்டிகையும் பூண்டு இறைவனையும் இறைவியையும் வணங்கி, அரசம்பலவாணரை வணங்கி மற்றைய நாள் காலவ ஈச்சரத்திற்கு அக்கினிதிக்கிலே சிவலிங்கம் தாபித்துப் பூசித்து அங்கே வசித்தார்கள். அப்போது வெள்ளியம்பலத்திலே சிவபெருமான் திரு நடம் செய்ய அதனைத் தில்லை வாழ்ந்தணர்கள் தரிசித்து இன்புற்றனர். ஆன்மாவும் சிவமும் அத்துவிதமாய் மனமகிழ்ந்த அவசரமாய் நின்று துதித்து விடை பெற்றுச் சோழ நாடு சென்று, சிதம்பரம் அடைந்து பண்டைக்காலம் போல் வாழ்ந்திருந்தனர். அவ்வந்தணர் தோற்றுவித்துப் பூசித்த ஆலயத்திற்கே அழகிய திருச்சிற்றம்பலம் என்று பெயர் வழங்கியது. இறைவன் அழகிய திருச்சிற்றம்பல முடையார் எனப்பட்டனர்.

கல்வெட்டுச் சான்றுகள் :

கர்ப்பக் கிருகத்தின் முன்புறங்களிலும் கல் வெட்டுக்கள் இருக்கின்றன. அவைகளை ஆராய்ந் தால் கோயிலின் சரிதப் பகுதிகள் பலவற்றை நன்கு அறியலாம். பேரூர்ப் புராணத்தின்படி இக்கோயில் சுந்தரமூர்த்திகள் பேரூருக்கு வந்து விட்டுப் போனவுடன் தில்லைவாழ் அந்தணர்கள் இங்கு வந்து இதனைத் தாபித்தார்கள் என்பதாம். அதாவது 9ஆம் நூற்றாண்டில் (1000 ஆண்டு களுக்கு முன்) அப்போதுள்ள மூலத்தானம் மட்டும் ஏற்பட்டிருக்கும். பிறகு ஆலயம் ஏற் பட்டது. கொங்குச் சோழர் காலம் என்று கல் வெட்டுச் சான்றுகள் கூறுகின்றன. கல்வெட்டுக் கள் 1000 முதல் 1200 ஆண்டளவில் பரந்திருப் பதினால் மன்னர்கள் இந்த ஸ்தாபிதத்தை அங்கீ கரித்துக் கோயில் எழுப்பி உள்ளார்கள், தான தருமங்களும் செய்திருக்கிறார்கள் பொதுவாக இற்றைக்கு 8 அல்லது 9 நூற்றாண்டுகளுக்கு முன்பு இவைகள் ஆகியிருக்கலாம்.

இந்தக் கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள் 1962-இல் அரசாங்கத்தாரால் படி எடுக்கப் பட்டன. விட்டுப்போன கல்வெட்டுக்கள 4 கோயில்களில் இருந்தன. அவைகளில் ஒன்று அழகிய சிற்றம்பலம். அவைகளில் 15 தமிழி லும், 3 வட்டெழுத்திலும் உள்ளன. அரசர் வீரராஜேந்திரன், விக்கிரமன் என்பார்கள். வீரராஜேந்திரன் 1209—1252 வரையில் ஆண்ட ஒரு புகழ் பெற்ற அரசன். அவனுக்கு முன்னும் பின்னும் விக்கிரமன் என்ற பெயரில் நான்கு மன்னர்கள் இருந்தார்கள். முதல் விக்கிரமன் 1004-இல் பட்டம் பெற்றவன். ஆகவே பொது வாக அக்காலத்தை நிச்சயிக்கலாம். இக்கல் வெட்டுக்களின்படி இக்கோயில் இறைவனுடைய திருப்பெயர் ‘இடங்கை நாயகம் உடையார்’ என்பது. இப்பெயர்தான் கோயில் கட்டப்பட்ட போது வழங்கியதென்க. ‘அழகிய சிற்றம்பலம்’ என்பது 200 ஆண்டளவில் ஏற்பட்டதாக இருக்க லாம்.

கல்வெட்டுக்களில் சில அரிய செய்திகளைக் காண்கிறோம். ஒரு கோயில் கட்டுகையில் முழுப் பொறுப்பையும் ஒரே ஆள் எடுத்துக் கொள்ளா மல், பலபேர் சேர்ந்து ஒவ்வொரு பகுதியை எடுத்துக் கட்டினதாகத் தெரிகிறது. இது மக்க ளின் ஒத்துழைப்பைக் காட்டுகிறது. உதாரண மாக, வாயில், கதவு, நிலவு விட்டம் முதலியவை களை வெவ்வேறு ஆட்கள் தந்துதவியிருக்கிறார்கள்.

விக்கிரமசோழன் காலத்தில் இடங்கை நாயக முடையார் கோயில் கட்டப்பட்டிருத்தல் வேண் டும். கட்டிடம் கட்டினது, ஆராதனைக்கு நெல் தானம் தந்தது, எல்லாம் அவ்வரசன் காலத்தில் ஏற்பட்டிருக்கின்றன.

இக்கோயில் மூர்த்திகளில் இடங்கை நாயகம் உடையார் என்ற பெயரோடு வேத நாயகம் என்ற பெயரும் இருக்கக் காண்கிறோம். இவ்விரு மூர்த்திகளும் எவை எவை என்று தெரிய வில்லை.

இடங்கை நாயகம் உடையார் என்ற பெயருக் குப் பொருள் விளங்கவில்லை. வடமொழிப் பெயரும் தெரியவில்லை. முக்காலத்தில் மக்களில் இடங்கை வலங்கை என்ற இருவகுப்புக்கள் இருந் தன. இவ்விரு கட்சிகளுக்கும் அடிக்கடி சச்சரவு கள் ஏற்பட்டதுண்டு. இடங்கை வகுப்பார் வெற்றியடைந்த போது வெற்றிச் சின்னமாக இக் கோயிலைக் கட்டி அப்பெயரையே இறைவனுக்கு இட்டிருக்கலாம்.

மேலும் இடங்கை நாயகம் உடையார் கோயி லுக்கு ஆராதனைக்காக ஆண்டு ஒன்றுக்கு ஒரு நாட் செலவைக் கொடுப்பதற்கு ஒரு தொகுதி யார் பொறுப்பு ஏற்றுக்கொண்டார்கள். அன்னார் பெயர்கள் வீரசமுக்கட்டார், அம்மங்காரர், சேனாதிபதிகள் என்று குறித்திருக்கக் காண் கிறோம். ஒவ்வொரு நாட் செலவை ஒவ்வொரு சமூகத்தினர் ஏற்றுக் கொள்ளும் வழக்கம் அந் நாளிலேயே இருந்தது என்க.

உள்ளுறை பொருளாராய்ச்சி

மகாவித்வான் ஸ்ரீமந் P. B. அண்ணங்கராசார்ய ஸ்வாமிகள், காஞ்சீபுரம்:

(முன் இதழ்த் தொடர்ச்சி)

4. நீர்வண்ணன் விசேஷார்த்தம்.

எம்பெருமான் திருநீர்மலையிலே **நீர் வண்ண**னென்றும் கச்சியூரகத்தில் நீரகத்தானென்றும் திருநாமம் பெற்றிருப்பது ப்ரஸித்தம். நீர்க்கும் எம்பெருமானுக்கும் ஒப்பு பல படிகளாலுண்டு.

1. நீர் பள்ளத்தில்தானே பாயும், மேட்டில் ஏறுவது அருமை. எம்பெருமானும் ஜாதி முதலியவற்றால் குறைந்தாரிடத்தே எளிதாகச் செல்லுவன; உயர்ந்தோமென்று மார்பு நெறித்திருப்பாரிடத்தே செல்ல விரும்பான். பாண்டவர்கட்காகத் தூது எழுந்தருளும் போது, ஞானத்தால் சிறந்தோமென்றிருக்கும் பீஷ்மாசாரியரையும் குலத்தால் சிறந்தோமென்றிருக்கும் த்ரோணாசாரியரையும் செல்வத்தால் சிறந்தோமென்றிருக்கும் துரியோதனனையும் ஒரு பொருளாக மதியாதே இவையெல்லாவற்றாலும் தாழ்ந்தவராகத் தம்மை நினைத்திருந்த ஸ்ரீவிதுரருடைய திருமாளிகையிலே தானாகவே சென்று* முன்னமே துயின்றருளிய முதுபயோததியோ, பன்னகாதிபப் பாயலோ பச்சையாலிலையோ, சொன்ன நால்வகைச் சுருதியோ? கருதி நீ யெய்தற்கு, என்ன மாதவஞ்செய்ததிச் சிறுகுடி லென்றான்* [வில்லிபாரதம்] என்று அவர் உள் குழையுமாறு இருந்து அமுது செய்தருளினான் கண்ணபிரான்; ஆகவே, பள்ளத்தேயோடிப் பெருங்குழியிலே தங்குமியல்வு நீருக்கும் எம்பெருமானுக்கு மொக்கும்.

1. நீர் இல்லாமல் ஒரு காரியமும் ஆகாது; அப்படியே எம்பெருமானின்றி ஒரு காரியமுமாகாது "லோகோ பிந்நருசி" என்கிறபடியே ஒருவன் விரும்பினதை மற்றொருவன் விரும்பாதபடி உலகம் வெவ்வேறு விருப்பத்தையுடையதாயினும் எல்லோரும் நீரை விரும்பியேயாகவேண்டும்; அதுபோலவே எம்பெருமானையும்.

3. நீர்க்குக் குளிர்ச்சி இயற்கை; சூடு வந்தேறி; எம்பெருமானுக்கும் தண்ணளி இயற்கையாய்ச் சீற்றம் வந்தேறியாயிருக்கும், "நீரிலே நெருப்புக் கிளருமா போலே குளிர்ந்த திருவுள்ளத்திலே அபராதத்தாலே சீற்றம் பிறந்தால்" என்ற முமுக்ஷுப்படி திவ்ய ஸூக்தி காண்க.

4 நீர் சுட்டாலும் அதை ஆற்றுவதற்கு நீரே வேணும்; எம்பெருமான் சீறினாலும் அவன்றானே தெளிவு பெற வேணும். "தருதுயரந் தடாயேல் உன் சரணல்லால் சரணில்லை" என்றார் குலசேகரப் பெருமாள்; "நிராஸகஸ்யாபி நதாவதுத்ஸஹே மஹேச! ஹாதும் தவபாதபங்கஜம் என்றார் ஆளவந்தாரும்.

5. நீர் நம் இஷ்டப்படி தேக்கிவைக்கவும் ஓடவிடவும் உரியதாயிருக்கும். எம்பெருமான் படியுமப்படியே; *"ஸ்வோச்சிஷ்டாயாம் ஸ்ரஜி நிகலிதம் யா பலாத் க்ருத்ய புங்க்தே கோதா" என்கிறபடியே ஆண்டாள் தான் சூடிக்களைந்த மாலையிலே விலங்கிட்டு வைத்துப் புஜிக்க நின்றானெம்பெருமான், பாண்டவர்கட்காகக் கழுத்திலே ஓலைகட்டித் தூது போகவிடப்பெற்றான். ஆண்டாள் தேக்கி

வைத்தனள். பாண்டவர்கள் ஓடவிட்டனர்.

6. நீரானது மற்ற பண்டங்களைச் சமைப்பதற்குக் கருவியாயிருக்கும்; தனிப்படத் தானே குடிக்கத்தக்கதுமாயிருக்கும். எம்பெருமானுக்கும் உபாயத்வம் உபேயத்துவம் என்ற இரண்டு ஆகாரங்களுண்டே. எம்பெருமானைக்கொண்டு வேறு பலன்களைப் பெற விரும்புவாரும் எம்பெருமான்றன்னையே ஸ்வயம் புருஷார்த்தமாகக் கொள்வாருமுள்ளமை காண்க.

7. அன்னம் முதலானவை தமக்குப் பிரதிநிதிகளை ஸஹிக்கும்; அதாவது, காய் கனி கிழங்கு வேர் பால் முதலியவற்றால் தேஹதாரணம் பண்ணலாம்; பண்ணுவாருமுளர். நீரானது அப்படி பிரதிநிதியொன்றையும் ஸஹிக்கமாட்டாது; நீர்க்கு நீரே வேணும்; அப்படியே எம்பெருமானுக்கும் பிரதிநிதி கிடையாது; குணுநுஸந்தாநத்தாலும் போது போக்கவரிது; "ஒருநாள் காணவாராயே" "அடியேன் தொழவந்தருளே" என்று பிரார்த்தித்துப் பெற்றே தீரவேண்டும். உணவுப் பொருள்களில் அரிசிக்குப் பதிலாக கோதுமையோ பாலோ மற்றும் எந்தப் பொருளோ அவரவர்களின் ருசிக்கு ஏற்றபடி வைத்துக்கொள்ளப்படுவதுண்டு. ஆனாலும் நீருக்குப்பதிலாக வேறெதுவும் வைத்துக் கொள்ளப்படுவதில்லை; நீர் ஒருவராலும் விடமுடியாதது. அதுபோல கர்மஜ்ஞாநபக்திப்ரபத்தி முதலியவற்றில் எதைவிட்டு எதைப்பற்றினாலும் எம்பெருமான் ஒருபடியாலும் விடத்தகாதவன் என்றதாயிற்று. இது மிக நுட்பமான தத்துவப் பொருள்.

8. சோறு உண்ணும்போது நீர் இல்லாமல் முடியாது; அப்படி நீர் வேறொன்றை அபேக்ஷிப்பதன்று. எம்பெருமான் படியுமப்படியே; உபாயாந்தரங்களுக்கு எம்பெருமான் வேணும்; எம்பெருமான் இதர நிரபேக்ஷன். (அதாவது) எதையும் எதிர்பாராதவன். "உன்னாலல்லால் யாவராலுமொன்றுங் குறை வேண்டேன்" என்றாரே நம்மாழ்வார்.

9. கொள்ளும் பாத்திரங்களின் தாரதம்மியமேயன்றி நீர் தான் குறைய நில்லாது; எங்கும் நிரம்பவற்று; எம்பெருமானும் *வேண்டிற்றெல்லாந் தருங்கோதில் வள்ளல் என்று நம்மாழ்வாரருளிச் செய்தபடி எங்கும் நிரப்பவல்லவன். கொள்வார் குறையே யத்தனை; ஐச்வரியமே போதுமென்பாரும் கைவல்யமே போதுமென்பாருமாகக் குறையக்கொள்வாருடைய குற்றமே. க்ஷுத்திரமான ஐசுவரியம் உத்தமமான முத்தியளவும் எதையுமளித்து நிரப்பவல்லவன்.

10. நீர் ஐவகைப்பட்டிருத்தல்போல எம்பெருமானும் ஐவகைப்பட்டிருப்பவன்; எங்ஙனே யென்னில்; (1) பூமிக்குள்ளே பதிந்து கிடக்கின்ற நீர், (2) ஆவரண ஜலம், (3) பாற்கடல் நீர், (4) பெருக்காற்று நீர், (5) தடாகங்களில் தேங்கும் நீர்—என ஜலம் ஐவகைப்படும். விடாய்த்தவனுக்கு வேறோரிடம் தேடிப் போக வேண்டாதபடி நிற்கிறவிடத்திலேயே உண்டாயிருக்கச் செய்தேயும் கோட்டும் குந்தாலியுங்கொண்டு கல்லினலல்லது குடிக்கக்கிடையாத பூமிக்குள் பதிந்த நீர்போலேயாய்த்து அந்தர்யாமித்வம்: கண்டு பற்றவேணுமென்று ஆசைப்பட்டவனுக்கு ஹ்ருதயத்திலேயிருக்கச் செய்தேயும் கண்ணுக்கு விஷயமன்றிக்கே அஷ்டாங்கயோகமாகிற யத்நத்தாலே காணவேண்டும்படியான தன்றோ இது. (2) விடாய்த்தவனுக்கு, அண்டத்துக்கு வெளியே பெருகிக் கிடக்கிற ஆவரண ஜலம்போலேயாயிற்று—கண்டு பற்றவேணுமென்றிருக்கிறவனுக்கு லீலாவிபூதிக்கு அப்பாற் பட்டிருக்கிற பரத்வம். (3) அப்படி அதிதூ

ரஸ்தமன்றியே அண்டத்துக்கு உட்பட்டிருக்கச் செய்தேயும் விடாய்த்தவனுக்குக் கிட்டவரிதான பாற்கடல் போலேயாயிற்று சென்று காணவரிதாம்படியிருக்கிற வ்யூஹம். (4) ஸமீபஸ்தமாயிருந்தும் தத்காலத்திலிருந்தவர்களுக்கு மட்டும் உபயோக யோக்யமாய்ப் பிற்பட்டவனுக்கு அரிதான பெருக்காறு போலேயாயிற்று—ராமக்ருஷ்ணுதி அவதாரங்களான விபவம்; பூமியிலே அவதரித்து ஸஞ்சரித்தும் தத்காலத்திலிருந்தவர்களுக்கே ஆச்ரயணீயமாய்ப் பிற்காலத்திலுள்ளவர்களுக்குக் கிட்டாதபடியாயிருப்பதன்றே இது. (5) விடாய்த்தவனுக்கு விடாய்தீரப் பருகலாம்படி பெருக்காற்றிலே தேங்கின மடுக்கள் போலேயாயிற்று கோயில்களிலும் க்ருஹங்களிலும் எங்குமொக்க எல்லார்க்கும் கண்ணுக்கு இலக்காம்படி நிற்கிற அர்ச்சாவதாரம். ஆக இந்த ஐந்து வகைகளினுலும் ஐவகை நீரை யொத்திருப்பான் எம்பெருமான். இது ஸ்ரீவசன பூஷணத்தில் காட்டின முறை.

11. நீரானது இயற்கையிலே பரிசுத்தமாயினும் ஆதாரவசத்தாலே கொள்ளத்தக்கதும் தள்ளத்தக்கதுமாகிறது; அப்படியே பிறதெய்வங்களில் அந்தர்யாமியான எம்பெருமான் உபேட்சிக்கத்தக்கவனுகவும் *கூராராழி வெண்சங்கேந்தின எம்பெருமான் உத்தேசியனுகவும் உள்ளமை காண்க.

12. தோண்டத் தோண்டச் சுரக்கும் நீர்; எம்பெருமானும் *கொள்ளமாளா வின்பவெள்ளமாய்ப் பேசப்பேச வளர்ந்திடுவன், *செலக் காண்கிற்பார் காணுமளவும் செல்லுங் கீர்த்தியால்* என்றுரே நம்மாழ்வார்; பேசுவார் எவ்வளவு பேசுவர் அவ்வளவே வாசமலர்த் தண்டுழாய் மார்வன்–வடிவு என்ருர் பேயாழ்வாரும்.

13. நீர் தனக்கொரு ப்ரயோஜனமின்றியே பரார்த்தமாகவே யிருக்கும்; நதே ரூபம் நசாகாரோ நாயுதாநி ந சாஸ்பதம், ததா பி புருஷாகாரோ, பக்தா நாம் த்வம் ப்ரகாசஸே என்கிறபடியே எம்பெருமானுடைய ஸ்வரூபம் ரூபம் குணம் விபூதிகள் ஆகியவெல்லாம் நம்போன்ற அடியார்களுக்காகவேயிருக்கும்.

14. நீர் தானே பெய்யவேணுமேயன்றி ஒருவரால் வடிம்பிட்டுப் பெய்விக்க முடியாதது; எம்பெருமான்படியுமிப்படியே; அவன் தனது இயற்கையின்னருளால் இரங்கினுலுண்டு.

15. நீர் கடலிலிருந்து காளமேகம் வழியாக வந்தாலன்றி உபஜீவிக்கவுரியதாகாது; எம்பெருமானும் சாஸ்திரங்களிலிருந்து ஆசாரியர் முகமாக வந்தே உபஜீவ்யனுகிருன். "மேகம் பருகின ஸமுத்ராம்பு போலே நூற்கடற்சொல் இவர் வாயனவாய்த் திருந்தினவாறே ஸர்வதா ஸர்வோப ஜீவ்யமாமே" என்ற ஆசார்யஹ்ருதய ஸூக்தி காண்க.

16. சிறியார் பெரியாரென்கிற விபாகமின்றியே அனைவரும் ஓர் துறையிலே படிந்து குடைந்தாடலாம்படி யிருக்கும் நீர்; எம்பெருமானும் 'நிகரிலமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே!" என்றும் "கானமும் வானரமும் வேடுமுடை வேங்கடம்" என்றும் சொல்லுகிறபடியே பெரியார் சிறியார் என்னும் வாசியற ஒக்க ஆச்ரயிக்கலாம் படியருப்பன்.

17. நீர் சிறிது துவாரம் கிடைத்தாலும் உட்புகுந்துவிடும்; — எம்பெருமானுக்கும் சிறிது வியாஜமே போதும்; "திருமாலிருஞ்சோலைமலை யென்றேனென்னத், திருமால்வந்தென்னெஞ்சு நிறையப் புகுந்தான்" என்றும் "மாதவனென்றதே கொண்டு என்னுள் புகுந்திருந்தான்" என்றும் அருளிச் செய்தார் நம்மாழ்வார். ஸ்ரீவசன பூஷணத்தில் 'என்னுரைச் சொன்னுய் என்பேரைச் சொன்னுய்" இத்யாதி ஸ்ரீஸூக்திகளும் காண்க.

18. கங்கை, காவிரி, திரிவேணி முதலான தீர்த்த விசேஷங்களிலே நீருக்கு மாஹாத்மியம் அதிகம்; எம்பெருமானுக்கும் கோயில் திருமலை பெருமாள்

கோயில் முதலான திருப்பதிகளிலே சிறப்புப்பொலியும்.

19. தாபம் மிக்கவர்கள் நீரை முகத்திலேயேறட்டுவது முதுகில் கொட்டுவது உள்ளில் இழிச்சுவது, படிந்து குடைந்தாடுவதுபோல் "வாக்கினுல் கருமந் தன்னுல் மனத்தினுல் சிரத்தை தன்னுல், வேட்கைமீதூரவாங்கி விழுங்குவர்கள் எம்பெருமானையும் என்கிருர் திருமங்கையாழ்வார்.

20. நீர் வேண்டியவன் ஒரு துளி நாக்கு நனைக்கக் கிடைத்தால் போது மென்பன்; "கூராராழி வெண்சங்கேந்திக் கொடியேன்பால் வாராய் ஒருநாள் மண்ணும் விண்ணும் மகிழவே" என்றும் "ஒரு நாள் காணவாராயே" என்றும் "நம்மையொருகால் காட்டி நடந்தால் நாங்களுய்யோமே" என்றும் ஆழ்வார்கள் கூறுவர் எம்பெருமானை நோக்கி.

21. நீரில் சிறிய கல்லும் அமிழும்; பெரிய தெப்பமரமும் மிதக்கும்; எம்பெருமான் பக்கலிலும் "ப்ரஹ்மாவாய் இழந்துபோதல் இடைச்சியாய்ப் பெற்று விடுதல் செய்யக் காணு நின்றேமிறே" என்கிற ஸ்ரீவசனபூஷண ஸூக்தியின் படியே பெரியார் இழக்கவும் சிறியார் பெறவுமாகும். "நேரே கடிக்கமலத்துள்ளிருந்துங் காண்கிலான், கண்ணனடிக்கமலந்தன்னை யயன்," என்று பிரமன் இழந்ததைப் பொய்கையார் கூறினர். "மருவுநின் திருநெற்றியில் சுட்டியசைதர மணிவாயிடை முத்தந் தருதலும், உன்றன் தாதையைப்போலும் வடிவு கண்டுகொண்டுள்ள முள் குளிர விரலைச் செஞ்சிறுவாயிடைச் சேர்த்து வெகுளியாய் நின்றுரைக்கு மவ்வுரையும் திருவிலேனொன்றும் பெற்றிலேன் **எல்லாம் தெய்வநங்கை யசோதை பெற்றுளே**" என்று இடைச்சி பெற்றதைக் குலசேகராழ்வார் கூறினர். பகவத் குணங்களில் சிறுமாமனிசர் அமிழ்தலும்* ஊன்மல்கிமோடு பருப்பார் வாய்க்கரையில் நிற்றலுங்கொள்க.

22. "துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத், துப்பாயதூஉம் மழை" (திருக்குறள்) என்கிறபடியே அன்னத்தின் அபிவிருத்திக்கு ஹேதுவாகையாலே ஸாதனமாயும், விடாய் தீரப் பருகுகையாலே ஸ்வயம் போக்யமாயுமிருக்கும் நீர்; உபாயமும் தானுய் உபேயமும் தானுயிருப்பன் எம்பெருமானென்பது நூற்கொள்கை. இங்ஙனே மற்றுங்காண்க.

5. களிறு விசேஷார்த்தம்

எம்பெருமானை ஆழ்வார்கள் பல விடங்களிலும் யானையாகப்பேசி யநுபவிக்கிருர்கள். *தென்னுனாய் வடவானுய் குடபாலானுய் குணபால மதயானுய்* என்றும், *என்னானை யென்னப்ப னெம்பெருமான்* என்றும் *சோலை மழகளிறே* என்றும் பலபல அருளிச் செயல்களுள்ளன. *குஞ்ஜரம் வா அத்ரி குஞ்ஜே* என்றுர் பட்டரும்.

யானைக்கும் எம்பெருமானுக்கும் பல படிகளாலே ஸாம்யமுண்டு:—

1. யானை, எத்தனை தடவை பார்த்தாலும் பார்க்கும்போதெல்லாம் அபூர்வ வஸ்துபோலவே யிருந்து பரமானந்தம் பயக்கும்; எம்பெருமானும் "எப்பொழுதும் நாள் திங்களாண்டூழியூழிதொறும், அப்பொழுதைக் கப்பொழுதென்னுராவமுதமே" என்னும்படியிருப்பன்.

2. ஆனையின்மீது ஏறவேண்டியவன் ஆனையின் காலைப்பற்றியே ஏறவேண்டும்; எம்பெருமானிடஞ் சென்று சேரவேண்டியவர்களும் அவனது திருவடியையே பற்றிச் சேரவேண்டும். *உன்னடிக்கிழமர்ந்து புகுந்தேனே.' என்றுர் நம்மாழ்வார்.

3. ஆனை தன்னைக்கட்டத் தானே கயிறு எடுத்துக்கொடுக்கும்; 'எட்டினேடிரண்டெனுங் கயிற்றினுல்" (திருச்சந்தவிருத்தம்) என்கிறபடியே எம்பெருமானைக் கட்டுப்படுத்தும் பக்தியாகிற கயிற்றை அவன்றனே தந்தருள்வன்; 'மதிநலமருளினன்" என்றுர் நம்மாழ்வார், "நின்ன பாத பங்கயம் நிரந்தரம் நினைப்பதாக நீ நினைக்க வேண்டுமே" என்றுர் திருமழிசையாழ்வார்.

—தொடரும்.

சிவஞான போதம்

—248-ம் பக்கத் தொடர்ச்சி

பிறர் கூறும் பக்கம் :—எல்லாம் சிவமாகக் காணும் சிவஞானிகளுக்குத் திருவேடத்தையும் சிவாலயத்தையும் தொழுதல் வேண்டற்பாலதன்று.

சிந்தாந்தத் துணிபு :— முதல்வன் பொருட்பெற்றிபற்றி நோக்கின் உலகின் வேறு ஆவன்; கலந்து நின்று இயக்குதல் பற்றி (பிரேரகன் ஆதல் பற்றி) நோக்கின், எல்லாம் சிவனென நிற்பன் என்னும் அடிப்படை மெய்யுணர்வை யாண்டும் மறத்தல் கூடாது. இனி, எல்லாம் சிவனென நிற்குமிடத்துச் சில இடங்களில் மட்டும் தயிரில் நெய்போல விளங்கித் தோன்றுவன்; பிற இடங்களில் பாலில் நெய்போல விளங்காது மறைந்து நிற்பன். தயிரில் நெய்போல விளங்கித் தோன்றும் இடங்களே திருவேடமும் ஆலயமும். ஆதலால், சிவன் திருவருளை மறவாது கடைப்பிடித்தற்கு வேண்டிய அன்பு விளையும் இடங்கள் திருவேடமும் சிவாலயமுமே. அதுபற்றி அவ்விரண்டையுமே சிவன் எனக் கண்டு வழிபடா நிற்பர். மற்றிடங்களில் தமக்கு இன்பத் துன்பங்கள் விளையும்போது அவை முதல்வன் திருவருளால் தமக்கு வருவன என்னும் நோக்கால் தீமையும் நன்மையாய், பெற்ற சிற்றின்பமும் பேரின்பமாய் நுகரப் பெறுதலே "எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் — மெய்ப்பொருள் காண்ப தறிவு" என்ற பொது மறையின் நோக்காம். அமணர் இட்ட நீற்றறையைச் சிவன் சேவடி நீழல் எனவே உணர்ந்து இன்புற்ற திருநாவுக்கரசர் அனுபவமும் அவர்தம் ஒழுக்க நெறியும், ஈண்டு இலக்கியமாகக் கொண்டு உணர்தற்கு உரியன.

திருவேடங்களிடத்திலும் சிவலிங்கம் முதலிய திருமேனிகளிலும் சிவபிரான் தயிரில் நெய்போல் நிற்றலைப் பின் வருமாறு உதாரணச் செய்யுள்களால் விளக்குகிறார் ஆசிரியர் :-

(1) சிந்தனைக்கெட்டாத பரமசிவன் உலகர் தன்னை அறிந்து வழிபடுதற் பொருட்டுத் தனது திருவுருவாகிய திருநீறு கண்டிகை கல்லாடை சடைமுடி முதலிய திருவேடத்தை மெய்யன்பர்க்குக் கொடுக்கின்றான்; அவர்கள் தன்னைச் சிவோகம்பாவனையால் தலைப்பட்டுத் தானேயாக நின்றின்புறும்படி அருள்கின்றான்; அங்ஙனம் தன்னை அகத்தே ஒரு குறியின்கண் நின்று உணரும்போது அவர்களைத் தன் வியாபகத்துள் அடக்கி இருத்துகிறான்; அவர்கள் தன்னைக் குறியிறந்து நின்றும் உணர்ந்தின்புறச் செய்கின்றான். இங்ஙனம் வேடம், பாவனை; செயல், தன்மை, என்பவற்றால் மெய்யன்பர் சிவமே ஆவர்; சிவன் ஏனைப் பாசத்தார் கண்ணும் உளனேனும் அங்கு விளக்கமின்றியே நிற்பன்.

தன்உணர வேண்டித் தனதுருவைத் தான் கொடுத்துத்
தன்உணரத் தன்உள் இருத்தலால்—தன் உணரும்
நேசத்தார் தம்பால் நிகழும் ததிநெய்போல்
பாசத்தார்க் (கு) இன்றாம் பதி'

முதற்கண்வரும் 'தன்உணர்தல் என்பது சிவோகம் பாவனையால் தன்னை உணரச் செய்தல்'. பின்வரும் உணர்தல் குறியிறந்து உணர்தல். இப் பொருட் குறிப்பினையே,

"அறிவொன்றற நின்று அறிவார் அறிவில்
பிறிவொன்றற நின்ற பிரான்அலையோ?"

என்னும் கந்தர் அனுபூதியும் விளக்கும்.

அடியார்களிடத்து இவ்வியல்பு இருத்தல் பொருந்தும். சிவலிங்கம் முதலிய திருமேனிகளுக்கு இவ்வியல்பு இல்லையே எனின், அங்கு மந்திர சாந்நித்தியம் (எண்ணுவோர் நினைவால் அணுகி நிற்றல்) பற்றியும் பற்றாதும் விளங்கி நிற்றலைக் கூறுகின்றார்.

உயிர்களுக்குப் போக மோட்சங்களைக் கொடுத்தற பொருட்டு முதல்வன் மேற்கொண்ட வடிவே திருக்கோயிலில் உள்ள வடிவங்கள். அவ்வடிவங்களை முதல்வன் எனவே காண வல்லவர்கள் சீவன் முத்தார்கள்; ஏனையோர் அங்ஙனம் அதுவே

தானுய்க் காண மாட்டார். விறகில் உள்ளதி கடைந்த போது வெளிப்படும்; கடையாதபோது வெளிப்படாது. அது போல, திருவுருவங்களை முதல்வன் எனக் காணமாட்டாத ஏனையோர்க்கு மந்திர சாந்நித்தியம் உள்ளபோதே வெளிப்பட்டு அருள்வன். அஃதில்லாதபோது வெளிப் படான். வெளிப்பட்டுத் தோன்றுன் எனக் கருதுவோர்க்கும் வெளிப்படாது நின்றே அவர் செய்யும் வழிபாட்டினை ஏற்று அருள் புரிவன். ஆனல் அத்திரு வுருவே சிவம் என உணர்ந்து அணுக வல்ல சிவஞானிகளுக்கு எப்போதும் வெளிப்பட்டே நின்று அருள் புரியா நிற்பன்.

கண்டதொரு மந்திரத்தால், காட்டத்தில் அங்கிவே(று)
உண்டல்போல், நின்றங்(கு) உளதாமால்— கண்ட உருத்
தான் அதுவாய் அன்றுனன் தான் அதுவாய்த் தோன்ருனே?
தான் அதுவாய்க் காணும் தவர்க்கு?

திருஞானசம்பந்தர் முதலாயினர் திருக் கோயிலுட் சென்று முதல்வன் திரு மேனியைக் கண்ட போதே முதல்வனைக் கண்டது போலவே பேரின்பம் நுகர்தலும், தாம் வேண்டியாங்கு எவ்வித முயற்சியும் இன்றி எய்தப் பெறுதலும் பெரியபுராண வரலாறுகள் பற்றி உணரத் தக்கவை.

—தொடரும்.



திருப்பணிவேந்தர் திருவலம் மகான் ஸ்ரீலஸ்ரீ சிவானந்த மௌனகுரு சுவாமிகள் அவர்கள் திருவான்மியூர் மருந்தீசுவரர் கோயில் திருப்பணித் தொடக்க விழாவில், கலந்து கொண்டு சிறப்பித்த நமது தமிழக முதலமைச்சர் அவர்களுக்குத் திருநீறு வழங்குதல். (8-12-65).

ஒன்றொழி பொதுச்சொல்

பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல் உரிச்சொல் என நான்காகச் சொற்களைப் பிரித்தமைபோல, ஒவ்வொரு மொழியிலும் உள்ள சொற்களையெல்லாம், வெளிப்படைச் சொற்கள் குறிப்புச் சொற்கள் எனவும், முறையே இருவகையாகப் பிரிக்கலாம். 'மொழியானது கருத்துக்களை வெளியிட உதவுகின்றது என நாம் பொதுவாகக் கருதுகின்றோம். ஆனால் சில சமயங்களில் நம்முடைய கருத்துக்கள் பிறர்க்கு வெளியாகி விடாமல் மறைப்பதற்கும் மொழி பயன்படுகின்றது. அது மட்டுமன்றி, நம்மிடம் கருத்துக்கள் எதுவும் இல்லை என்னும் உண்மை புலனாகி விடாமல் இருப்பதற்கும் மொழியானது துணைபுரிகின்றது' என அறிஞர் ஒருவர் நயந்தோன்ற நவில்கின்றார். அம்முறையில் நம் கருத்தை மறைப்பதற்கோ, அல்லது நாம் வெளியிட விரும்பும் கருத்தை மிக நயமாகவும் நாகரிமாகவும் நுண்ணிதிற் புலனாகுமாறு தெரிவித்தற்கோ, துணை புரியும் சொற்களே குறிப்புச் சொற்கள் எனலாம். இங்ஙனம் சொற்கள், வெளிப்படை குறிப்பு என இருவகைப்படுதலை ஆசிரியர் தொல்காப்பியர்,

> "தெரிபுவேறு நிலையலும் குறிப்பிற்
> றோன்றலும்
> இருபாற் றென்ப பொருண்மை நிலையே"

என அருளிச் செய்தார். இதனை "வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே" எனப் பவணந்தியார் கூறுகின்றார்.

குறிப்புச் சொற்களாவன: இருதிணை ஆண் பெண்ணுள் ஒன்றனை யொழிக்கும் பொதுச் சொல்லும், வலித்தல் மெலித்தல் முதலிய ஒன்பது விகாரச் சொல்லும், இடக்கர் அடக்கல் மங்கலம் குழூஉக்குறி என்னும் மூவகைத் தகுதி வழக்குச் சொல்லும், ஆகுபெயர் அன்மொழித் தொகை வினைக்குறிப்பு முதற்குறிப்பு தொகைக் குறிப்பு என்னும் சொற்களும் பிறவுமாம். இதனை,

> "ஒன்றொழி பொதுச்சொல், விகாரம், தகுதி
> ஆகுபெயர், அன்மொழி, வினைக்
> குறிப்பே,
> முதல், தொகைக் குறிப்போடு இன்ன
> பிறவும்
> குறிப்பில் தரும்மொழி; அல்லன
> வெளிப்படை"

எனவரும் நன்னூற் சூத்திரத்தால் உணரலாம். இவற்றுள் ஒன்றொழி பொதுச் சொல்லானது 'ஆயிரம் மக்கள் பொருதார்' என்புழி, ஆண் பெண் என்னும் இரு பாற்கும் உரிய மக்கள் என்னும் பொதுச் சொல், பொருதார் என்னும் வினைச்சொல்லின் குறிப்பாற் பெண் மக்களை விலக்கி, ஆண் மக்களை மட்டுமே சுட்டி நின்றாற் போல்வதும்; 'பெருந்தேவி பொறையுயிர்த்த அறையில் நால்வர் மக்கள் உளர்' என்புழி, ஆண்பெண் என்னும் இருபாற்குமே உரிய மக்கள் என்னும் சொல், பொறையுயிர்த்த அறை என்ற குறிப்பினால் ஆண்களை விலக்கிப் பெண்களை யுணர்த்தி நின்றாற் போல்வதும் பிறவுமாம்.

> "பெயரினும் தொழிலினும் பிரிபவை
> யெல்லாம்
> மயங்கல் கூடா: வழக்குவழிப் பட்டன"

---

(1) "We may first call to mind three competing statements, first the everyday remark that language exists to express one's thought, next Talleyrand's well-known mot that language exists to hide one's thoughts, and lastly Soven Kierkegaard's improvement of it, that language is used by many people to hide the fact that they have no thoughts."

—Otto Jespersen, Mankind Nation and Individual, p. 6.

என்னும் நூற்பாவால், "உயர்திணைக் கண்ணும் அஃறிணைக் கண்ணும் ஆண் பெண் என்னும் இருபாற்கும் உரிய பொதுச் சொற்கள், தம்மையடுத்து வரும் பெயர்ச்சொல் வினைச்சொற்களால் தமக் குரிய இருபால்களுள் ஒன்றனை யொழித்து, மற்றொன்றினைக் குறிப்பான் உணர்த்தி வரும்" எனத் தொல்காப்பியர் இது குறித்து விதி வகுத்தருளியுள்ளார். இதனைத் தழீஇ, உரையாசிரியர்கள் தம் உரைப் பகுதிகளின் இடையே 'இப் பெயர் ஈண்டு ஆணொழித்து நின்றது' 'பெண்ணொழித்து நின்றது' என ஆங் காங்கு இலக்கணக் குறிப்புக்கள் எழுதிச் செல்வர்.

> "பெறுமவற்றுள் யாமறிவ தில்லை;
> அறிவறிந்த
> மக்கட்பே றல்ல பிற"

என்னும் திருக்குறள் உரையின்கண் ஆசிரியர் பரிமேலழகர், "அறிவறிந்த என்றதனால் மக்கள் என்னும் பெயர் பெண்ணொழித்து நின்றது" என எழுதி யிருத்தல் காணலாம். இவ்விலக்கணக் குறிப்பினை உள்ளத்திற் கொண்டு தெள்ளு தமிழ்ப் பெருங்கவிஞர் பெருமான் ஆகிய துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள், ஓர் அரிய இனிய பாடலின் கண் கவிதைநலம் திகழவும், கற்பனை நயம் பொலியவும், இறைவியின் பெருமையினை அழகுறச் சுட்டிக்காட்டி மகிழ் விக்கின்றார்!

சிவப்பிரகாச சுவாமிகள் 'திருமுதுகுன்றம்' எனப் பெயரிய விருத்தாசலத்தில் பலகாலம் வதிந்திருந்தவர். அங்கிருந்த போது அவர் இயற்றிய நூல்கள் பல. அவற்றுள், விருத்தாசலத்தில் உள்ள இறைவியின் திருப்பெயரால் இயற்றிய பெரியநாயகியம்மை கட்டளைக் கலித்துறை என்னும் நூலும் ஒன்று. அந் நூலின்கண், இறைவியின் பெருமையினைச் சுவாமிகள் பின்வருமாறு துதிக் கின்றார்:

"பெண்கள் அறிவன அறிதற்குரியரல்லர் என்னும் கருத்தால் 'அறிவறிந்த மக்கள்' என்னும் திருக்குறளின் தொடர் பெண்ணொழித்து ஆண்களை மட்டுமே யுணர்த்தி நின்றது எனச் சிலர் கூறுவர். பெண் குழந்தைகளைப் பெறுதலினும் ஆண் குழந்தைகளைப் பெறுதலே நலம் பயப்பதாகும் என எண்ணிக்கொண்டு, 'நீவிர் ஆண் குழந்தைகளையே மிகவும் பெறுக' என்று ஒருசில பெரியோர்கள் மணமக்களுக்கு வாழ்த்துரைப்பர். பெண் குழந்தைப் பேற்றை இழிவென மதிக்கும் இத்தகையவர்கள் நாணமுறும்படி, மலையரசன் நின்னை மகளாகப் பெருந்தவஞ் செய்து பெற்று, எய்துதற்கரிய சிறப்பை யெல்லாம் இனிதடைந்துய்ந்தான்" எனச் சிவப்பிரகாசர் குறிப்பிடுகின்றார். இங்ஙனம் பெரியநாயகியம்மையின் பெருமையைப் புகழ்ந்து பரவும் கருத்தமையச் சிவப்பிரகாசர்,

> "கற்றோர் அறிகுவர் மக்கள்தம் பேறெனக்
> கட்டுரைத்த
> சொற்றான் ஒருபெண் ணொழித்தது
> என்பாரொடு, தொல்லுலகில்
> நற்றாண் மகப்பெறு கென்றாசி சொல்பவர்
> நாண, உனைப்
> பெற்றான் மலையரையன்; குன்றை வாழும்
> பெரியம்மையே"

என்னும் அழகிய பாடலைப் பாடித் துதித்து மகிழ்கின்றார்! இச்சிறந்த பாடலாற் சிவப்பிரகாச சுவாமிகள் போன்ற புகழ்மிக்க பெருங்கவிஞர்கள் எல்லோரும்கூட, ஆசிரியர் பரிமேலழகர் இயற்றிய திருக்குறள் உரையினை எத்துணையளவு நுணுகிக் கற்றுணர்ந்து, செவ்விய புலமைநலம் அமையப் பெற்றிருந்தனர், என்பது போன்ற பல உண்மைகளை நாம் அறிந்து கொள்ளலாம்.

—ஆசிரியர்.

மதிப்புரை

1. தென்னாட்டுத் திருக்கோயிற் கல்வெட்டுக்கள் :

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் வித்துவான் தேர்விற்குப் பாடமாக வைக்கப் பெற்றுவரும் 30 கல்வெட்டுக்களுக்குத் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பொறுப்பு முதல்வரும், 'திருமுறைச் செம்மல்' என்னும் சிறப்பியற் பெற்றவரும், கலைபயில் தெளிவுடன் கட்டுரை வன்மையும் மிக்க பேராசிரியரும் ஆகிய வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள், மாணவர்களுக்குப் பயன் படும் பொருட்டு எழுதியுள்ள சிறந்த விளக்கவுரை நூல். இதன்கண் கல்வெட்டுக்களின் மூலபாடம், அதனை வழங்கிய அரசன், அதன் காலம், வரலாற்றுக் குறிப்புக்கள், அறியப்படும் செய்திகள், அருஞ் சொற்குப் பொருள்கள் முதலியன நன்கினிது தரப்பெற்றுள்ளன. செம்மையுறப் பதிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் பதிப்பு, மாணவர்கட்கே யன்றி மற்றவர்க்கும் பெரிதும் பயன்படும் சிறந்த நூல். விலை: ரூபா 4-50. கிடைக்கும் இடம்: தருமையாதீனக் கல்லூரி, மாயூரம்.

2. கவீசுரர் கண்ட கனவு :

பட்டுக்கோட்டை ஆவணம் கவீசுரர் திரு. மு. வேலாயுதனூர் அவர்கள், தாம்கண்ட திரு வருட் கனவு பற்றி இயற்றியுள்ள கவிதை நூல் இது. கவிதைகள் இனியனவாய்த் தெளிவு மிக்குத் திகழ்கின்றன. ஆசிரியர் தில்லைச் சிற்றம்பலக் கூத்தப்பிரான் பாற் கொண்டுள்ள பக்தியுணர்வு மிகவும் பாராட்டுதற்குரியது. திரு. அகிலன் முதலிய அறிஞர்கள் பலர் முன்னுரையும் சாத்துக்கவிகளும் வழங்கியுள்ளனர். ஆசிரியரின் கவிதைத்தொண்டு போற்றத்தக்கது. விலை: ரூபா 1-50. கிடைக்குமிடம்: கவீசுரர் பதிப்பகம், ஆவணம் அஞ்சல், பட்டுக்கோட்டை, தமிழ்நாடு.

செய்திச் சுருக்கம்

நமது தமிழகக் கோயில்களில் தனிச் சிறப்புற்று விளங்குவது, பழநி ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி கோயில். இதன் ஆண்டு வருவாய் சுமார் 20 லட்சம் ஆகும். இக்கோயிலின் உதவியில், ஒரு கீழ்த்திசைப் பண்பாட்டுக் கல்லூரியும், ஒரு கலைக் கல்லூரியும் ஆகிய இரண்டு முதல்தரக் கல்லூரிகள், சிறந்த முறையில் நடைபெறுகின்றன.

மேலும் திக்கற்றோர் இல்லம், ஏழையர் இல்லம், நாதசுரம் தவில் கல்லூரி, ஆகமபாடசாலை, தேவார பாடசாலை, சித்த மருத்துவ விடுதி, கூட்டுறவுப் பண்டகம், பசுமடம் முதலியவைகளும் கோயிலின் ஆதரவில் நடத்தப்பெறுகின்றன. மொத்தம் 134 அறைகள் கொண்டனவும், நல்ல சிற்றுண்டி விடுதிகள் இணைக்கப் பெற்றனவும் ஆகிய இரண்டு சத்திரங்கள், யாத்திரையாக வரும் பக்தர்களின் வசதி கருதி, அமைக்கப் பெற்றிருக்கின்றன.

இங்ஙனம் பழநி தேவஸ்தானம் புரிந்துவரும் பல நல்ல பணிகளுள் ஒன்றாக, நமது தமிழக முதலமைச்சர் அவர்கள் முதன் முதலிற் கருத்துத் தெரிவித்து ஊக்கம் கொடுத்தபடி, நமது அற நிலைய ஆணையர் திரு M. S. சாரங்கபாணி முதலியார், பி.ஏ. பி.எல். அவர்களின் ஆதரவுடன், மின் னாற்றற் குழுவின் தலைவர் பத்மஸ்ரீ திரு. வி. பி. அப்பாதுரை அவர்களின் பெருமுயற்சியும் துணை யும் கொண்டு, ரூபா 4 லட்சம் செலவில், பிணியாளர் வயது முதிர்ந்தோர் இளங் குழந்தைகள் முதலிய பலரும் எளிதில் துன்பமின்றி மலைமீது ஏறிப் பழநியாண்டவரைத் தரிசித்து மகிழும் பொருட்டு, அண்மையில் "மின் இயங்கு தொட்டில்" (Haulage Winch) அமைப்பும் நிறுவப் பெற்று, இயங்கத் தொடங்கியுள்ளது. இதற்குப் பொள்ளாச்சி திரு. N. மகாலிங்கம் M.L.A., அவர்கள் இரண்டு தொடர் வண்டிகளை (Trucks) நன்கொடையாகச் செய்து கொடுத்திருக்கின்றார்கள். தமிழகத்தில், கோயிலில், முதன் முதலில் இங்ஙனம் ஒரு சிறந்த வசதியினைச் செய்து அமைத்துக் கொடுப்பதில், ஷ கோயிலின் நிர்வாக அதிகாரியாக விளங்கும் திரு. கே. கே. மேனன், பி.ஏ. பி.எல். அவர்கள் எடுத்துக்கொண்ட ஊக்கமும் உழைப்பும் போற்றுதற்குரியன.

—ஆசிரியர்.